குண்டூசி

மார்ச் . . . . எட்டு அணா

57



ஏப்ரல் 9உ
வெளிவரும்
பக்ஷிராஜாவின்

பவளக்கொடி

Directed by SRIRAMULU NAIDU

NARAYANAN Co *Release*

விரைவில் வெளிவரும்

தமிழ் நாட்டின் எல்லா முக்ய நகரங்களிலும் எதிர்பாருங்கள்.
வைநதேயனின்
விநோதினி
N. கிருஷ்ணமூர்த்தி · தனலக்ஷ்மி
கொளத்துமணி · V.S. மணி.
T.V. சேதுராமன் · சத்யபாமா.
லலிதா & பத்மினி.
நடித்தது
டைரக்ஷன் :-
R.B. ஆர்யா &
S.R.K. அய்யங்கார்
ஒளிப்பதிவு:
B.D. மாதுர்.
Durga
விவரங்களுக்கு: G.S. குப்புசாமி ஷெட்டி. மக்காஜி சோக், மைசூர்.

வருகிறார்கள்! வருகிறார்கள்!
தம்பதிகள்
வருகிறார்கள்
விஜயாவின்
கல்யாணம் பண்ணிப்பார்
தமிழ்
டைரக்ஷன்....பிரஸாத் · தயாரிப்பு....நாகிரெட்டி சக்ரபாணி

பிரிய சகோதரிகளே!

13433

நான் ஒரு நர்ஸ் அல்ல. டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஒரு குடித்தனப்பெண், எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப்பின் துர்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) ஆகிய வியாதியும் எனக்கு ஏற்பட்டுவிட்டன. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொர்ப்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளிவருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக்கொண்டே வந்தது. முகம் வெளுத்துவிட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறு கிறுப்பு இருந்து வந்தது; இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டுவிட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒருநாள் ஒரு சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சைபோட வெளியில் வந்ததும், அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சுபோன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு, ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2-14-0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு]. தபால் செலவு தனி,

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையாலேயே மருந்து தயாரித்து, வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத் தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதவேண்டாம்.

BIBI CHARAN PIARI

SANT NAGAR :: (G. M.) JULLUNDUR CITY.

மார்ச் 14உ முதல்
தென்னாட்டில் பல முக்கிய இடங்களில்
புரட்சி வீரன்
அல்லது வீர பாஸ்கர் தமிழ்
காதலும் வீரமும் நிறைந்த வசீகரமான கதை
மதுபாலா, பிரேம்நாத் முதலியோர் நடித்தது
தயாரிப்பு பக்ஷிராஜா ஸ்டூடியோஸ் கோயமுத்தூர்

ரூ. 1000 ரொக்க இனாம்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்

எல்லாவிதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி, இந்த மாய ஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர்

ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் தக்ஷணமே வசியமாகி விடுவார். அன்னவர் எவ்வளவு கல்லைப் போன்ற மனம் உடையவராய் இருந்தாலும், ஏழு சமுத்திரங்களுக்கு அப்பால் இருந்தாலும், எல்லாத் தடைகளையும் கடந்து வந்து உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனால் மலட்டு ஸ்திரீக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடு பேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும், லாட்டரி, ஆட்டப்பந்தயம், சூதாட்டம், வழக்கு இவற்றில் ஜெயம் உண்டாகி வெற்றி பெறுவீர்கள், பரீக்ஷையில் தேறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் உண்டாகும். அஷ்ட கிரகம் சாந்தம் அடையும். தரித்திரம் விலகும். நல்லதிர்ஷ்டம் உண்டாகும். ஜீவிய காலம் சுகமாகவும் சந்தோஷமாகவும் கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3-0-0. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3-15-0. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும், இம் மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படிப் பலன் இல்லையென்றால் இரட்டிப்பு சார்ஜ் வாபஸுக்கு காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம்! ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

விவரங்களுக்கு எழுதவும்:

Principal,

The Bengal Mesmerism House (G.M.)

JULLUNDUR CITY.

உறுதிக்கும் நாகரீகத்திற்கும்

மைசூர் ஸில்க்ஸ்

ஜார்ஜெட்கள், கிரேப்கள், புடவைகள், கவர்ச்சி யான டிஸைன்கள்! நூதனமான வர்ணங்கள்!

கவர்ன்மெண்டு ஸில்க் வீவிங் பாக்டரி,

மைசூர்.

காந்தி ஜோஸியர்

உங்கள் ஜாதக நகல், அல்லது ஜனனகால விவரம், அல்லது கடிதம் எழுதும் நேரம், வயது, தொழில், தெரிவிக்கவேண்டும். ஒருவருட மாதவாரி பலன் எழுத ரூ. 5. வாராந்திரமாக ரூ. 15. எதிர்கால சம்பந்தமான 5 கேள்விகளுக்கு பதில் ரூ. 2. வி. பி. செலவு அணா 8.

ஹனுமான் கவசம்

1. ஏவல், பில்லி, சூனியம், திருஷ்டி, முதலிய சகல தோஷமும் நீங்கி மன நிம்மதி தருவது. ரூ. 10—0—0
2. நியாயமான கோரிக்கைகள், கிரஹசார தோஷத்தால் கெட்டுப் போவ தாக இருந்தால் பிரத்யேக ஹனுமான் கவசம் தோஷம் நீங்கி காரியசித்தி தருவது. ரூ. 60—0—0
3. வீண் வழக்கு, வியாபாரப் போட்டி, பிரமோஷனில் தடை, அவசிய மற்ற விரோதங்கள், கடுமையான கிரஹசார தோஷத்தை நிவர்த்தி செய்து, காரியசித்திபெற உதவும் ஹனுமான் கவசம். ரூ. 160—0—0

வி. பி. செலவு 0—12—0. நியாயமான கோரிக்கைகள் மட்டுமே கவனிக்கப்படும்.

ஹனுமத் உபாஸி வி. கே. சடகோபாச்சாரியார்,

ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி, தென் இந்தியா.

ஒரு இளைஞன் மரணத்தினின்றும் காப்பாற்றப்பட்ட வினோதம்!

ஒரு உண்மையான வாக்குமூலம்.

பிரிய வாசகர்களே!

நான் ஒரு முனிவரோ அல்லது டாக்டரோ அல்ல. நான் ஒரு சாதாரண மனிதன். என்னுடைய துர் நடத்தை காரணமாக கெட்டலைந்தவன். நான் அத்துமீறி சிற்றின்ப சாகரத்தில் இறங்கிய காரணத்தால் சொற்ப காலத்திற்குள் இரவு நேரங்களில் இந்திரியக் கழிவுகள் ஏற்பட்டு, வீரியம் குறைந்து வெறும் ஆள் ஆகிவிட்டேன். நாளுக்கு நாள் பலம் குறைந்தது. இருதயத்தின் துடிப்பு அதிகமாயிற்று. தொடர்ந்து மயக்கம் வர ஆரம்பித்தது. மரண வேதனைப்பட்டேன். நான் இப்படி இருப்பதன் காரணங்களை நண்பர்கள் கேட்பார்கள். நானாகவே வலிய தேடிக்கொண்ட இந்த கேட்டைப்பற்றி நான் எப்படி அவர்களிடம் சொல்வேன். "குணப்படுத்தி விடுவோம்" என்று தம்பட்டமடித்த ஆயிரக்கணக்கான டாக்டர்களையும் ஹக்கீம்களையும் ரகசியமாகக் கலந்து ஆலோசித்தேன். அவர்கள் கொடுத்த மருந்துகளையும், அமிர்தங்களையும் ஒன்று விடாமல் சாப்பிட்டேன். ஆனால் பலன் ஒன்றுமில்லை. உயிருடன் இந்த நரக வேதனைப் படுவதைவிட உயிரை விடுவதே மேல் என்ற முடிவுக்கு வந்தேன்.

அதிர்ஷ்டவசமாக நான் காஷ்மீர் செல்ல நேர்ந்தது. ஒரு மஹாத்மாவை (பக்கிர்) சந்தித்தேன். என்னைக் கண்ட உடனே அவர் கேட்ட முதல் கேள்வி, நான் ஏன் இப்படி துக்கமே உருவெடுத்து வந்த மாதிரி இருக்கிறேன் என்பதுதான். அவரிடம் எல்லாவற்றையும் சொன்னேன். தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்திருப்பதையும் சொல்லிவிட்டேன். மஹாத்மாவின் மனதில் இரக்கம் பிறந்தது. உள்ளுக்கு சாப்பிடுவதற்கு ஒன்றும், மேலே பூசிக்கொள்வதற்கு ஒன்றும் ஆக இரண்டு மருந்துகள் செய்யும் விதங்களை விவரித்தார். தேவையான சகல மூலிகைகளையும் சேகரித்து அவர் முன்னிலையில் மருந்துகளைச் செய்தேன். உடனே மருந்துகளைப் போடவும், சாப்பிடவும் ஆரம்பித்தேன்.

மருந்துகளை உட்கொள்ள ஆரம்பித்த முதல் தினத்தன்றே மறுமலர்ச்சியின் உதயத்தைக் கண்டேன். கடவுள் மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன். இன்று என் மீறிய வீரிய சக்தியைக் கண்டு நான் பெருமிதம் அடைகிறேன். சில வேளை மருந்து சாப்பிட்டவுடனே என் சிற்றின்ப வேட்கை அடக்க முடியவில்லை. எனினும் மஹாத்மாவின் கட்டளைக்கிணங்க 25 நாட்கள் வெகு கட்டுதிட்டத்துடன் மருந்து சாப்பிட்டு வந்தேன். தினம் 3 முதல் 4 சேர் பால் ஜீரணிக்க முடிந்தது. என் கண்களில் புது ஒளி பிறந்தது. கன்னங்களில் ஜீவ ஒளி தவழ்ந்தது. இழந்த சக்தியும் பலமும் உடலுக்கு வந்தன. நான் ஊர் திரும்பியதும், மீதமிருந்த மருந்தை கைவிடப்பட்ட சில கேஸ்களுக்குக் கொடுத்தேன். முன் ஜாக்கிரதையுள்ள என் நண்பர்களின் யோசனைக்கிணங்கவும், பொதுஜனங்களின் நலனை உத்தேசித்தும் இதைப்பற்றி நான் விளம்பரம் செய்தேன். பயங்கரமான இந்த வியாதியால் வீரியத்தை இழந்த என் நண்பர்களுக்காகவே இந்த விளம்பரம் செய்கிறேன்.

காஷ்மீர் மறுமலர்ச்சி மாத்திரை 15 நாட்களுக்கு	ரூ. 2—8—0
பூசுவதற்கு எண்ணை	ரூ. 2—8—0

மாத்திரைகளில் விஷக்கலப்பு இல்லை. ஆகையால் சிறியோர் பெரியோர் யாவரும் வயது வித்தியாசமின்றி எந்தக் காலத்திலும் உபயோகிக்கலாம். எண்ணை பூசினால் கொப்புளங்கள் உண்டாகாது. கடைசியாக நான் சொல்வது என்னவென்றால் இதனால் லாபம் அடையவோ, அல்லது என் சுய நலனுக்காகவோ, நான் விளம்பரம் செய்யவில்லை. பொதுஜனங்களின் நலன் ஒன்றுதான் குறிக்கோள். அயல் தேசத்தவர் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும். இந்த மருந்தால் குணமில்லை என்று சத்தியம் செய்தால் போதும். முழுப் பணத்தையும் வாபஸ் செய்கிறேன்.

Prof. B. S. Sidhu, (G. M.) Halka No. 6, Jullundur City. Pb.

1952ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1952ற்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன் கூட்டி அறிய விரும்பினால்,ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூர தேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினாலும் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப் படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1—4—0 (வி. பி மூலம் அனுப்பப் படும்). தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப் படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களிலிருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒரு முறை பரிக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Shree Swami Satyanarain Jyotish Ashram (G.M.)

NAKODAR, (PB.)

காம சாஸ்திரம்

★

உலகத்தில் மிக்க அத்தியாவசியமான ஆண்-பெண் சேர்க்கையைப் பற்றிய 84 ஆசனங்களை உடைய, ரகசியக் குறிப்புகளுடன் கூடிய மிகவும் உயர்ந்த புத்தகம். 84 ஆசனங்களின் 200 வகை நிஜ போட்டோப் படங்கள்; தனித்தும், சேர்ந்தும் பல்வகை முறையில் போகம் துய்ப்பதுமானவை. இப்புத்தகம் நீங்கள் இதுவரை அறிந்திராத பல ரகசியங்களையெல்லாம் வெளிப்படுத்துகிறது. கல்யாணம் ஆகாதவர்கள் இப் புத்தகத்திற்கு எழுதற்க. 1 புத்தகம் விலை ரூ. 2-12-0. ரகசிய போட்டோ பலவகை தோற்றத்தில் கிடைக்கும். 25 கார்டுகள் தனித்திருப்பது ரூ. 2-12-0. 50 கார்டுகள் சேர்ந்திருப்பது விலை ரூ. 5-0-0. ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

விலாசம் :

M/S FRENCH PHOTO SUPPLY COMPANY (G. M.),

JULLUNDUR CITY.

வினாயகர்

V. ARUMUGA CHETTY

சுருட்டுகள்

ஷெல்

பிராண்டு

TRADE MARK REGISTERED

PROPRIETOR V. ARUMUGA CHETTY

மணிலா

சுருட்டுகள்

V. ஆறுமுக செட்டி

18, அண்ணா பிள்ளை தெரு, சென்னை.

N.B. பொடிக்கு உயர்ந்த பந்தர் புகையிலைகளும் எம்மிடம் கிடைக்கும்.

குண்டூசி

மார்ச், 1952.

இந்த ஊசியில்

தியேட்டர்களும், பொது ஜனங்களும் (தலையங்கம்) ...	5
சிங்கப்பிரான் சிரித்தார்	6
பரஸ்பரம்	8
''ராணி''யில் பானுமதி (வர்ணப் படம்) ...	9
எஸ். ஏ. நடராஜன் (ஆர்ட் படம்) ...	10
எஸ். ஏ. நடராஜன் (வாழ்க்கை வர்ணனை) ...	11
நுனிப்புல்—"வெட்டுக்கிளி" ...	16
''அமர கவி'' (பட விமர்சனம்) ...	22
இத்தாலிய சினிமா	23
ஜூபிடர் ராணி (படக் காட்சிகள்) ...	24
குண்டூசியைக் கேளுங்கள் ...	28
தாய் உள்ளம் (பட விமர்சனம்) ...	34
பொதுஜனம் பேசுகிறார்	37
செய்திப் படங்கள்	43
இது செய்தி	47
சின்ன துரை (படக் காட்சிகள்) ...	50
புஸ்தகப் பொழுது	53
குடும்ப நக்ஷத்திரம் (சிறு கதை) ...	56
சகுந்தலா (ஆர்ட் படம்) ...	59
மாதுரி தேவி (ஆர்ட் படம்) ...	60
திரையில் ஒரிஸா ஆலயம் ...	66
பிரம்மலோகம்	68
குண்டூசி டைரி	72

வருஷ சந்தா:

இந்தியா, இலங்கை ... ... ரூ. 6

வெளிநாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி:

இந்தியா: 8 அணா. வெளிநாடு 12 அணா

இலங்கை: 50 சதம்.

குறிப்பு:—''குண்டூசி''யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை நிஜ நபர் யாரையும் குறிப்பிடுபவை அல்ல.

குண்டூசி

பட்டை 5
ஊசி – 6
பிரதி – 54

மார்ச்
1952

ஆசிரியர்: பி. ஆர். எஸ். கோபால்

நிறைந்த விஷயங்களுள்ள மாத சினிமாப் பத்திரிகை

தியேட்டர்களும், பொதுஜனமும்

சினிமாத் தியேட்டர்களில் டிக்கெட்டுகள் கள்ளத்தனமாய் விற்கப்படுவதைப் பற்றியும், இக் கொடிய வழக்கத்தை உடனே ஒழிக்க அதிகாரிகள் தீவிர நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டு மென்றும், தியேட்டர் காரர்கள் அதிகாரிகளுடன் மனப்பூர்வமாய் ஒத்துழைக்க வேண்டு மென்றும், சென்ற வருஷ ஆகஸ்ட் மாத ஊசியில் எழுதியிருக்கிறேன். ஆனால், நிலைமையில் இன்றுவரை ஒருவிதமான அபிவிருத்தியும் இல்லை. அதற்குப் பதில் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருவதாகவே தோன்றுகிறது.

திருவல்லிக்கேணியைச் சேர்ந்த ஸ்ரீ. வெ. சேதுராமன் என்ற அன்பர் சில தினங்களுக்கு முன் எமக்கு ஒரு கடிதத்தை எழுதியிருக்கிறார். அதன் சாராம்சத்தைக் கீழே படியுங்கள்:

"ராஜகுமாரி தியேட்டரில் 242 பேர்களுக்கு பனிரண்டணா இடம் உள்ளதாம். ஆனால், 20-1-52-ந் தேதியன்று 6-30 காட்சிக்காக நாலு மணியிலிருந்து க்யூவில் நின்று கொண்டிருந்த ஐம்பதாவது நபருக்குக் கூட டிக்கெட் கிடைக்கவில்லை. க்யூவில் நிற்காத பலருக்கு டிக்கெட் கொடுக்கப்பட்டது. இந்த நபர்கள் 12 அணா டிக்கெட்டை ரூ. 1-8-0க்கு விற்றார்கள். இப்படி விற்ற ஒருவரை போலீஸாரிடமும் காட்டினோம். பிறகு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று, புகார் தாக்கல் செய்து, அதில் 59 பேர்கள் கையெழுத்துப் போட்டுவிட்டு வந்திருக்கிறோம்."

இக் கடிதத்தில் கூறப் பட்டிருக்கும் விஷயங்கள் உண்மைதானா இல்லையா என்பதுபற்றி இப்பொழுது நாம் எவ்வித அபிப்பிராயத்தையும் கூறுவதற்கில்லை. ஆனால், உண்மையாக இப்படி நடந்திருந்தால் அது மிக வருந்தத் தக்க விஷயந்தான்.

ஒரு விஷயம் மட்டும் நாம் உறுதியாகக் கூறமுடியும். பொதுவாக, சினிமாத் தியேட்டர்களில் டிக்கெட்டுகள் கள்ளத்தனமாய் விற்கப்பட்டு வருவதென்னவோ மறுக்க முடியாத விஷயமாகும். அது எப்படி சாத்தியமாகிறது, அதைத் தடுக்க என்ன செய்யவேண்டும் என்பது பற்றி அதிகாரிகளும், தியேட்டர்காரர்களும் கூடிப் பேசி, கண்டிப்பான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். கள்ளத்தனமாய் டிக்கெட் விற்கப்படுவதை ஒழிக்க சர்க்கார் கடுமையான சட்டம் இயற்ற வேண்டும். அதிகாரிகளின் நடவடிக்கைகளின் மூலம் மட்டுமே இத்தீய வழக்கம் ஒழிந்துவிடாது. தியேட்டர்காரர்களும் அதிகாரிகளுடன் மனப்பூர்வமாய் ஒத்துழைத்தால் தான் இத்தீமை ஒழியும்.

தியேட்டரும், அதில் காட்சி நடத்தி அடையும் லாபமும், நஷ்டமும் அதன் சொந்தக் காரரைச் சேர்ந்தவைதான். ஆனால் தியேட்டர்கள் அந்தந்த ஊர் மக்களின் பொழுது போக்கிற்காகவும், பொது நன்மைக்காகவுமே நடத்தப்படுவதால், தியேட்டர்களை ஒழுங்கினமாகவும், பொதுமக்கள் அதிருப்தியடையும் படியும் நடத்தக்கூடிய 'உரிமை' தியேட்

டர்காரர்களுக்குக் கிடையாது. "இது என் தியேட்டர்; என் இஷ்டம்போல் செய்வேன்" — என்று மமதையுடன் நடந்து கொள்ளும் தியேட்டர்காரர் அதன் தீய பலன்களை அநுபவித்தே ஆகவேண்டியிருக்கும். பொது மக்களைத் தங்கள் உண்மை எஜமானர்களாகக் கருதி, அவர்கள் சந்தோஷம் அடையும்படிச் செய்ய எந்தத் தியேட்டர் காரராவது தவறினால், அந்த நபரின் லைசென்ஸை ரத்து செய்து, அந்த உரிமையை வேறு ஒருவருக்கு அளிக்கும்படி சர்க்காரிடம் கேட்பதற்கு பொது ஜனங்களுக்குப் பூரண உரிமை உண்டு. இவ் விஷயத்தை ஒவ்வொரு தியேட்டர்காரரும் மனதில் பதிய வைத்துக் கொண்டு நடக்கவேண்டும். தியேட்டர்காரர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யத் தவறினால், கிளர்ச்சி செய்து, அவர்களைச் சரியான வழிக்குக் கொண்டு வந்து வைக்க வேண்டியது பொது மக்களின் கடமையே ஆகும்.

பரஸ்பரம்

"என்ன, ஸார்! சொன்ன தேதி தவறாத 'குண்டூசி'யே தவறி விட்டதே!" என்று ஆச்சரியத்துடன் ஒரு அன்பர் என்னிடம் கேட்டார். அவர் கேட்டது "குண்டூசி" காலண்டர் பற்றி.

முதன் முறையாக நாம் குறித்த காலம் தவறி விட்டதற்கு மிகவும் வருந்துகிறோம். இதற்கு உண்மைக் காரணம் எங்களுடைய தவறுகூட இல்லை. நேயர்களுக்கு புது மாதிரியில் ஒரு அற்புதமான காலண்டரைக் கொடுக்க வேண்டுமென விரும்பியது தவறாகுமா? அல்லது, வழக்கமான ஆறு படங்களுக்குப் பதில் 12 படங்கள் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தது தான் தவறாகுமா? ஆனால்.... எதிர்பாராத சில இடையூறுகள் குறுக்கிட்டு விட்டன.

• • •

"உங்களில் சிலருக்கு ஜனவரி 1ந் தேதி முதல் ஏப்ரல் 1ந் தேதி வரையில் ஒரே ஏமாற்றமாக இருக்கும். அதன் பின் நீங்கள் எதிர் பார்த்ததை விடப் பன்மடங்கு அதிகமான சந்தோஷ மடைவீர்கள். ஒரு ரூபாய்க்கு உங்களுக்கு இரண்டு ரூபாய் மதிப்புள்ள பொருள் (காலண்டர்) கிடைக்கும். முன் ஜாக்கிரதை இல்லாத அநேகருக்கு ஏப்ரல் 1-ந் தேதி முதல் பெரிய ஏமாற்றமாய் இருக்கும். கோபம், பொறாமை, வருத்தம், விரக்தி இவை யெல்லாம் கொழுந்து விட்டெரியும்!"

எப்படி என் ஜோஸ்யம்? நீங்கள் அநேகருடைய ஜோஸ்யக் குறிப்புகளைப் படித்துச் சலித்திருப்பீர்கள். ஆனால், "பரஸ்பரம்" பகுதியில் நீங்கள் பலமுறை என் "ஜோஸ்யத்தை"ப் படித்திருக்கிறீர்கள். ஒரு தடவை கூட அது பொய்யானதே இல்லை அல்லவா?

"ஏப்ரல் 1ந் தேதிக்குப் பிறகு ஏமாற்றம் முதலிய கெட்ட பலன்கள் ஏற்படாம லிருப்பதற்கு இப்பொழுது என்ன பரிகாரம் செய்ய வேண்டும்?" என்று கேட்கிறீர்களா? சொல்கிறேன்; இன்றே உங்கள் ஊர் ஏஜண்டிடம் "குண்டூசி" காலண்டருக்கு ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். இல்லையென்றால், எங்களுக்கு உடனே ரூ. 1-6-0 மணியார்டர் செய்து விடுங்கள். அவ்வளவுதான்.

• • •

நேயர்களுக்கு இன்னொரு நற்செய்தி. "குண்டூசி" ஆரம்பம் முதல் இன்று வரை 68 பக்கங்களுடனேயே வெளி வந்து கொண்டிருந்தது. ஆனால் இந்த ஊசி முதல் மேலும் 8 பக்கங்களை சேர்த்து 76 பக்கங்களுடன் வெளியிடத் தீர்மானித்திருக்கிறோம். அநேகமாக, எல்லாப் பத்திரிகைகளும் பக்கங்களைக் குறைத்துக் கொண்டும், விலையை அதிகரித்துக் கொண்டும் இருக்கையில், நாங்கள் விலையை அதிகரிக்காமல் பக்கங்களை அதிகரிப்பது உங்களில் சிலருக்கு ஆச்சரியமாய் இருக்கும். ஆனால், "இயன்ற அளவு அதிகமாய் கொடுக்க வேண்டும்" என்ற கொள்கையை நாம் ஆரம்ப முதல் கடைப் பிடித்து வருவதை அறிந்த பெரும்பாலான வாசகர்களுக்கு இச் செய்தி சந்தோஷத்தை அளிக்குமே தவிர, ஆச்சரியத்தை அளிக்காது. வாசகர்களின் ஆதரவு அதிகரித்தால் இன்னமும் கூடப் பக்கங்களை அதிகரிக்க நாங்கள் தயாராய் இருக்கிறோம்.

சிங்கப் பிரான் சிரித்தார்

‘பொடி’ நாராயணய்யரின் ‘படே’ கைங்கரியம்

சிங்கப் பிரான் சிரித்தார்! ஆம்; சோளிங்க மலைமீது மஹாலக்ஷ்மி சமேதராய் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ஹன் சிரித்தார்! அதென்ன, ஹிரண்யனை சம்ஹாரம் செய்வதற்கு அவதரித்த போது சிரித்த கோரச் சிரிப்பா? இல்லை. கம்ஸனை வதைக்க வந்த போது சிரித்த ஏளனச் சிரிப்பா? அதுவும் இல்லை. தாம் சிருஷ்டித்த மாய்கைப் பனி வழியே பார்த்துத் தம் இருப்பிடத்தைத் தெரிந்து கொண்ட ஒரு சாதாரண நரன், தம்மை அணுக முயற்சிப்பதைக் கண்டதால் ஏற்பட்ட புளகாங்கிதப் புன்சிரிப்பு அது! பேய் பிசாசுகளின் ஆட்சியினின்றும் பல்லாயிரக் கணக்கான மக்களை தாம் விடுவித்து அருளுவதே போல், தம் (நாராயணன் என்ற) பெயரைச் சூடிக்கொண்ட பரம பக்தனொருவனும் இதே கைங்கரியத்தைச் செய்ய முற்பட்டதனால் ஏற்பட்ட பெருமிதச் சிரிப்பு தான் அது!

ஸ்ரீ. நாராயணய்யர்

பேய் பிசாசுகளை விரட்டுவதில் தேர்ந்த ஏதோ ஒரு சாதாரண மந்திரவாதியைப்பற்றி நான் இங்கு எழுதப் போவதாக நீங்கள் எண்ணிவிட வேண்டாம். உண்மையில், ஸ்ரீ. நாராயணய்யர் இந்த மந்திரவாதிகளையெல்லாம் விடப் பெரிய ‘மஹா மந்திரவாதி’ ஆவார். சாதாரண மந்திரவாதிகள், ஏதோ சிலரை மயக்கி, தாம் சொல்லுவதே போல் நடக்கச் செய்வதில் மட்டுமே தேர்ந்தவர்கள். ஆனால் ஸ்ரீ. நாராயணய்யரோ ஆயிரக் கணக்கானவர்களின் உள்ளங்களைக் கவரும் தம் கைங்கரியத்தில் வெற்றி பெற்றவர். சாதாரண மந்திரவாதிகள் சிற்சில பேர்களிடமிருந்தே பேயோட்டி, பிசாசுகளை விரட்டி, வெற்றி பெறுவர். ஆனால், ஸ்ரீ. ஐயரோ ஆயிரக் கணக்கானவர்களிடமிருந்து “கல்வியின்மை” என்ற மாபெரும் பேயை ஓட்டி விடுவதற்கு முன்வந்திருக்கிறார். பேயோட்டும் வேலையில் போட்டிக்கு வந்து விட்டதற்காக நரர்களான மந்திரவாதிகள் வேண்டுமானால் ஸ்ரீ. ஐயரிடம் அசூயை கொள்ளலாம். ஆனால், சோளிங்க பிரான் இதற்கு மாறாக சந்தோஷம் அடைந்து, ஸ்ரீ. ஐயருக்கு மேலும் மேலும் தம் கிருபா கடாக்ஷத்தை ஏற்படுத்தி வருகிறார்!

ஸ்ரீ. கே. நாராயணய்யர் வடாற்காடு ஜில்லாவைச் சேர்ந்த ‘அறுபது நிறைந்த குமரர்’. ஒரு சாதாரண எளிய குடும்பத்தில் பிறந்தவர். சுமார் முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன் ஒரு ஜவுளிக் கடை ஊழியராய் வாழ்க்கையைத் தொடங்கியவர். பின்னர் அவரும் அவரது நண்பரான ஸ்ரீ. கே. ஆர். முனிரத்தினம் நாயுடு அவர்களும் சேர்ந்து, தற்போது மிகப் பிரபலமாயுள்ள, “பி. வி. ராஜன் பட்டணம் பொடிக் கம்பெனி”யை ஸ்தாபித்தனர். முப்பது வருஷங்களுக்குள் இவர்களது பொடிக்கு நிறையப் புகழ் சேர்ந்தது; பெட்டியிலோ ஏராளமான பணம் சேர்ந்து விட்டது.

இது போல எத்தனையோ பேர்கள் பற்பல வழிகளில் முயன்று, பெருந் தனவந்தர்கள் ஆகியிருக்கின்றனர். ஆனால், அவர்களில் ஒரு சில பேர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் சம்பாதித்த தனத்தைப் பத்திரப் படுத்துவதிலும்

கொண்டப்பாளையத்தில் புதிதாய் கட்டப்பட்டுள்ள ஸ்ரீ மங்களம்மாள் ஆரம்ப பாடசாலைக் கட்டடம்.

மேலும் அதைப் பெருக்குவதிலுமே கவனம் செலுத்துகிறார்கள். பத்திரிகாசிரியர்களுக்கு இது போல எழுதும் சிரமத்தையெல்லாம், பாவம், அவர்கள் வைத்ததேயில்லை!

புகழ்ச்சியையும், தற்புகழ்ச்சியையும் விரும்பாதவர் ஸ்ரீ. நாராயணய்யர். 'வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக் கூடாது' என்ற முதுமொழிப்படி நடப்பவர் அவர். அது மட்டுமல்ல; பிறரிடம் பணம் வசூல் செய்து தர்மம் நடத்தி விட்டு, புகழை மட்டும் தட்டிக் கொண்டு போகும் ரகத்தைச் சேர்ந்தவருமல்ல அவர்.

பி. வி. ராஜன் கம்பெனியின் பொடித் தயாரிப்புச் சாலை உள்ள—அரக்கோணத்தை அடுத்த ஆந்தூரில் 'பிரசன்ன வரதராஜப் பெருமான்' கோயில் கொண்டிருக்கிறார். அந்தப் பெருமாளின் பெயர்தான் 'பி.வி ராஜன்' என்று கம்பெனி பெயராய் குறுகி யிருக்கிறது. மிகச் சிறியதாயிருந்த அந்தப் பழைய கோயிலை ஸ்ரீ. நாராயணய்யர் ஏராளமான பணம் செலவழித்து புதுப்பித்துக் கொடுத்துள்ளார். இன்னும் அவர் எவ்வளவோ தான, தருமங்களையும் செய்திருக்கிறார். சோளிங்கபுரத்தில் ஒரு உயர்தர ஆரம்பப் பாடசாலை,



ஸ்ரீ நாராயணய்யரின் தர்ம பத்னி ஸ்ரீமதி மங்களம்மாள்.

பொன்னையில் ஒரு ஆரம்ப பாடசாலை. சோளிங்க மலை அடிவாரத்திலுள்ள கொண்டப் பாளையத்தில் ஒரு ஆரம்ப பாடசாலை—இப்படியாக மூன்று பள்ளிக்கூடங்களையும், கொண்டப் பாளையத்தில் முதியோர் கல்வி வகுப்பையும், ஒரு இலவச வாசகசாலையையும் நடத்திவருகிறார் என்றால் பாருங்களேன். இப் பள்ளிகளை ஸ்ரீமான்கள் எம். சுந்தரேசய்யரும், எம். சுவாமிநாதய்யரும் திறம்பட நிர்வகித்து வருகிறார்கள்.

'கருப்பு' வர்த்தகத்தின் மூலமோ, குருட்டு அதிர்ஷ்டத்தின் மூலமோ தனம் சேர்த்தவர்கள், தாங்கள் அடிக்கும் கொள்ளையில் ஒரு பகுதியை 'தாராள மனது'டன் தர்மத்திற்கு அளித்து விடுவதுண்டு! ஆனால் ஸ்ரீ. நாராயணய்யர் இது போன்ற திடீர் பணக்காரர் அல்ல. வார்சில்லாத சொத்துமல்ல அவருடையது. சலியாத பல வருஷ உழைப்பின் மூலம் சேர்த்த தனம் அவருடையது. மற்றவர்களைவிட அவருக்குப் பணத்தின் மீது அதிகமான அக்கறையுண்டு. ஏனென்றால், கால் காலணாவாக (பொடி விற்று) சேர்க்கப்பட்ட தனம் அல்லவா அது! இவ்வளவு சிரமப்பட்டுச் சேர்த்த பணத்தை அவர் தர்மத்திற்காக தண்ணீர் பட்ட பாடாய் செலவழித்து வருவது பெரிதும் போற்றத் தக்கது. கொண்டப் பாளையத்தில் ஸ்ரீ. ஐயர் நடத்தி வரும் மங்களம்மாள் பள்ளிக்கூடம் ஏழைப் பிள்ளைகளின் நலனுக்கென இலவசமாகவே நடத்தப்படுகிறது. ஐயரின் தர்ம பத்தினியாய் விளங்கிய, காலஞ் சென்ற ஸ்ரீமதி மங்களம்மாளின் பெயரில் ஸ்தாபிக்கப்பட்டு, இதுநாள் வரையில் ஒரு இரவல் கட்டடத்தில் நடந்து வந்தது. இப் பள்ளிக்கூடத்திற்கென, ஸ்ரீ. ஐயர் சுமார் பத்தாயிர ரூபாய் மதிப்புள்ள ஒரு புதுக் கட்டடத்தைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்.

(தொடர்ச்சி 64-ம் பக்கம்)

பானுமதி

ஜூபிடர் பிக்சர்ஸார் அதி உன்னத முறையில் தயாரித்துவரும் "ராணி" ஹிந்தி, தமிழ்ப் படங்களில் பானுமதி கதாநாயகியாய் நடிக்கிருர்.


எஸ்.எ.
நடராஜன்

முகிய இளம் பெண்களுக்கு கைகள் நிறையக் கண்ணாடி வளையல்களை அடுக்கிவிட்டு, அவர்கள் மலர்ந்த முகத்துடன் அளிக்கும் சில்லறைகளை வாங்கி ஜோபியில் போட்டுக்கொண்டு, சிரமமில்லாமல் காலம் கழிக்கக்கூடிய தம் குலத் தொழிலை மேற்கொள்ளாமல், நடராஜன் தம் பால்ய வயதிலேயே நாடகங்களில் மோஹம் கொண்டு, தாமே வளையல்களை அணிந்து. ஸ்திரீ வேஷங்களேற்று நடித்து, நாடக ரஸிகர்களின் மனங்களைக் கவர்ந்து வந்தது துளியும் எதிர்பாராத விஷயமே !

சொந்த ஊராகிய தாராபுரத்தில் நடராஜனின் தகப்பனார் அப்பாஜி செட்டியாரும், கோவையில் அவரது தமையனார் நாட்டுராயசாமியும் வளையல் வியாபாரம் செய்து வந்தனர். அவர்கள் இருவரும் நடராஜனுக்கு எட்டு வயதாவதற்குள்ளாகவே காலம் ஆகிவிட்டனர். ஆனால், அவர்கள் காலமாவதற்குள்ளாகவே நடராஜன் தம் குல வியாபாரத்தை மேற்கொள்ளாமல், " ஒரு நாடக நடிகராகிவிட வேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டுவிட்டார். கோவை எடிஸன் தியேட்டரில் நடந்துவந்த நவாப் ராஜமாணிக்கத்தின் நாடகங்களை பெற்றோர்களுக்குத் தெரியாமல் பன்முறை பார்த்து வந்ததின் விளைவே இது.

தகப்பனாரும், தமையனாரும் காலமானபின், நடராஜனின் மற்றொரு சகோதரரும், இரு சகோதரிகளும் வாளவாடியில் வசித்து வந்த தங்கள் பெரியம்மாவான அம்முலம்மாவின் வீட்டில் வளர்ந்து வரலாயினர். நடராஜன் உடுமலைப் பேட்டையிலும், மேட்டுப் பாளையத்திலுமாக சில காலம் வசித்து வந்தார். இப்படியாக அங்குமிங்குமாய் நடராஜன் ஆறாவது வகுப்புவரையில் கல்வி பயின்றார். அதன் பிறகு அவருக்கு படிப்பில் அக்கறை அடியோடு குறைந்து விட்டது. நாடக எண்ணம் ஸ்திரப்பட்டு விட்டது. ஆனால் இந்தத் தீர்மானத்திற்கு தமையனிடமோ

குண்டூசி



கைதி

பெரிய தாயாரிடமோ அங்கீகாரம் கிடைக்கவில்லை. எனவே, அவர்களுக்குத் தெரியாமலே அவர் வீட்டை விட்டு நழுவி, (1933-ல்) கோவையில் நவாப் ராஜமாணிக்கத்தின் கம்பெனியில் சேர்ந்தார். அப்பொழுது அவருக்கு வயது பதினான்கு.

நாடகத்தில் சேர்ந்தவுடன் நடராஜனுக்கு முதலில் சில்லறை வேஷங்களே கொடுக்கப்பட்டன. அளிக்கப்பட்ட வேஷங்கள் மூலம் நல்ல பெயர் சம்பாதித்துக் கொண்டு வந்தார் அவர். ஐந்தாறு ஊர்களில் நாடகம் நடத்திவிட்டு கம்பெனி பங்காளருக்குச் செல்வ நந்தனாக அவர் மெயின் ஸ்திரீ பார்ட்டாகி விட்டார். பெண் வேஷம் அந்தக் காலத்தில் அவருக்குக் கச்சிதமாகப் பொருந்தியிருந்ததால் இந்த வேஷம் பல வருஷங்களுக்கு அவரை கெட்டியாய்ப் பற்றிக் கொண்டுவிட்டது.

ராஜமாணிக்கம் கம்பெனி கும்பகோணத்திலிருந்து திருச்சிக்குப் போனபோது நடராஜனுக்கு சினிமாவில் சேரவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. நவாப் கம்பெனியிலிருந்து விடுதலை பெறுவதற்கு அவர் கையாண்ட தந்திரம் நூதனமானது.

நவாப்பின் பூஜா பாத்திரங்களைக் கழுவுவதை பையன்களில் பிரதம நடிகனாய் இருப்பவன் செய்து வருவது வழக்கம். இந்த மாமூல் அந்த சமயம் நடராஜனிடம் இருந்துவந்தது.

மர்மயோகி

மர்மயோகி

...ந்திரிகுமாரி

கன்னியின் காதலி

நடராஜன் திடீரென ஒரு நாள் "பூஜா பாத்திரங்களைக் கழுவ முடியாது" என்று கண்டிப்பாய் கூறிவிட்டார். நவாப் எவ்வளவோ புத்திமதிகளைச் சொல்லிப் பார்த்தார். ஒன்றும் பயனில்லை. முடிவில் நடராஜன் நவாப் கம்பெனியிலிருந்து விடுபட்டார். அவர் இதற்காக வருந்தவில்லை. விலக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தானே அவர் இந்தத் தந்திரத்தைக் கையாண்டார்!

சுமார் ஏழு வருஷ காலம் சுகமாகக் காலந் தள்ளிவிட்டு, 'நவாப்' கம்பெனியை விட்டு விலகிய நடராஜன் "கம்பெனியை விட்டு விலகியது சுத்த பைத்தியக் காரத்தனம்" என்று எண்ணும் அளவுக்கு அவரது தொழிலில் பல சங்கடங்கள் ஏற்பட்டன. டி. கே. சம்பங்கியும், பி. வி. எதிராஜுலும் சேர்ந்து ஆரம்பித்திருந்த மங்கள பாலகான சபையில் நடராஜன் சேர்ந்தார். இக்கம்பெனி திட்டப்படி நாடகங்களைத் துவக்கவும் இல்லை. நடராஜனுக்கு பேசியபடி சம்பளமும் கிடைக்கவில்லை. சில மாதங்கள் பல கஷ்டங்களை அனுபவித்து விட்டு, எஸ். டி. சுந்தரத்தின் தமையனார் எஸ். டி. உலகு ஆரம்பித்த சேலம் ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் சேர்ந்தார் நடராஜன். ஆனால் முந்திய கம்பெனி மாதிரியே இக் கம்பெனியும் 'சிசு மரண'மாகவே முடிந்தது. பின்னர் நடராஜன் சேலம் கஜலக்ஷ்மி பாலகான சபாவில் சேர்ந்தார். ஆனால், அவரது கஷ்டங்கள் அவரை விடாது தொடர்ந்து வந்தன. கம்பெனியின் பெயரில் லக்ஷ்மி இருந்ததே தவிர கம்பெனியில் என்னவோ தரித்திரமே தாண்டவமாடியது. பட்டினி தாங்க முடியாமல் நடராஜன் தம் மோதிரத்தையும் கடுக்கனையும் விற்க வேண்டியதாயிற்று. இப்படியாக, நட-

பிறகு இரண்டாவது படத்தின் மூலமே நக்ஷத்திரம் ஆகிவிடக் கூடும் என்ற இன்பக் கனவுடன் ஒப்புக்கொண்டார் நடராஜன்.

"சதி சுகன்யா"வில் நடராஜன் பல வேஷங்களில் தோன்றியிருக்கிறார். இருந்த போதிலும், அவரது கனவுப்படி அவர் ஒரு நக்ஷத்திரம் ஆகிவிடவில்லை. படம் முடிந்ததும் சோற்றுக்குத் தாளம் போட வேண்டிய நிலைமை மீண்டும் ஏற்பட்டது. மீண்டும் அவர் டி. கே. சம்பங்கியின் நாடகக் கம்பெனியில் சில மாதங்கள் தங்கிவிட்டு, மிகுந்த மன வேதனையுடன் தம் சொந்த ஊருக்கே திரும்பிவிட்டார். அதன் பிறகு அவர் அடிக்கடி ஸ்பெஷல் நாடகங்களில் நடிக்க மூற்பட்டார். சொந்தத்திலேயே ஒரு நாடகக் கம்பெனியையும் ஆரம்பித்து, அதைக் கொச்சிக்கு அழைத்துச் சென்றார். அதன் மூலம் அவர் கண்ட பலன் படு நஷ்டமே. ஊர் திரும்புவதற்குக்கூட

ராஜன் இரண்டு வருஷ காலம் கடின வாழ்க்கை நடத்திவிட்டு, முடிவில் "நாடக மேடை நமக்குகந்ததல்ல"— என்று தீர்மானித்துக் கொண்டு, சினிமாவில் ஈடுபடுவதற்கான முயற்சிகளில் தீவிரமாய்க் கவனம் செலுத்தினர். நல்ல வேளையாய், அந்த பாக்கியம் அவருக்குச் சீக்கிரமே ஏற்பட்டு விட்டது. அவரது நண்பர்களில் ஒருவர் அவரை சேலம் மீனாக்ஷி பில்ம் கம்பெனிக்கு அழைத்துச் சென்று, அவர்களது "சதி சுகன்யா" படத்திற்கு ஒப்பந்தம் செய்துகொள்ளும்படி செய்தார். இதுதான் அவர் நடித்த முதல் படம்.

நடராஜனுக்கு ஏற்பட்ட சந்தோஷம் கணக்கு வழக்கில்லை. ஆனல், அவர் தமக்கு மாதச் சம்பளம் பதினைந்தே ரூபாய்தான் என்பதை அறிந்ததும், அவரது முகம் சுண்டிவிட்டது. எப்படியாவது ஒரு படத்தில் நுழைந்துவிட்டால்,

வேலைக்காரி

மோஹினி

(தொடர்ச்சி 70-ம் பக்கத்தில்)

சந்தனமணமென்றால் இது!

"நான் உபயோகித்திருக்கும் இதர சந்தன சோப்புகளில் உங்கள் சோப்பிலிருக்கும் நறுமணம் இல்லை" என்று திருப்தி அடைந்த நேயர் ஒருவர் எழுதுகிறார்.

இவருக்கு எங்கள் வந்தனம்

மேட்டூர் சந்தன சோப்

தயாரிப்பு:

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்பொரேஷன் லிமிடெட்

மேட்டூர் அணை R. S. :: சேலம் ஜில்லா.

மானேஜிங் ஏஜண்டுகள்:
சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட்
திருச்சிராப்பள்ளி.

பூரண விற்பனை ஏஜண்டுகள்:
அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் லிமிடெட்
120 அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1

சென்ற மாதம் 11-ம் தேதி அன்று, சென்னை, வாஹினி ஸ்டுடியோவில் ஏக வெளிச்சமாக இருந்தது. ஆகவே, நான் அங்கு போன பிறகுதான் ஏக வெளிச்சத்துக்குக் காரணம், அங்கு வித விதமாக அலங்கரித்திருந்த எலக்டிரிக் விளக்குகள் மட்டும் அல்ல என்பது தெரிந்தது. படே படே நக்ஷத்திரங்களெல்லாம் ஏககாலத்தில் ஒரே இடத்தில் சேர்ந்துவிட்டால் ஜகஜ்ஜோதி ஒளி வீசக் கேட்பானேன்! ஆம், சினிமா நக்ஷத்திரங்களைத்தான் நான் குறிப்பிடுகிறேன். சர்வதேச பிலிம் விழாவையொட்டி, சென்னைக்கு விஜயம் செய்திருந்த பல்வேறு நாட்டின் பிரதிநிதிகளுக்கும் விஜயா புரொடக்ஷன்ஸார் ஏற்பாடு செய்திருந்த விருந்திலும், வரவேற்பிலும் கலந்து கொள்ளத்தான் அவ்வளவு நக்ஷத்திரங்களும் வந்திருந்தார்கள். எனக்கு விருந்தோடுகூட பல சுவாரஸ்யமான விஷயங்களும் கிடைத்தன. விருந்தை உங்களுக்கு நான் அளிக்க முடியாது. ஆனால் அதைவிட ருசிகரமான அந்த விஷயங்களை மட்டும் தர முடியும்.

* * *

'சென்னையில் மாலைப் பஞ்சம்' என்று தினசரிகளில் ஒரு செய்தி நிச்சயமாக அடிபடும் என்றுதான் நினைத்தேன். அன்று வாஹினி ஸ்டுடியோவில், சிறிதும் பெரிதுமான சுமார் ஆயிரம் ரோஜா மாலைகள் கூடை கூடையாக வந்திருந்தகைப் பார்த்தபோதுதான் நான் அப்படி நினைத்தேன். அந்த ஸ்டுடியோவில் படம் தயாரித்த தயாரிக்கும் பட முதலாளிகள் அவரவர் சார்பாகவும் ஒவ்வொரு பிரதிநிதிக்கும் மாலைகள் சூட்டவே அவைகள் அங்கு வந்து கிடந்தன. மொத்தத்தில் அங்கு மலைபோல் மாலைகளைக் கண்டேன். மாலை சூட்டும் படலம் வெகு தமாஷாக இருந்தது. அதற்கு முன் வேறு ஒரு தமாஷ் நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுவிட்டு அதற்குப் போகிறேன்.

* * *

பிரதிநிதிகள் ஒவ்வொருவராக வந்து தங்களைத் தாங்களே அறிமுகப் படுத்திக் கொண்டார்கள். ஸ்தூல சரீரமான ஒருவர் அதைக் குறித்து தமாஷாகப் பேசினார். அவர்களில் இரண்டொருவர் ஒரு வார்த்தை இரண்டு வார்த்தைகள் தமிழிலும் பேசினார்கள். "அனைவருக்கும் வக்கணம் (வணக்கம்)" என்றும், "வந்தனம்" என்றும், 'ரஷ்யத் தமிழி'ல் பேசி ஒரே கலகலப்பை உண்டு பண்ணி விட்டார்கள். அதன்பின் தான் 'மாலை சூட்டுகிற படலம்' ஆரம்பமாயிற்று. டைரெக்டர் பிரஸாத், வாஹினி சம்பந்தப்பட்ட ஒவ்வொரு படத் தயாரிப்பாளராக அறிமுகப்படுத்தி, அந்தந்த நபர்கள் வந்து பிரதிநிதிகளுக்கு மாலை சூட்டினார்கள். தமாஷாகவும் விஷயத்துடனும் அறிமுகப் படுத்தும்போது பிரஸாத் ஒரு தவறான செய்தியை வெளியிட்டதையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது. பானுமதியை அறிமுகம் செய்யும்போது 'இவர் தென்னாட்டின் முதல் ஸ்திரீ டைரெக்டர்' என்று கூறினார். அந்தப் பெருமையை பானுமதிக்கு முன்பே "மிஸ். கமலா" படத்தின் மூலம் டி. பி. ராஜலக்ஷ்மி தட்டிக்கொண்டு போயுள்ள விஷயம் அவருக்குத் தெரியாது போலும்!

* * *

பிரதிநிதிகள். பிறகு நடந்த விருந்தில் திணறிப் போனார்களோ என்னவோ, அது எனக்குத் தெரியாது. ஏனெனில் அவர்கள் அனைவரும் 'அசைவ உணவுப்' பகுதிக்குப் போய்விட்டார்கள். ஆனால், அன்று மேலே மேலே வந்து விழுந்த மாலைகளைத் தாங்க முடியாது அவர்கள் திண

றிப் போனதை அனைவரும் கண்கூடாகக் கண்டு களித்தார்கள். ஒருவர் பின் ஒருவராக வந்து பிரதிநிதிகள் கழுத்தில் மாலையைப் போட்டுக்கொண்டு போன ஜோரில் எங்கே அவர்கள் முழு உருவமும் மாலைக்குள் புதைந்து போகுமோ என்றுகூட ஐயுறும்படி இருந்தது. அவர்களில் இரண்டொருவர் ரொம்பத் தமாஷாக நடந்துகொண்டு மாலைகளை ஏற்றுக் கொண்டார்கள். மற்றும் இருவர், கழுத்தில் விழுந்த மாலைகளை எடுத்து இரு கைகளிலும் மாட்டிக்கொண்டு ரஸித்தனர். நல்ல காலமாக ஒவ்வொருவருக்கும் எட்டு மாலைகள் விழுந்ததும் நிறுத்திக் கொண்டார்கள். அது எப்பொழுது முடியுமென்று காத்திருந்தவர்கள் போல் எல்லாப் பிரதிநிதிகளும், டைரெக்டர் கே. சுப்பிரமண்யம், பி. நாகிரெட்டி இருவர்மீதும் பாய்ந்து தங்கள் கழுத்து மாலைகளையெல்லாம் கழட்டி அவர்களுக்குப் போட்டு அவ்விருவரையும் திக்குமுக்காட வைத்தார்கள்.

• • •

அவ்வளவு மாலைகளைப் போட்டுக்கூட நூற்றுக் கணக்கான மாலைகள் மிஞ்சி விட்டன. அவைகளுக்கும் செலவு வேண்டுமே! விருந்து நடந்து கொண்டிருந்த பொழுது, பி. நாகிரெட்டி தமது சிப்பந்திகள் பலர், கையில் மாலைகளுடன் தம்மைப் பின்தொடர்ந்து வர மாலைகளுக்கான கழுத்தைத் தேடிக் கிளம்பிவிட்டார். அந்தக் காட்சி, புராண காலத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் சுயம்வரத்தைத்தான் எனக்கு நினைவூட்டியது. அவர் முக்கியமான புள்ளிகளாகப் பார்த்து மாலைகள் போட்டுக்கொண்டே வந்தார். அந்த சந்தர்ப்பத்தில் சில நக்ஷத்திரங்களின் மனம் பட்டபாடு இருக்கிறதே, அவைகளைச் சொல்லி முடியாது.

புது டில்லியில் சர்வதேச பிலிம் விழா நடைபெற்றபோது சினிமா நக்ஷத்திரங்களின் அணிவகுப்பு ஒன்றும் நடைபெற்றது. நக்ஷத்திரங்களிடையே நடுநாயகமாய் (ஜவஹர்) சூரியன் பிரகாசிப்பது ஒரு பெரிய விசேஷமல்லவா? படத்தில் வைஜயந்தி, ரஞ்சன், சுரையா, நர்கீஸ், நஸீம், ராஜ்கபூர், பிரேம்நாத் முதலிய ஹிந்தி நக்ஷத்திரங்களையும், ராட் கேமிரான், ஸீஸர் ரோமிரோ, மேரி விண்ஸர் ஆகிய ஆங்கில நக்ஷத்திரங்களையும் காணலாம்.



மீசையைப் பார்த்தால் பாலய்யாவின் நினைவு வருகிறதல்லவா? ஆம்; இந்த மோஹன், பாலய்யாவின் மைத்துனர்தான். இவரைப் "புயல்" என்ற தமிழ்ப் படத்தில் முதன்முறையாய் சந்திக்கலாம்.

ஒரு நக்ஷத்திரம் தன் கணவனுடன் நான் இருந்த மேஜையில்தான் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவர் ஒரு தெலுங்கு—தமிழ் நக்ஷத்திரம். வாஹினி ஸ்டுடியோவில் தயாரான ஒரு பிரபல படத்திலும் நடித்தவர். நாகி ரெட்டி அவரைத் தாண்டிக்கொண்டு போய் மற்ற நக்ஷத்திரங்களுக்கு மாலை போட்டபோது, அவர் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே! அவர் எப்படிப் பொருமிப் போனார் தெரியுமா! தம் கணவரிடம், "யார் யாருக்கோ மாலை போடுகிறாரே!" என்று குறைப் பட்டுக்கொண்டார். நல்ல காலம்! கடைசியாக அவருக்கும்கூட ஒரு மாலை கிடைத்தது. அது கிடைக்காதிருந்தால் அவர் இருதயம் நின்றுகூடப் போயிருக்கும் என்றுதான் எனக்குப் பட்டது! இருந்தாலும், தமக்கு முதலில் மாலை போடவில்லை என்ற வருத்தம் அந்த நக்ஷத்திரத்திற்கு உள்ளூர இருக்கத்தானே இருக்கும்!

• • •

ஒரு காலத்தில் ரொம்பப் பிரபலமாகி இருந்த மற்றொரு நக்ஷத்திரம்—இவர் நீண்ட காலத்திற்குப் பிறகு மீண்டும் படத்தில் நடிக்க முற்பட்டிருக்கிறார். நாகி ரெட்டி மாலை மரியாதைகள் செய்வது தெரிந்தும் தெரியாதவர் போல் இருந்துவந்தார். 'தாம் கவனத்துக்கு உரியவர்; தமக்கு நிச்சயமாக மாலை போடப்படும்' என்ற தைரியத்தில் இருந்தார். ஆகவே குனிந்த தலையை நிமிராது ஓரக் கண்ணால் எல்லாவற்றையும் பார்த்தபடி இருந்தார். ஆனால், பாவம்! கடைசிவரை அவருக்கு அந்த மரியாதை கிடைக்காமலே போய்விட்டது. அவருடைய முகத்தில் ஏற்பட்ட ஏமாற்றத்தைக் காண எனக்கு மிகப் பரிதாபமாய் இருந்தது.

• • •

மாலை மரியாதை கிடைத்த குறிப்பிட வேண்டிய மற்றொரு ஆசாமி ஒரு பத்திரிகாசிரியர். அவருக்கு மாலை சூட்டப்பட்டது என்னவோ, பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் அல்ல. படத்துறையில் சம்பந்தப் பட்டிருப்பதாக அவர் விளம்பரப்படுத்திக் கொண்டிருப்பதனால்தான். ஆனால் அவர் தம் கழுத்தில் விழுந்த மாலையைக் கழட்டக்கூட மறந்து, மற்ற பத்திரிகாசிரியர்களைப் பார்த்த பார்வை இருக்கிறதே, அபாரம். ஆனால், அவருக்கும் ஏமாற்றம்தான். ஏனெனில், குறிப்பிட்ட பத்திரிகாசிரியர் இறுமாந்திருந்ததைப் போல, எந்தப் பத்திரிகாசிரியரும், அப்படி அவருக்கு மாலை மரியாதை கிடைத்ததை, கிடைக்கக் கூடாத ஒரு பெரும் பாக்கியமாகக் கருதிவிடவில்லை.

• • •

அன்றைய விருந்து முடிவில் நான் டைரெக்டர் கே. சுப்பிரமண்யத்தைப் பார்த்துப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்

தது. ரஷ்ய விஜயம் பற்றிப் பேச்சு வந்தது. அது சம்பந்தமான என்னுடைய விஷயதானத்தை அவர் ஓரளவுக்கு ஒப்புக் கொண்டது மட்டுமல்ல; "நான் இரண்டு விஷயங்கள் கூறுகிறேன். அதையும் போடுங்கள்" என்று சொல்லி விஷயத்தையும் விளக்கினார். அதையும் அப்படியே உங்களுக்குக் கூறிவிடுகிறேன்.

"ரஷ்யர்களுக்கு சகுனம் பார்ப்பது, நல்ல வேளை பார்ப்பது போன்ற நம்பிக்கைகள் கிடையாது என்று பிரசாரம் செய்யப் புறப்பட்டிருக்கிறார்களே, அது சுத்தத் தவறு. நம்மவ்வளவு நம்பிக்கை அந்த விஷயங்களில் அவர்களுக்கும் இருக்கிறது." இப்படிக் கூறி அவர் அதற்கு இரண்டு உதாரணங்களையும் சொன்னார்.

• • •

வாஹினியில் விருந்து நடக்க அதே தினம், ரஷ்யப் பிரதிநிதிகளுக்கு வேறு ஒரு இடத்திலும் வரவேற்பு இருந்தது. ஆகவே அவர்கள் சீக்கிரமாகவே கிளம்பிவிட்டார்கள். அவர்களை 'வானில்' ஏற்றி அனுப்புவதற்காக கூடவே டைரெக்டர் சுப்பிரமண்யமும் போனார். 'வானி'ல் ஏறும்போது ஒரு ரஷ்யப் பிரதிநிதியின் தலையில் இடித்துவிட்டது. "சகுனம் சரியாக இல்லை. கொஞ்சநேரம் பொறுத்துப் போவோம்" என்று கூறி, உடனே அந்தப் பிரதிநிதி தமது சகாக்களுடன் திரும்பி விட்டார். பிறகு அரைமணி நேரம் பொறுத்துதான் மறுபடி கிளம்பிப் போனார்கள். இது ஒன்று.

• • •

மற்றொன்று ரஷ்யாவில் டைரெக்டர் சுப்ரமண்யத்துக்கு ஏற்பட்ட அனுபவம். அவர்கள் ரஷ்ய ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தார்கள். ஒரு சமயம் ரஷ்யாவைச் சுற்றிக் காட்ட தங்களுடன் இருந்த பெண்மணியுடன் ஹோட்டலை விட்டு வெளிக் கிளம்பினார்கள். ஹோட்டல் வாசற்படியை விட்டுக் கீழே இறங்கியபோது பூனை ஒன்று குறுக்கே ஓடியது. அந்த ரஷ்யப் பெண்மணி, அவர்களை மேலே நகர விடவில்லை. "பூனை குறுக்கே போகும்போது கிளம்பக் கூடாது. வாருங்கள், கொஞ்ச நேரம் பொறுத்துப் போகலாம்" என்று எங்களை உள்ளே அழைத்துச் சென்றுவிட்டாள்.





"ஐயய்யோ! அடிக்காதே அப்பா! சிரிக்க வைப்பவரை இந்த மாதிரி அழ வைக்கலாமா?" என்று கூறி, சாரங்கபாணியை நிக்குநிசசி அடிக்காமல் தடுக்கிறார் பாலய்யா. "அந்தமான் கைதி" தமிழ்ப் பட்த்தில் இது ஒரு காட்சி.

கடைசியாக என். எஸ். கிருஷ்ணனின் ரஷ்ய விஜயத்தைப் பற்றி ஒரு விஷயத்தை என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. ஏனெனில் அது ஆணித்தரமான அபிப்பிராயம். கடந்த தேர்தல் சமயம், நடந்த பிரசாரக் கூட்டம் ஒன்றில் அது வெளியிடப்பட்டது. சோஷலிஸ்டு கட்சியை ஆதரிக்க வேண்டி நடைபெற்ற ஒரு கூட்டத்தில் "கம்பதாஸன்" பின்கண்டபடி பேசினார்: "என். எஸ். கிருஷ்ணன், 'நான் கண்ட ரஷ்யா' என்று பேசுகிறாரே. அவர் கண்ட ரஷ்யா எப்படித் தெரியுமா? ஜட்கா வண்டிக் குதிரை மாதிரித்தான்- அதற்கு, நேர் ரோடு மட்டுமே தெரியும். மற்றபடி எதுவும் தெரியாது. அப்படி கண்களில் மூடி போட்டிருப்பார்கள். அது போலத்தான். நமது கலைவாணர் கண்ட ரஷ்யாவும்.' இது ஒரு சோஷலிஸ்ட் பிரசாரக் கூட்டத்தில் பேசப்பட்டது என்றாலும் உண்மையை எடுத்துக் காட்டுவதாக இருந்ததை மறுக்க முடியாது.

ரஷ்யர்களைக் குறித்து நம்மவர்கள் செய்யும் மற்றொரு அபத்தப் பிரசாரம் அவர்கள் நாஸ்திகர்கள் என்பது. 'அதாவது கடவுள் என்று ஒருவர் உண்டு என்பதை அவர்கள் நம்பவில்லை. புராணக் குப்பைகளை வெறுக்கிறவர்கள் என்று வியாக்கியானம் செய்கிறார்கள். ஆனால், அது முழுக்க முழுக்க பொய்ப் பிரசாரம் என்பது ஒரு ரஷ்யப் பிரதிநிதியின் வாயிலிருந்தே வந்து விட்டது. ரஷ்ய சர்க்கார் சினிமா உதவி மந்திரி, சென்ற மாதம் 11-ம் தேதி பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அதை விளக்கியிருக்கிறார். இங்கு வேண்டுமானால் 'ராமாயணத்தைக் கொளுத்து' 'மகாபாரதத்தைப் புதை' என்று (அதிகப்) பிரசங்கம் செய்யும் ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால். ரஷ்யாவில் அவைகளை மிகவும் விரும்பிப் படிக்கின்றனர். அங்கு அந்தப் புஸ்தகங்களுக்கு நல்ல கிராக்கி இருப்பதாக அவர் வெளியிட்டிருக்கிறார்.

பில்ம் விழா நடந்து முடிந்துவிட்டது. அதனால் என்ன பலாபலன்கள் நமக்குக் கிடைத்தன என்றுதான் பார்க்க வேண்டும். விருந்தினர்களை வரவேற்று உபசரிப்பதில் 'தமிழ் நாட்டுக்கு ஈடு தமிழ் நாடு தான்' என்று அயல்நாட்டுப் பிரதிநிதிகள் உணரும்படி செய்து விட்டார்கள். படங்களைத் திரையிட அழகான திறந்த வெளித் தியேட்டர் ஒன்று அமைத்து, அதன் மூலம் ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கத்தார் புகழையும் நன்மதிப்பையும் தட்டிக் கொண்டனர். இந்திய சர்க்காரே அந்த மாதிரி டில்லியில் ஒரு திறந்த வெளித் தியேட்டர் அமைக்க தங்களுக்கு உதவும்படி ஸினி டெக்னீஷ்யன்கள் சங்க நிர்வாகிகளின் தயவை நாடினார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

• • •

நம் படத் தொழிலிலுள்ள பல் வேறு நிபுணர்கள் பல நாட்டுப் படங்களையும் பார்த்தார்கள். "ஓஹோ" என்று புகழ்ந்தார்கள். "என்ன படம், என்ன படம்!" என்று அங்கலாய்த்தார்கள். எந்தப் படத்தை 'டப்' பண்ணலாம், எந்தப் படத்தின் கதையைத் தழுவிப் படம் தயாரிக்கலாம் என்றெல்லாம் திட்டம் போட்டிருக்கிறார்கள். ரொம்ப சரி! ஆனால் அப்படிப்பட்ட படம் ஒன்றாவது நாம் தயாரிக்கவில்லையே என்று யாரேனும் ஒருவராவது நினைத்தார்களா என்பதுதான் புரியவில்லை. ஒரு பிரபல வாரப் பத்திரிகையாசிரியர் எழுதியது போல அந்த விஷயத்தில் நாம் தலை நிமிர்ந்து நடக்க முடியாத நிலையில் தான் இருக்கிறோம். ஆனால் நம்மவர்கள் ஆறுதல் அடையவும் ஒரு விஷயம் இருந்தது. அதுதான் சீன தேசத்தினர் தயாரித்த படங்கள். அவைகள் மகா மட்டமாக இருந்தன. அவை நம் படங்களின் மானத்தைக் காப்பாற்றின.

வாழ்த்துகிறோம்

என்னெஸ்கே பில்ம்ஸைச் சேர்ந்த வி. நாராயணன் தமது புத்திரர்களான வெங்கட்ராமன், கிருஷ்ணமணி இருவருக்கும் சென்ற மாதம் 15ம் தேதி உபநயனம் செய்வித்தார். 17ம் தேதி அதை ஒட்டி அவர் நடத்திய வரவேற்பில் விகடமணி ஆர். கே. மூர்த்தியின் விகடக் கச்சேரி நடைபெற்றது.

கேட்பதற்கு இனிய "அமரகவி"

நாகூரின் நல்ல அதிர்ஷ்டம்!

அனாதையாக, பத்மினி வீட்டில் வளரும் அமரனுக்கும் பத்மினிக்கும் காதல் ஏற்படுகிறது. பத்மினி வேறு ஒருவருக்கு பலவந்தமாக மணமுடிக்கப்பட்டு, விதவையாகு முன், அமரன் வீட்டை விட்டு வெளிப்படுகிறான். ராஜகுமாரி ஒருத்தியால் காதலிக்கப்பட்டு மணந்து கொள்ளப்படுகிறான்; அதனால் சர்வாதிகாரியின் வெறுப்புக்கும் ஆளாகிறான். சர்வாதிகாரியின் தாசி அமரன் மீது காதல் கொண்டு அதில் ஏமாற்றம் அடையவே அவனை வஞ்சம் தீர்த்துக் கொள்ள முனைகிறாள். சர்வாதிகாரி சூழ்ச்சி செய்து, அமரன்மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டு தூக்கு தண்டனை அளிக்கப்படுகிறான். சமயத்தில் பத்மினி வந்து உண்மையை விளக்கி அமரனை விடுவித்து கதையை சுபமாக முடிக்கிறாள்.

பல பாத்திரங்களையும் சம்பவங்களையும் கொண்ட நீண்ட கதை. சில இடங்களில் வேண்டுமென்றே கதையை வளர்த்தியிருக்கிறார்கள். அமரனும் ராஜகுமாரியும் சிறையினின்று தப்பி ஓடி மீண்டும் பிடிபடுவதாக உள்ள சம்பவம் நீக்கப்பட்டிருந்தால் கதை ஓட்டம் தடைப்பட்டிருக்காது என்பதுடன் நீளமும் குறைந்திருக்கும். இப் படத்திற்கு உணர்ச்சியுள்ள வசனங்களை எழுதியிருக்கிறார் "சுரதா"

அமரகவி	
தயாரிப்பு :	நாகூர் ஸினி புரொடக்ஷன்ஸ்.
நடிகர்கள் :	ராஜகுமாரி, எம். கே. தி. பாகவதர், பி. கே. சரஸ்வதி, சரோஜா, கிருஷ்ணன் – மதுரம் ஆகியோர்.
டைரெக்ஷன் :	எப். நாகூர்.
ஸ்டுடியோ :	நியூடோன்.

படத்தில் டி. ஆர். ராஜகுமாரி ஒருவரின் நடிப்புத்தான் சிறப்பாக இருக்கிறது ஊமையாக வரும்போது, சிப்பாய்களை ஏமாற்றும்போது இறுதியில் தூக்கு மேடையில் ஆக இந்த மூன்று இடங்களிலும் அவர் நடிப்பு சிறப்பாக இருக்கிறது. தாசியாக பி. கே. சரஸ்வதி உடம்பு அசையாமல் நடிக்கிறார் ராஜகுமாரியாக வரும் பி. எஸ். சரோஜாவின் நடிப்பு சோபிதமாகவே இல்லை.

பாகவதரின் நடிப்பு சப்பென்றிருக்கிறது. நடிக்க வேண்டிய பல கட்டங்கள் இருந்தும் தவறவிட்டிருக்கிறார். வசனங்களையும் ஜீவனில்லாது பேசுகிறார். தோற்றத்திலும் முன்னவ்வளவு கவர்ச்சி இல்லை. பத்து பாட்டுகளுக்கும் அதிகமாகவே அவர் பாடுகிறார் என்றாலும், மூன்று பாட்டுகளே மணியாக இருக்கின்றன. என். எஸ். கிருஷ்ணன் படத்தில் ஒரு கலகலப்பை உண்டு பண்ண உதவுகிறார். வழக்கம்போல அவரது வசனங்களில் நாஸ்திகப் பிரசார வாசனை வீசவும் தவறவில்லை. பலவேசம் பிள்ளையாக நடிக்கும் டி. வி. சேதுராமன் படத்தில் ஒரு சிறு பாகத்தில்தான் தோன்றுகிறார். என்றாலும் உள்ளவரை நன்றாக நடித்திருக்கிறார். மற்றபடி யாருடைய நடிப்பும் குறிப்பிடும்படியாக இல்லை.

நாகூரின் டைரெக்ஷனின் திறமையினால் படம் அலுப்புத் தட்டாது முன்னேறுகிறது. என்றாலும் படத்தைப் பார்க்கும் பொழுது, படம் ரொம்ப அவசரமாகத் தயாரிக்கப்பட்டது என்பது தெரிகிறது. ஒளி, ஒலிப் பதிவுகள் அவ்வளவு தரமாக இல்லை.

மொத்தத்தில், "அமரகவி" யைப் பார்க்க வேண்டிய படம் என்று கூறுவதைவிட 'கேட்க' வேண்டிய படம் என்று சொல்லுவதே பொருத்தம். பாகவதரின் மூன்று பாட்டுகளும், "சுரதா" வின் வசனங்களும்தான் இதற்குக் காரணம். நீண்ட நாட்களுக்குப் பிறகு வெளிவந்துள்ள பாகவதரின் படம் என்ற காரணத்தினால் அபிமானிகளின் ஆதரவு இப் படத்திற்கு நிறையக் கிடைத்து வருகிறது.

—"தாஸன்"

இத்தாலிய சினிமா

புராதன தேசமான இத்தாலியில், நவீன சலனப்பட உற்பத்தி, யுத்த காலத்திற்கு முன்பு இருந்ததைவிட ஒரு புதிய சிறந்த ஸ்திதியை அடைந்திருக்கிறது. அதற்கு, தயாரிப்புப் பள்ளிக்கூடத்தின் புதிய அத்மார்த்தமான பாணிதான் காரணம். மேலும் இத்தாலியின் படத் தயாரிப்பாளர்கள் இயற்கையோடு ஒட்டியே இருப்பதை விரும்புகிறவர்கள்; கலையின் உயர்ந்த லக்ஷியங்கள் நிறைந்தவர்களான இளம் நடிகர்களாளாகவே பெரும்பாலும் இருக்கின்றனர். பல சமயங்களில் அவர்களால் ஒன்றரை லட்சம் ரூபாயிலேயே ஒரு நல்ல படத்தைத் தயாரிக்க முடிகிறது. படத் தயாரிப்பாளர்கள் ரோம் தெருக்களிலும், சந்தைகளிலும், காட்சி விநோதங்கள் நிறைந்த இடங்களிலும் சுற்றிச்சுற்றி இயற்கை 'ஸெட்டிங்'குகளுடன் படங்களை எடுக்கின்றனர்.

இந்தியாவில் இயற்கையிலேயே சுலபமாகக் கிடைக்கக் கூடிய காட்சிகளை ஸ்டுடியோக்களில் அமைக்கப் பெரிய பெரிய 'ஸெட்டிங்கு'களை அதிகச் செலவில் தயாரிக்கின்றனர். ரோமின் ஸ்டுடியோக்கள், சிறிய முக்கியமான செட்டுகள் அவைகளுக்குள்ளேயே அமையப் பெற்று நகரில் பரவி இருக்கின்றன. ஐரோப்பாவிலேயே சிறந்தது என்று சொல்லப்படுகிற சினி-சிட்டா ஸ்டுடியோ இத்தாலிய கவர்மெண்டாரின் வெகு விஸ்தாரமான கட்டடம். அதை அதிகமாக உபயோகப்படுத்திக் கொள்கின்ற படத் தயாரிப்பாளர்களுக்கு கவர்மெண்டார் வாடகைக்கு விடுகின்றனர். இத்தாலியில் சினிமாத் தொழிலுக்கு சர்க்காரின் ஆதரவு நிறைய இருந்து வருகிறது.

ஆடைகள் மனிதனை உண்டாக்கினால், நல்ல படங்கள், இத்தாலியில் இன்றைய சினிமா பட தயாரிப்பின் பின்னால் உள்ள முதலாளிகளால் உண்டாக்கப்படுகின்றன. அவர்களில் சிறந்தவர்கள், சர்வதேச புகழை உடைய ரோஸெலினி, டீஸிக்கா என்ற இருவர். அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய இடங்களில் நல்ல 'பாக்ஸ் ஆபீஸ்' வெற்றி பெற்ற "பிட்டர் ரைஸ்" ('கசப்பு அரிசி') என்ற படத்தில் நன்கு நடித்துள்ள இத்தாலிய படவுலகின் வசீகர நக்ஷத்திரமான சில்லானா, மாங்கனோ போன்ற நடிகைகள் இத்தாலிய சலனப்படத் தொழிலுக்கு நல்ல மதிப்பை ஏற்படுத்தி யிருக்கின்றனர். இவர்களுக்குச் சமமாக அன்னா மெக்னினி என்ற நடிகை சினிமா வாழ்க்கையில் பெயர் பெற்றிருக்கிறார். படத் தயாரிப்பாளர் ரோஸெலினி என்பவரை மணந்து கொண்டதனால், இப்பொழுது இத்தாலிக்கு வந்துள்ள இன்கிரிட்பெர்க்மென்னும் தனது கிளர்ச்சிகரமான புதிய படமான "ஸ்டிராம்போலி"யில் நடிக்கிறார்.

ரோமிலிருந்து சமீபத்தில் வெளிக்கிளம்பியுள்ள சிறந்த படங்களில் "காதல் வழிகள்", "திறந்த நகரம்", "பைசோ", "ஷு-ஷைன்", "சைக்கிள் திருடன்" என்பவைகள் சில. இவைகளில் முதல் மூன்று படங்களும் ரோஸெலினியின் தயாரிப்புகள். நான்காவதும் ஐந்தாவதும் டீஸிக்காவின் தயாரிப்புகள்.

"காதல் விழிகள்" என்ற படத்தின் கதை, தனக்குப் பிறக்கப்போகும் குழந்தை அபாசில் அர்க் தாமஸ் என்ற கடவுளுடையது என்று சொல்லிக் கொண்ட ஒரு கன்னியின் வரலாறு. அப்படத்தை ஜனங்கள் மிகவும் பைத்தியக்காரத்தனமானது என்று சொன்னார்களானாலும், டெக்னிக் அம்சத்தில்


ஜூபிடரின்
ராணி

"ராணி" ஹிந்தி,
தமிழ் இரு பாஷை
களில் தயாராகி
றது. வட இந்திய
தென்னிந்திய நக்ஷ
த்திரங்கள் நடிக்
கும் இப் படம் ஏப்
ரலில் வெளிவரும்.

சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்திருந்த துருக்கி பத்திரிகாசிரியர் கோஷ்டிக்கு, எஸ். எஸ். வாஸன் ஜெமினியில் வரவேற்பளித்த போது எடுத்த படம் மேலேயுள்ளது.

சிறந்து இருந்ததால் நிறைய ஜனங்கள் அதைப் பார்த்தனர்.

மற்றொரு பெரிய இத்தாலிய தயாரிப்பாளர்-டைரெக்டர் டீஸிக்கா. சினிமாக் கலையைத் தத்ரூபமாக எடுப்பதில் நிபுணர். குயவன் வெறும் மண்ணில் வேலைப்பாடடைந்த பானைகள் தயாரிப்பதைப்போல் சாதாரணமான கதைக் கருத்துகளை உடைய சிறந்த படங்களைத் தயாரிக்கிறார். உதாரணத்திற்கு "ஷூ-ஷைன்" என்ற படத்தை எடுத்துக் கொள்வோம். லாடம் அடிக்கும் இரண்டு வாலிபர்கள் அமெரிக்க யுத்த முகாமிலிருந்து ஒரு கம்பளியைத் திருடுகின்றனர். ஆனால் ஒருவன் மற்றொருவனைப் போலீஸில் காட்டிக் கொடுத்துவிடுகிறான். மற்றவன் தன்னுடைய வஞ்சனையை, சண்டையிட்டு தன் சகாவைக் கொல்வதன் மூலம் தீர்த்துக் கொள்கிறான். இந்த சாதாரணக் கருத்தை இவ்வளவு பெரிய சினிமாப்பட மூலம் வெளியிட்டிருக்கின்றார் என்றால் டீஸிக்காவினுடைய கலைத் திறன் எவ்வளவு உயர்ந்தது என்று அறிந்து கொள்ளுங்கள்.

இதைப்போல் சிறந்த கதையையுடையது "சைக்கிள் திருடன்" என்ற படம். ஒரு இத்தாலிய தொழிலாளிக்கு அவனுடைய வேலைக்கு அத்தியாவசியமானது அவனது சைக்கிள். அவனுக்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுக்க அந்த சைக்கிள் திருட்டுப் போய்விட்டது. அவன், ஒரு விளையாட்டுப் போட்டி நடைபெறும் இடத்துக்குப் போய் அங்கு குவிந்து கிடக்கும் ஆயிரக் கணக்கான சைக்கிள்களில் தன்னுடையதைத் தேடுகிறான். அவ்வாறு ஒன்றை எடுத்துப் பார்க்கும்போது, போலீஸால் பிடிக்கப்படுகிறான். அதுவே கருத்து. ஆனால் அது இனிமையாகவும், கலைத் திறனுடனும, உணர்ச்சி ததும்பவும் படம் எடுக்கப் பட்டு இருக்கிறது. டீஸிக்கா இதை எடுத்ததில் மிகவும் பெருமைப்பட்டுக் கொண்டு சொல்கிறார்:—"இக்கதை என் இருதயத்திலிருந்து கிளம்பியது. அது உயர்ந்த மனித உணர்ச்சியின் சிறந்த தயாரிப்பு. கலையானது எனக்குப் பிடித்தமானவைகளில் முதல் ஸ்தானம் வகிக்கிறது."

இத்தாலியத் தயாரிப்பாளர்கள் பணத்தைப் பிரதான குறிக்கோளாகக் கொள்ளாமல், மனித எண்ணங்களையும் கலை அழகையும் தயாரிப்பதையே முதல் லட்சியமாகக கொண்டு தங்கள் வேலைகளைச் செய்கிறார்கள். அதனாலேயே அவர்களுடைய படங்கள் இந்நாளில் நல்ல வசூலையும் பெறுகின்றன. நாட்டிற்கும் நல்ல புகழையும் கொண்டு வருகின்றன. வருஷம் பூராவும் இத்தாலியிலுள்ள இருபத்தைந்து தியேட்டர்களிலும் இத்தாலியர்கள் கூடுகின்றனர். அவர்கள் சலனப் படத்தை மிகவும் விரும்புகின்றனர். ஆனால் அங்கு பிரபலமாயுள்ள படங்கள் இத்தாலிய பாஷையில் 'டப்' செய்யப் பட்ட ஹாலிவுட் படங்களே. பிரிட்டிஷ் படங்கள் அவ்வளவாக பிராபல்யமடையவில்லை. அமெரிக்கர்கள் விளம்பரத்திற்காக ஏராளமாக செலவிடுகின்றனர். ஆனால் அது போல் போதுமான பண வசதி யில்லாமையினால் இத்தாலியர்களினால் செய்ய முடியவில்லை. அதேமாதிரி ஆங்கிலத்தில் 'டப்' செய்யப்பட்ட இத்தாலியப் படங்கள், அமெரிக்காவில் கலை விஷயத்தில் சிறந்ததாக இருப்பதால் மிகவும் பிரபல மடைந்திருக்கின்றன.

நீங்கள் படித்த இந்தக் கட்டுரை "ப்ரீ இந்தியா" பத்திரிகையில் வெளி வந்த ஆங்கிலக் கட்டுரையின் மொழி பெயர்ப்பு.



பொது மக்களின் விருப்பம்

ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு பிடித்திருக்கும் பிலிமுக்கு ஒரு பிரத்தியேக குணம் இருக்கும். அதாவது குறிப்பிட்ட வேளையில் ஒவ்வொருவருக்கும், மனதிற்கும் கண்ணுக்கும் பிடித்தமான எதையாவது கொடுக்கிறது. ஆனால் இத்தன்மை தற்காலிகமானது. நேற்று பொது மக்களுக்கு பிடித்தமாயிருந்தது இன்று அப்படியில்லாமலும், இன்று பிடித்தமா யிருப்பது நாளை அப்படியில்லாமலும் இருக்கலாம். நல்ல உன்னத பிலிமுக்கு மக்களின் ஆதரவு கிட்டும்.

'டீ'யை பொறுத்த மட்டில் பொது மக்களின் விருப்பம் வளர்ந்துகொண்டேயிருக்கு. தினந்தோறும் மக்கள் 'டீ'யின் அருமையான ஒப்பற்ற குணங்களை பற்றி தெரிந்து கொள்ளுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட வேளையில் உற்சாகம், ஊக்கம், விச்ராந்தி இவைகளை கொடுக்கிறது. வேறொன்றுக்கும் கொடுக்க முடியாத இன்பத்தை 'டீ' எல்லோருக்கும் கொடுக்கிறது. 'டீ'யின்மேல் பொது மக்களுக்கிருக்கும் விருப்பம் கால, அளவில்லாதது.

டீ

உங்களுக்கு அதிக
இன்பத்தை கொடுக்கிறது.

சென்ட்ரல் டீ போர்டாரால் வெளியிடப்பட்டது.

குண்டூசியைக் கேளுங்கள்

கலை சம்பந்தமாக உங்களுக்கு என்ன சந்தேகமிருந்தாலும் "குண்டூசி" யிடம் கேளுங்கள். இலவசமாகவே பதில் பெறலாம். யாருடைய மனமும் புண்படாதபடி தமாஷாக பதிலளித்து, தமிழ் சினிமா உலகை சீர்திருத்து வதே இப் பகுதியின் நோக்கமாகும்.

—ஆசிரியர்

ஆர். மோஹன் (திருச்சி)

இது வரை தோன்றியுள்ள நம் தமிழ் நடிகர்களில் யார் ஒரு படத்திற்கு அதிகப் பணம் வாங்கி யிருக்கிறார்?

எம். கே. தி. பாகவதர் சிறை செல்லுமுன் எட்டிய லக்ஷ ரூபாய் வரம்பை இதுவரை வேறு யாரும் தொட்டதாகத் தெரியவில்லை.

எம். வி. ஷண்முகராஜ் (கும்பகோணம்)

ஆபாசமாக நடிப்பதன் மூலம் தம் மதிப்புக் குறைந்து போகிற தென்பதை நடிகைகள் ஏன் உணருவதில்லை?

மதிப்புக் குறைந்து விடுவதாய் நீர் நினைக்கிறீர். ஆனால் சினிமா உலகில் ஆபாசமாய் நடிக்கும் நடிகைகளின் மதிப்பு லக்ஷக்கணக்கில் அல்லவா உயருகிறது! அவர்கள் நடிக்கும் படங்களைத்தான் ரஸிகர்கள் பெரிதும் ஆதரிப்பதாக பட முதலாளிகள் வேறு வாதிக்கிறார்களே!

என். எஸ். கன்னியப்பன் (புதுவை)

நம் பாரத நாட்டில் சேர, சோழ, பாண்டியரும், சிவாஜி முதலானோரும் அரசாட்சி புரிந்து கீர்த்தி பெற்றிருக்கின்றனர். ஆனால், இப்பொழுது படங்களில் அறிவில்லாத அரசர்களையும், அறிவில்லாத மந்திரிகளையுமே காட்டி வருகிறார்களே, ஏன்?

நம் பட முதலாளிகளும் தேசப் பற்று மிக்கவர்களே! இல்லை யென்றால், அவர்கள் இந்தச் சரித்திரப் பிரசித்தி பெற்ற ராஜாக்களையும் தங்கள் 'சித்திரவதை ஜாபிதா'வில் சேர்த்திருக்க மாட்டார்களா!

எச். ராமசாமி ஐயர் (பட்டீஸ்வரம்)

எம். ஆர். சுவாமிநாதனுக்கு விவாஹம் ஆகிவிட்டதா?

என்ன, ஸ்வாமி! ஒரே ஒரு முறை கேட்டு விட்டு நிறுத்தி விட்டீரே. இன்னொரு முறையும் கேளும். அவர் இரு மனைவியரை விவாஹம் செய்து கொண்டிருக்கிறார்.

தாஸ் (வளவனூர்)

வாஹினி ஸ்டுடியோவின் விலாஸத்தை தயவு செய்து தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

வாஹினி ஸ்டுடியோ, கோடம்பாக்கம், சென்னை—என்று எழுதும்.

"கலைச் செல்வன்" (மதுரை)

எந்த ராயல் டாக்கீஸாரின் "ஹரிதாஸ்" சென்னை, மதுரை முதலிய நகரங்களில் வருஷக் கணக்கில் ஓடிற்றோ அதே ராயலின் "சுதர்ஸன்", தவ நடிக பூபதி சின்னப்பாவின் கடைசிப் படமாக இருந்தும், புரட்சி வசன கர்த்தா ஏ. எஸ். ஏ. சாமியால் புது மெருகு கொடுக்கப்பட்டிருந்தும் கூட மதுரையில் 31 நாட்கள் கூட சரிவர ஓடாததேன்?

சரியான கேள்வி தான். இதற்கு பின் கண்டவற்றைக் காரணங்களாகக் கூறலாம்:—"சக்ரதாரி" முதலில் வந்து வெற்றி பெற்று விட்டது. ரஸிகர்கள் எதிர் பார்த்துப் பார்த்துச் சலித்துப்

போன பின்னரும், சினிமா மார்க்கெட்டில் பக்திப் படங்கள் மௌஸு குறைந்து போன காலத்திலும் படம் வெளி வந்தது. சின்னப்பா பக்திப் படங்கள் மூலம் புகழ் பெற்றவரல்ல. கதையின் நோக்கத்தைச் சிதறவடிக்கும்படி "காமிக்" சேர்த்திருப்பது.

எம். தாண்டவன் (கோயமுத்தூர்)

குமாரி கமலா "ராம் ராஜ்யா" ஹிந்திப் படத்தில் நடித்திருக்கிறாரா?

ஆம்; அவரது நடனத்தை நீர் அப் படத்தில் காணலாம்.

"கலைப்பித்தன்", "சினிமாப் பித்தன்", "புதுமைப் பித்தன்" (இலங்கை)

சகோதரர்களாகிய நாங்கள் மூவரும் கல்யாண வயதை அடைந்தவர்கள். சினிமா நடிகைகளையே மணப்பதென்று உறுதி கொண்டிருக்கிறோம். நாங்கள் மூவரும் முறையே லலிதா, பத்மினி, ராகினி ஆகிய மூன்று சகோதரிகளையும் மணந்து கொள்ள நீங்கள் உதவி செய்வீர்களா?

உங்கள் மூன்று பேரையும் ஒரே மாதிரி எண்ணமுடைய "பித்தர்களாய்" பெற்றெடுத்த உங்கள் தந்தை ஒரு "பெரிய பித்தராய்" இருக்க வேண்டும்! சினிமா நக்ஷத்திரங்கள் விரும்பி மணப்பது பெரிய பணமூட்டைகளை அல்லவோ? உங்களிடமோ பணம் இல்லை. அது இருந்தால் தான் நீங்கள் இதுபோல பித்தர்களாய் இருந்து கொண்டிருக்க மாட்டீர்களே.

ஜி. நாகராஜன் (நாச்சியார் கோவில்)

எம். எஸ். சுப்புலக்ஷ்மி, எஸ். டி. சுப்புலக்ஷ்மி, ஜி. சுப்புலக்ஷ்மி ஆகிய மூன்று லக்ஷ்மிகளும் தற்போது என்ன செய்கிறார்கள்?

இம்மூன்று லக்ஷ்மிகளில் ஒருவர், "(சதா) சிவனை நினைந்தவர் எவர் தாழ்ந்தார்; சதா சினிமாவிலிருந்தவர்

"என்னம்மா! நிம்பள்கி இந்த ஐயாவைத் தெரியானில்லே. இவங்களை சாரங்கபாணின்டு சொல்றான" என்று அந்த சாயபு (சாமிநாதன்) சரஸ்வதியிடம் கூறுகிறாரா? ("அந்தமான் கைதி"யில் ஒரு காட்சி.)





"பார்வைக்குப் பயங்கரமாய் இருக்கும் ராழ்சிங் குணத்தில் மிக நல்லவரம்மா, பயப்படாதே" என்று நாம் ராஜம்மாவைத் தேற்றலாம். பெலிகன் பிக்சர்ஸார் தயாரித்து வரும் "புயல்" தமிழ்ப் படத்தில் இவர்களைச் சந்திக்கலாம்.

எவர் வாழ்ந்தார்?" என்ற பஜனையில் ஈடுபட்டிருக்கிறார். இன்னொரு லக்ஷ்மியோ தலையில் உள்ள கூந்தல் பூராவாய் வெளுக்கட்டுமெனக் காத்துக் கொண்டிருந்து விட்டு, இப்பொழுது மீண்டும் சினிமாப் படங்களில் நடித்து வருகிறார். கடைசி லக்ஷ்மியோ தம் வழுக்கை மறையும் அளவுக்கு மயிர் முளைக்கட்டும் என்று நடிக்காமலே இருந்து வருகிறார்.

டி. முருகேசன் (காரமடை)

தற்போது ஏன் சினிமா நடிகர்களில் பெரும் பாலோர் நாடகங்களை நடத்த ஆரம்பித்து விடுகின்றனர்?

அது 'நடிப்பு' பழகிக் கொள்ளுவதற்கான ஒத்திகை போலும்!

எம். ஆர். சுந்தரராஜன் (மேலப் பெருங்காவூர்)

நான் "தாரம்" என்ற கதையையும், அதற்கான வசனங்களையும் எழுதி வைத்திருக்கிறேன். அதை உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். அதைப் பட முதலாளிகளிடம் கொடுத்துப் படமாக்கும்படி நீங்கள் தான் செய்யவேண்டும்.

கதைகளை விற்றுக் கொடுப்பது, சினிமாவில் சேர்த்து விடுவது, இன்னும் பல வேலைகளுக்குச் சிபார்சு செய்வது இவை யெல்லாம் என் போன்ற ஆசிரியர்களுக்குந் தலைவலி உண்டுபண்ணுகின்றன. இந்த நூற்றுக் கணக்கான பேர்களிலே நான் யாருக்கென்று சிபார்சு செய்வது!

"புரட்சிப் பித்தன்" (மதுரை)

சமூகப் படங்களுக்கு ஏற்ற முகவெட்டு, சிறந்த நடிப்பு, சுயமாய் பாடும் திறமை, கம்பீரமான தோற்றம், சரளமான பேச்சு இவைகளை வைத்துக் கொண்டு மதிப்பிட்டால், பாலசந்திரன், கே. ஆர். ராமசாமி, பாலய்யா, மஹாலிங்கம், சகஸ்ரநாமம், ரஞ்சன், ராதா ஆகியோருள்

யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

நீர் குறிப்பிட்டுள்ள யோக்கியதாம்சங்கள் அத்தனையும் மேற்குறிப்பிட்டுள்ள எந்த நடிகரிடமும் பூராவாகப் பொருந்தியில்லை. பெரும் பாலான அம்சம் பொருந்தியவரை ஆராய்ந்து பார்த்தால் மஹாலிங்கத்திற்கே இந்த ஸ்தானத்தை அளிக்கவேண்டியிருக்கிறது.

வேணுகோபால் (பேரும்பட்டு)

நான் பலமுறை தங்களிடம் கேள்விகள் கேட்டிருக்கிறேன். ஆனால், ஒன்றுக்குக்கூட நீங்கள் பதிலளிக்கவே இல்லையே? ஏன்?

முன்பே பலர் கேட்ட கேள்விகளைக் கேட்பதும், நான் அவற்றிற்குப் பதில் அளிப்பதும் மற்ற வாசகர்களுக்குத் தலைவேதனையாய் இருக்குமல்லவா? தமாஷாகவோ குறும்பாகவோ பதில் சொல்லக் கூடிய கேள்விகளுக்கு நான் சலுகை காட்டுவது வழக்கம்.

பி. ஏ. சுப்ரமண்ய முதலியார் (பாண்டிச்சேரி)

ஐந்து வருஷ காலம் ஒரு பெண் தன் புருஷனுடன் அன்னியோன்னியமாக வாழ்ந்த பின்னர் அவள் செய்யவேண்டிய கடமை என்ன?

வருஷத்திற்கு ஆறு மாதமாவது தாயார் வீட்டிற்குச் சென்று தங்கி, புருஷனுக்கு மன அமைதியை அளிக்க வேண்டும்!

ந. ப. ஹ. முஸ்தபா (திருத்துரைப்பூண்டி)

"சர்வாதிகாரி" படத்தில் அஞ்சலி தேவி "ஆண்டியை அரசனாக்குவேன், அரசனை ஆண்டியாக்குவேன்" என்று சொல்லுகிறாரே இந்த சக்தி மட்டும் அவரிடம் உண்மையாகவே இருந்தால்......?

...இந்திய சமஸ்தானங்களை இந்திய யூனியனில் சேர்ப்பதற்கு பாவம், சர்தார் படேல் அவ்வளவு கஷ்டப்பட்டு உயிரை விட்டிருக்க வேண்டியிருந்திருக்காது அல்லவா!

பி. எம். முத்து (இலங்கை)

"பாதாள பைரவி"யில் 'பிரேம பாசத்தால் வலையில் வீழ்ந்தான்' என்ற பாட்டைப் பாடியவர் யார்?

இந்தப் பாட்டைப் பின்னணியிலிருந்து பாடுபவர் கண்டசாலா.

எஸ். பி. எஸ். செட்டியார் (இலங்கியம்)

சின்னப்பா என்ற என் நண்பர் சென்னையிலுள்ள ஒரு ஸ்டுடியோவுக்கும், சேலத்தில் உள்ள ஒரு ஸ்டுடியோவுக்கும் தம் புகைப் படத்துடன் விண்ணப்பங்களை அனுப்பி

சமீபத்தில் வெளிவந்திருக்கும் சர்வோதயா பிலிம்ஸின் "மானவதி" தமிழ்ப் படத்தில் பி. கே. சரஸ்வதி.

யிருந்தார். மாதம் இரண்டாகியும் பதில் இல்லை. பதிலுக்காகப் பல தடவை ஸ்டாம்புகள் அனுப்பியும் பயனில்லை. நண்பர், தம் போட்டோக்களைத் திரும்பப் பெறுவதற்கு என்ன வழி?

இந்த ஸ்டுடியோக்காரர்கள் எழுதிய பதிலும் அனுப்பிய போட்டோக்களும் ஒரு வேளை தவறுதலாக காலஞ் சென்ற நடிகர் சின்னப்பாவின் 'மேல் விலாஸத்திற்கு'ப் போய்விட்டிருக்கக் கூடும்! ஆதலால் "இறந்த கடித இலாகா"வுக்கு எழுதிக் கேளும்!

வேணுகோபால் (குடியாத்தம்)

"ஸ்ரீ லக்ஷ்மம்மா கதா" தெலுங்குப் படத்தில் சூர்ய பிரபாவின் நடிப்பு ஆபாஸமாய் இருக்கிறது என்று என் நண்பர் கூறுகிறார். இந்தப் படத்தைவிட "ஸ்திரீ சாகஸம்" படம் அதிக ஆபாஸமாய் இருக்கிறது என்று சொல்கிறேன் நான். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

நீங்கள் இப்படியே மற்றும் பல தமிழ்ப் படங்களை ஆராய்ந்து கொண்டே வந்தால் "ஆபாஸம்" என்ற பேச்சையும், அதோடு தமிழ்ப் படம் பார்ப்பதையும் விட்டு விடுவீர்கள்!

வி. ராமசாமி (கோடவாசல்)

அஞ்சலி தேவி நடிக்கும் படங்களுக்கு பெண்கள் கூட்டம் ஏன் அதிகமாக வருவதில்லை?

பொதுவாகவே தமிழ்ப் படம் பார்க்க வருவதை கௌரவமுள்ள பெண்கள் குறைத்துக் கொண்டு வருகின்றனர். அதுவும், அஞ்சலி தேவியின் படத்தைப் பார்ப்பதற்கோ மற்றப் பெண்களுக்கும் அவமானமாய் இருக்கிறது போலும்.

• • •

கே. ஆர். ராமசாமி ஏன் இன்னும் சொந்தப் படம் எடுக்கவில்லை.

"ஜெனோவா" என்ற தமிழ்-மலையாளப் படத்தில் வி. உமா நடனம் ஆடுவதுடன் அவைகளின் டான்ஸ் டைரெக்ஷனையும் கவனித்து வருகிறார்.

சினிமாவுலகில் அவருக்கு இன்னும் கிராக்கி தீர்ந்தபாடில்லையே!

• • •

டி. ஆர். மஹாலிங்கத்தின் சொந்தப் படங்களிலெல்லாம் எஸ். வரலக்ஷ்மியே முக்கிய பாகங்களில் நடிக்கிறாரே, அவருக்குச் சம்பளம் உண்டா?

என்ன இப்படிக் கேட்கிறீரே. சம்பளம், கிம்பளம் எல்லாம் உண்டு ஐயா அவருக்கு!

எஸ். ராஜாமணி (தியாகராய நகர்)

நான் இதற்கு முன்பே பல பத்திரிகைகளுக்கு இக் கேள்வியை எழுதியும் பயனில்லை. நீங்களாவது கீழ்க்கண்ட (16 சினிமாக்) கம்பெனிகளின் விலாஸங்களைத் தெரிவிக்கவும்......

இப்பகுதி வெறுமனே விலாஸங்களைத் தெரிவிப்பதற்காக ஏற்பட்டதல்ல. ஆனால், நீர் ஒன்று செய்யும். வி. ராமராவ், காரியதரிசி தென்னிந்திய பிலிம் சேம்பர், மௌண்ட் ரோடு, சென்னை— என்ற விலாஸத்திற்கு எழுதி "பிலிம் டைரி" ஒன்றை வரவழைத்துக் கொள்ளும். அதில் இதுவும், சினிமா பற்றிய வேறு பல விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

கே. வி. ஏ. சக்கரை
(மத்துகம, இலங்கை)

டி. ஆர். மஹாலிங்கத்திற்கு விவாஹம் ஆகிவிட்டதா?

"அறியா"ப் பருவத்திலேயே நடந்தேறிவிட்ட விஷயம் அது!

கே. பி. துரைசாமி
(புரசைவாக்கம்)

மதுரை மீனாக்ஷி, ரேவதி இவர்கள் "கைதி"க்கு முன் எத்தனை படங்களில் நடித்திருக்கின்றனர்?

மதுரை மீனாக்ஷி ஒரு புது நடிகை. ஆனால் ரேவதி வேறு பெயருடன் சில தமிழ்ப் படங்களில் முன்பே நடித்திருக்கிறார்.

• • •

நான் ஒரு சினிமா நடிகையை மணக்கத் தீர்மானித்திருக்கிறேன். இதற்கு அந்த நடிகையும் சம்மதித்திருக்கிறாள். திருமணத்திற்குப் பிறகு எங்கள் வாழ்க்கை எப்படியிருக்கும் என்று உங்களால் கற்பனை செய்ய முடியுமா?

முதல் வருஷம் எல்லாம் சந்தோஷமயமாய் இருக்கும். இரண்டாவது வருஷத்தில் எல்லாம் சந்தேகமாய் இருக்கும். மூன்றாம் வருஷத்திலோ எல்லாம் மனஸ்தாபமாய் இருக்கும். அதன் பிறகு, உமக்கு அசாதாரணமான சகிப்புத் தன்மையும், (எதையும்) விட்டுக் கொடுக்கும் மனோபாவமும் இருக்குமானால், அந்த நடிகை தாராள மனதுடன் தன் கணவர் ஸ்தானத்தை உம்மிடமே விட்டு வைப்பார்!

யூ. ஆர். நவரத்தினம்
(மட்டக்களப்பு, இலங்கை)

யூ. ஆர். ஜீவரத்தினம் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவரது விலாஸத்தைத் தெரிவிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஜீவரத்தினம் தற்போது சங்கீதக் கச்சேரிகள் செய்வதில் முனைந்திருக்கிறார். விலாஸம் c/o ஸ்ரீ வெங்கடசாமி, ஜூபிடர் பிக்சர்ஸ், திருச்சி ரோடு, கோயமுத்தூர்.

பிரபல வடநாட்டு டைரெக்டர் மெஹ்பூப் "ஆன்" என்ற படத்தை டெக்னிகலர் படமாக ஹிந்தி, தமிழ் ஆகிய பாஷைகளில் தயாரித்து வருகிறார். அப் படத்தில் நடிக்கிறார் இந்தப் புதுமுகம் நதிரா.

விரஸமற்ற "தாய் உள்ளம்"

ரம்மியமான ஒளிப் பதிவு

பொதுவாகப் படங்களை இரு பிரிவுகளாகப் பிரித்து விடலாம். ஒன்று நல்ல படங்கள்; மற்றொன்று வசூல் படங்கள். "தாய் உள்ளம்" முதல் பிரிவைச் சேர்ந்தது.

சீமூர் ஜமீன்தார் மனோஹரின் மனைவி நிர்மலா தன் கணவன்மீது சந்தேகம் கொண்டு, தன் குழந்தையை விட்டு வெளியேறி, பெரிய அபவாதத்துக்கும் ஆபத்துக்கும் உள்ளாகிருள். மனோஹர், தன் மீது காதல் கொண்டுள்ள வசுந்தராவை மணந்து கொள்கிருன். வீட்டை விட்டு வெளிப்பட்ட நிர்மலா சில வருஷங்களுக்குப் பின், தாயுள்ளம் தவிக்க, திரும்ப வந்து தன் கணவன் வீட்டிலேயே, தன் சொந்தக் குழந்தையின் தாதியாக வேலைக்கு அமருகிருள். கடைசியில் உண்மை வெளியாகிறது. குழந்தை மணி உயிர் துறக்க, தாயும் மடிந்து போகிருள். இதுதான் கதை. பிரபல மேனாட்டு நாவல் ஒன்றைத் தழுவி எழுதப்பட்டிருக்கிறது. நம் நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கு ஒவ்வாத பல சம்பவங்களைக் கதையிலிருந்து நீக்கி யிருக்கலாம். கதையின் முடிவு சுபமாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் டைரெக்டர் ராம்னுத் படத்திலும் கையாளப்பட்டிருப்பது ஆச்சரியமே! வசனங்கள் சாதாரணமாகத்தான் இருக்கின்றன. ஒரே மாதிரியாக இல்லை.

படத்தில், பாரதியார் கவிமணி இருவரின் பாட்டையும் சேர்த்திருப்பது குறிப்பிடத் தக்கது. மற்றபடி 'சுரபி' யின் பாட்டுகள் அனைத்துமே கருத்துடன் இருக்கின்றன. ராஜம்மாவுக்காகப் பாடப்படும், 'கொஞ்சும் புருவே', 'கதையைக் கேளடா' இரண்டும் சிறப்பாக இருக்கின்றன. நாகய்யா பாடும், 'நாதத்திலே பேதமா' என்ற பாட்டு ரஸிக்கும்படி இருக்கிறது. எனினும் பொறுமையை சோதிக்கும் அளவுக்கு வளர்த்தி யிருக்கிருர்கள்.

மனோஹராக நடிக்கும் மனோஹரது நடிப்பில் குறிப்பிடத் தக்க அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. சேகராக நடிக்கும் ஆர். கணேசனின் தோற்றமும் நடிப்பும் நன்ருக இருக்கின்றன. ஆனால் வில்லன் பாத்திரத்திற்கு முக்கியமாகத் தேவையான கொடூரப் பார்வையும், மிடுக்கான நடிப்பும் இவரிடம் இல்லை. நாகய்யாவுக்கு இப் படத்தில் அதிக சந்தர்ப்பம் இல்லை என்ருலும் உள்ளவரை நன்ருகவே நடித்திருக்கிருர். போலீஸுக்கு பயந்து திரியும் சுகுமாராக சந்திரபாபு ரொம்ப நன்ருக நடித்திருக்கிருர். "என்னை நீங்கள் தான் மீண்டும் மனிதனுக்க வேண்டும்" என்று கெஞ்சும் கட்டத்தில் இவரது நடிப்பு கண்ணீர் வருவிப்பதாக இருக்கிறது. மாஜிஸ்டிரேட்டாக என். சீதாராமன், தமது பாத்திரத்தை உணர்ந்து நடித்திருக்கிருர்.

ராஜம்மாவின் நடிப்பு காதல் காட்சிகளைவிட சோக கட்டங்களில் பரிமளித்திருக்கிறது. விபத்துக்குப் பின் உள்ள அவருடைய மேக்-அப் நன்ருக இருக்கிறது. மாதுரிதேவி வெகு இயற்கையாக, 'ப்ரீ'யாக நடித்திருக்கிருர். சாந்தம்மாவாக கே. ஆர். செல்லம் குற்றமற்ற வகையில் நடித்திருக்கிருர்.

தாய் உள்ளம்

தயாரிப்பு: நாராயணன் கம்பெனி

நடிகர்கள்: நாகய்யா, மனோஹர், ஆர். கணேசன், கே. ராமசாமி, மாதுரி தேவி, எம். வி. ராஜம்மா, கே. ஆர். செல்லம் முதலியோர்.

நீளம்: 17,185 அடிகள்.

ஸ்டுடியோ: வாஹினி.

டைரெக்ஷன்: கே. ராம்னுத்.



"என் சருமத்தை லக்ஸ்
டாய்லட் சோப்பிஞல்தான்
பாதுகாத்துக்கொள்கிறேன்"
என்கிஞர்
மங்களம்
LUX
LUX TOILET SOAP
இனிய மணத்துடன் கூடிய இந்த
வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள்
சருமத்தை வசீகரமாகச் செய்யும்
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்
LTS. 326-50 TM

சோகமான இந்தப் படத்தில் அடிக்கடி ஒரு கலகலப்பு ஏற்படும்படி செய்கின்றனர் 'பிரண்ட்' ராமசாமியும், மூத்து லக்ஷ்மியும். அவர்களது ஹாஸ்யம் கண்யமானதாகவும், ரஸிக்கும்படியும் அமைந்திருக்கிறது.

படத்திலேயே சிறந்த அம்சம் படத்தின் ஒளிப் பதிவுதான். பல இடங்களில் மேனாட்டுப் படங்களின் படப் பிடிப்பையும் மிஞ்சுவதாக இருக்கிறது. முக்கியமாக சுகுமார் ஸைக்கிளில் செல்வதாக உள்ள காட்சியையும், கடைசியில் தாயும் சேயும் சேருவதாக உள்ள காட்சியையும் பிரமாதமாகப் பிடித்திருப்பதைக் குறிப்பிடலாம். ஒலிப் பதிவும் நன்றாகவே இருக்கிறது. இப்படத்தின் மற்றொரு சிறந்த அம்சம் காட்சிகள்—தாணு சுரத்தை எடுத்து அவகு சிறப்பாக ஆர்ட் டைரெக்ஷனைக் கவனித்திருக்கிறார்.

டைரெக்ஷனைப் பொறுத்தவரை 'ஓகோ' என்று புகழ்வதற்கு ஒன்றுமில்லை. சிறு சிறு குறைகள் அங்கங்கே காணப்படுகின்றன. வசுந்தராவுடன், மனோஹர் வீட்டைவிட்டுக் கிளம்பும் போது உள்ள கார், அடுத்த காட்சியில் வேறு ஒரு காராக இருக்கிறது. கதையின் முன் பகுதி மிகவும் மெதுவாக நகர்கிறது. சில அநாவச்யமான காட்சிகளை நீக்கி அதை விறு விறுப்பாக்கியிருக்க முடியும்.

மொத்தத்தில் "தாய் உள்ளம்" விரஸமான காட்சிகள் எதுவுமில்லாத, சாதாரண மக்களின் ருசிக்கு சற்று மேம்பட்ட ஒரு நல்ல படம்!

—"ஜாம்பவான்."

ஸ்திரீ நடன டைரெக்டர்

படங்களின் டைரெக்டராகவும், கதை-வசன கர்த்தாக்களாகவும் ஸ்திரீகள் நம் படத் தொழிலில் இருந்து வருகின்றனர். அந்த ஜாப்தாவில், நடன டைரெக்டருக்கும் இப்பொழுது இடம் ஏற்பட்டிருக்கிறது. உமா சகோதரிகள் என்ற நடனமணிகளில் மூத்தவரான வி. உமா, சந்திரா பிக்சர்ஸாரின் "ஜெனோவா" தமிழ்-மலையாளம் படங்களின் நடன டைரெக்ஷனை கவனித்து வருகிறார். ஒரு ஸ்திரீ இந்தப் பொறுப்பைத் தனியே ஏற்றிருப்பது இதுவே முதல் முறையாகும்.

* பலே, மாதர் காங்கிரஸ்!

சினிமாத் தொழில் சில காலமாக முன்னேறிக்கொண்டு வருவது என்னவோ உண்மைதான். ஆனால், அது சும்மா வரவில்லை—அருவருப்பூட்டும் ஆபாசத்தையும் பக்கத் துணையாக அணைத்துக் கொண்டுதான் வந்தது — வருகிறது. மானமற்ற சில நடிகைகள் மார்பகங்களை வெளிக்காட்டிக் கொண்டும், அரை நிர்வாணமாகவும் நடிக்கத் தலைப்பட்டு விட்டார்கள். இதை நிறுத்த முயன்ற பல அறிஞர்களின் வாய்ப் பேச்சுக்களும் வீணே விரயமாயின. ஏடுகள் எத்தனையோ தடவை எடுத்துக் கூறியும் அவை ஏட்டுச் சுரைக்காயாகி விட்டதுதான் மிச்சம்!

இப்போது மாதர்களே பொறுக்கமுடியாமல் அதை எதிர்க்கத் தலைப்பட்டது என்றால் மட்டுமல்ல—அகில உலக மக்களாலும் பாராட்டப்படக் கூடியதாகும். இவர்கள் வாய்ப்பேச்சுடன் மட்டும் நிற்காமல் அரசாங்கத்துக்கே தீர்மானம் கொண்டு போவது மிகவும் நல்லது—போற்றப்படக் கூடியதே! இவர்களை இச்சமயத்தில் ஆதரித்து உதவிபுரிவது ஆபாசத்தை வெறுப்பவர்கள் பத்திரிகை ஆசிரியர்கள் இவர்களது கடமையுமாகும். ஆணுலகம் சாதிக்க முடியாமல் தோல்வியுற்றதைப் பெண்ணுலகமாவது சாதிக்கட்டும்! அவர்களுக்கு ஆண்டவன் அருள் புரியட்டும்!

ஜீவன்,
கொழும்பு 10.

வேண்டாம்!

டிஸம்பர் மாத "குண்டூசி"யில் ஒரு டில்லி அன்பர், 'காதல் காட்சிகளும் தேவைதான்: அவை இல்லாவிட்டால் படம் ரஸிக்காது' என்று பொருள்பட எழுதியிருக்கிறார். படங்களில் ஆபாசம் கூடாது என்று கூறுபவர்களில் நானும் ஒருவன். காதல் காட்சிகளை ஆபாசம் இல்லாமல் எடுக்கலாம். ஆனால் ஆபாசத்திற்காகவே, கதைக்குச் சற்றும் சம்பந்தமற்ற காதல் காட்சிகளை அருவருக்கத் தக்க முறையில் புகுத்துவதை நாம் ஆட்சேபிக்கத்தான் வேண்டும். சமீபத்தில் "ஆவாரா" என்ற ஹிந்திப் படத்தைப் பார்த்தேன். மிகவும் விளம்பரப்படுத்தப்பட்ட படம் இது. ஆனால் இதில் ராஜ்கபூரும் நர்கிஸும் ஆடியிருக்கும் களியாட்டத்தைக் காதல் காட்சி யென்று நமது டில்லி அன்பர் சொல்வாரா என்று சந்தேகிக்கிறேன். ஜனங்களின் கீழ்த்தர உணர்ச்சிகளைக் கிளறி, பணம் பறிப்பதற்காகவே மட்டரகமான காதல் காட்சிகளை "ஆவாரா"வில் புகுத்தியிருக்கிறார்கள். அப்படத்தின் விளம்பரங்களும் இந்த நோக்கத்தையே எடுத்துக் காட்டுகின்றன. இவற்றையெல்லாம் நமது ஸென்ஸார் எப்படி அனுமதிக்கிறார்கள்? இப்படத்திற்கு 'யூ'ஸர்டிபிகேட் எப்படிக் கிடைத்தது. இப்படத்தை சர்வ தேசப் பட விழாவுக்கு எப்படித் தேர்ந்தெடுத்தார்கள் என்பது ஆச்சரியத்துக்குரிய விஷயமே. ஆபாசமற்ற காதல் காட்சிகளை எடுக்க முடியாது என்றால், நமக்குக் காதல் காட்சிகளே வேண்டாம்!

வி. எஸ். சுந்தரராஜன்,
பம்பாய்.

போற்றுகிறேன்!

மகத்தான ஒரு புரட்சியைப் பட உலகிலே சாதித்து விட்ட பிரகாஷ் புரடக்ஷன்ஸாரை நான் போற்றுகிறேன். காதல், காதல் என்று கட்டிக் கொண்டு அழுத பட உலகில் ஏற்பட்டிருக்கும் கண்

* பரிசு பெற்ற கடிதம். எழுதியவர்: எ. டபுள்யூ. எம். நளீன், ஸாஹிராக் கல்லூரி, கொழும்பு-10.

சமீபத்தில் "கைதி"யில் தோன்றித் திறம்பட நடித்த பஷீர் தற்போது "புயல்" படத்தில் நடித்து வருகிறார்.

விழிப்புக்கு ஒரு நற்சான்று அவர்களின் "அண்ணி". சலித்துப்போன காதல், தரத்தைக் குறைக்கும் ஆபாசம், செக்ஸ் அப்பீல் என்ற பெயரில் சிறுமைத் தனம் இவைகள் ஏதுமின்றி புது மாதிரியான முறையிலே, ஒரு சிறுவனையும், ஒரே ஒரு நடிகையையும் பிரதான பாத்திரங்களாகக் கொண்டு புது நடை போடும் "அண்ணி"யை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். நாடு இருக்கும் நிலைக்கு நல்லதொரு படம்; நல்ல ஒரு முயற்சி! குதூகலத்துடன் "அண்ணி"க்கு யாரும் ஒரு சபாஷ் போட வேண்டியதுதான்.

கி. சந்திரா,
கடலூர்.

புதியன புகுத்துவார்களா?

சில மாதங்களுக்கு முன்னர் பம்பாய் "கர்தார்" ஸ்டுடியோ உரிமையாளர்கள், அழகும், ஆர்வமும் அமைந்த புதிய இளம் நடிகர் நடிகைகள் தேவையென்று விளம்பரம் விடுத்திருந்தனர். வரப்போகும் ஆண்டில் சிறந்த புது நடிகர்களைக் கொண்டு புதுப் படங்கள் தயாரிப்பதற்காகத்தான்! வட நாட்டில் நிலைமை இப்படி இருக்கும் பொழுது, நம் தமிழ்ப் பட முதலாளிகள் மீண்டும் மீண்டும் பழைய நடிகர்களைக் கொண்டே படமெடுக்கும் முயற்சியை நாம் எப்படிப் போற்றுவது? ஆர்வமுள்ள இளைஞர்கள் பலர் இருப்பதாகப் பத்திரிகைகளில் படங்கள்கூட வெளி வருகின்றன. அவர்களுக்கும் இடம் தந்து, பட முதலாளிகள் ஆதரிக்க வேண்டாமா? ஆகையால் இனிமேலாவது பழையன கழித்து, புதியன புகுத்துவார்களா?

அடுத்தபடி, நம் தமிழ்ப் படங்களின் கதைகள் தரத்தில் குறைந்து தான் வருகின்றன. இனிய கதைகள் பல வைத்துக் கொண்டு, இன்னாதை கதைகளைத் தேடி அலைகின்றனர். சரித்திர சம்பந்தமான படங்களே எடுப்பதில்லை. ஹிந்தியில்கூட, "ஷாஜஹான்", "ஸிகந்தர்", "சந்திரகுப்தா", "ஜான்ஸி ராணி" போன்ற படங்கள் வருகின்றன. ஆங்கிலத்தில் அனேக படங்கள் சரித்திர காலத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன. அது போன்று நம் தமிழ் நாட்டிலும், கட்டபொம்மன் கதை, சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு, சேர, சோழ, பாண்டியர்கள் வீரம் இவைகளைப் படமாக்கக் கூடாதா? இனியாவது, நம் படத் தயாரிப்பாளர்கள் இவைகளை உணர்ந்து நாட்டுக்கு நல்லன செய்வார்களா?

கே. சிவசுப்ரமணியன்,
ஆனமலை.

நல்ல தீர்ப்பு!

சென்னை, மதுரை, ராஜபாளையம், விஜயவாடா முதலிய நகர ரஸிகர்கள் "ஏழை படும் பாடு" தான் 1950-ல் வெளி வந்த படங்களில் சிறந்தது என்று அளித்த தீர்ப்பு, ஒரு நல்ல தீர்ப்பு! மறுமலர்ச்சியின் பெயரைச் சொல்லிக் கொண்டு மட்ட ரகமானதும், வகுப்பு வாதம் அடங்கியதும், குறிப்பிட்ட சாராரை வசனத்தின் மூலம் தாக்குவதையே குறிக்கோளாகக் கொண்டதுமான படங்களை வெளியிட்டு, அவைகளையே ரஸிகர்கள் ஆதரிக்கிறார்கள் என்று தப்புப் பிரசாரம் செய்து வந்தவர்களுக்கு ரஸிகர்கள் ஒரு நல்ல தீர்ப்பையே வழங்கியுள்ளார்கள். ரஸிகர்கள்

அழகி என்பதில் ஐயமில்லை; அவள் அறிவும் இவருக்குப் போதுமானது! இந்த ஸ்வப்பன ஸுந்தரிக்கு சமையல் மட்டும் தெரிந்து இருந்தால்........பேஷாகத் தெரியும். சொல்லப் போனால் அவள் பாக சாஸ்திர மேதை........அவள் சமையல் திறனை வளர்த்தது.

காமதேனு

வனஸ்பதி

சமையல் சாதனம்

தாயாரிப்பு :

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R. S. :: சேலம் ஜில்லா.

மானேஜிங் ஏஜண்டுகள் :

சேஷசாயி பிரதர்ஸ்
லிமிடெட்

திருச்சிராப்பள்ளி.

பூரண விற்பனை ஏஜண்டுகள் :

அலைட் இண்டஸ்ட்ரியல்
டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் லிமிடெட்
120, அரண்மனைக்காரத் தெரு,
சென்னை—1.



இனாம்! இனாம்!! இனாம்!!!

எமது நெ. 501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான மயிரும் மைக் கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும் பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்றின் விலை

ரூ. 1—15—0;

3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—0—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட்வாட்சும்; நியூகோல்டு மோதிரமும் அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்:

AMRIT PHARMACY (G. M.) Jullundur City

வசீகர ஸெண்ட்

நவயுகத்தின் நிகரற்ற அதிசயம்

எங்கள் "வசீகர ஸெண்ட்" காதலில் ஏமாற்றமுற்று வாழ்க்கையில் வெறுப்புற்றோருக்கு மதிப்பில்லா மாணிக்கமாகும். எந்த ஆணை, அல்லது பெண்ணை வசப்படுத்த விரும்புகிறீர்களோ அவர் அருகில் இந்த ஸெண்டை சில துளிகள் தெளியுங்கள். உடனே அவர் உங்கள் வசப்பட்டுவிடுவார். பிறகு உங்களைப் பிரிய அவருக்கு மனமே வராது. நூற்றுக் கணக்கானவர்கள் இதைப் பரீக்ஷித்திருக்கிறார்கள். தினசரி ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிகின்றன. கிரக பீடைகள், நோய், இவைகளிலிருந்து காப்பாற்றி, ஐசுவரியத்தை அளிக்கும். வழக்குகளிலும், பரீக்ஷைகளிலும் வெற்றி, உத்தியோக உயர்வு, எல்லாம் ஏற்படும். உங்கள் நோக்கம் எதுவானாலும் பலிக்கும். ஒரு தடவை பரீக்ஷியுங்கள். நூற்றுக்கு நூறு வெற்றி ஏற்படும். பலன் இல்லையென்றால் பணம் வாபஸ் செய்து விடுவோம். விலை ரூ. 1—15—0; தபால் செலவு தனி. வெளி நாடுகளுக்கு—5 ஷில்லிங் பி. பி. ஓ. இரண்டு புட்டிகள் ரூ. 3—4—0; வெளிநாடுகளுக்கு—8 ஷில்லிங் பி. பி. ஓ. உங்கள் விலாஸங்களை ஆங்கிலத்தில் எழுதவும்.

PROFESSOR,

B. S. DHAMI (MESMERIST)

(G. M.) JULLUNDUR City, (Pb.)

விரும்புவது வகுப்புவாத வசனங்கள் நிறைந்த படங்களை அல்ல என்பதைத் தாங்கள் நடத்திய தேர்தல்களின் மூலம் மேற்கண்ட நகர ரஸிகர்கள் நிரூபித்து விட்டார்கள். தான் படும் கஷ்டங்களையும், அன்றாட வாழ்க்கை அனுபவங்களையும் பிரதிபலிக்கும் படங்கள் வகுப்பு வெறியைச் சக்காமல் - கட்சிமாச்சரியங்களை எதிரொலிக்காமல் - அவரவர் மதக் கோட்பாடுகளை கேலி செய்யாமல்— நல்ல முறையில் உணர்ச்சி பொங்க நடிப்பவர்களைத் தாங்கி வெளிவருவதையே அவர்கள் விரும்புகிறார்கள். இதனைப் பட முதலாளிகளுக்கு அறியப்படுத்தி விட்டார்கள் ரஸிகர்கள். ரஸிகர்களுக்குள் பாகுபாட்டையும், பேதத்தையும், வெறுப்பையும் கிளப்பி படங்கள் இதுவரையில் வெளிவந்தமைக்குக் காரணம் பட முதலாளிகள் கானல் நீரை உண்மையென நம்பி கருத்து அழிந்ததுதான். இவ் விதம் எடுக்கப்பட்ட ஒரு சில படங்கள் ஏதோ வெற்றியடைந்திருக்குமேயானால் அதற்குக் காரணம் வேறாக இருக்குமேயொழிய மறுமலர்ச்சியின் பெயரால் வெறுக்கத் தக்க வசனங்களுடன் அவைகள் திரையிடப்பட்டதனால் அல்ல!

எஸ். எஸ். பொன்னுசாமி,
கரூர்.

"அந்தமான் கைதி"யில் நாகரீக ஜோடியாகத் தோன்றி நடனம் ஆடுகின்றனர் லலிதா-பத்மினி சகோதரிகள்.

சங்கீதமா, சொற்பொழிவா?

ஒரு கலை முன்னுக்கு வந்திருக்கிறது என்றால் அது எல்லா அம்சங்களிலும் பரிபளிக்கவேண்டும். உதாரணமாக, சினிமாக்களில் எல்லோராலும் விரும்பப்படும் சங்கீதத்தை எடுத்துக் கொள்வோம். சங்கீதம் என்பது சினிமாவில் வரவரக் குறைந்து கொண்டு, சொற்பொழிவு ஆகிக்கொண்டு வருகிறது. பாடிக்கொண்டேயிருக்கும் பொழுது "காதல் மொழி பாவாய், கனவோ நம் வாழ்வில் ஓர்" என்று பேச ஆரம்பித்து விடுகிறார்கள். இதுபோன்று சொற்பொழிவு புகுத்தப்படாமல், கர்னாடக மெட்டுகளாகவோ அல்லது நம்மிடையே சகஜமாகப் பழகிவிட்ட ஹிந்தி மெட்டுகளாகவோ போட்டு அமைக்கவேண்டும். மற்றும் 'எருமைக் கன்னுகுட்டி, பன்னிக் குட்டி" போன்ற பாட்டுகளைக் கேட்கும்பொழுது ரஸிகர்களுக்கு எவ்வளவு அருவருப்பாயிருக்கிறது தெரியுமா!

கே. எஸ். ரங்காச்சாரி,
கும்பகோணம்.

சினிமா சங்கீதம்

படங்களில் வெளியாகும் பாடல்கள் அனைத்தையும் இசைத் தட்டுகள் மூலம் வெளியிடுவதனால் ஒரு பயனும் இல்லை. ஒரு படத்தில் இருக்கும் எல்லாப் பாட்டுகளையும் இசைத் தட்டுகளில் பதிவு செய்து வெளியிட்டால், பொது ஜனங்களுக்கு அப்பாடல்களைக் கேட்டுக் கேட்டு சலித்துவிடும். சிலர் நல்ல சங்கீதத்தைக் கேட்கவே படம் பார்க்கச் செல்வார்கள். இசைத் தட்டுகள் வாயிலாக ஒரு குறிப்பிட்ட படத்தின் பாடல்கள் அனைத்தையும் கேட்டுவிட்டால் அப்படத்தைப் பார்க்க அவர்களுக்கு அவ்வளவு ஆர்வம் இருக்காது. ஆகவே, ஒரு படத்தின் பாட்டுகள் அனைத்தையும் இசைத் தட்டுகளில் பதிவு செய்வது கூடாது. சில நல்ல பாட்டுகளையே வெளியிட வேண்டும் என்பது என் கருத்து.

ராஜலக்ஷ்மி பொன்னையன்,
கொழும்பு.

இந்தியாவின் தலைசிறந்த பட்டணம் பொடி

காலையில் எழுந்தவுடன் சுறுசுறுப்புடனிருக்க
ஒரு சிட்டிக்கை

உடல் சுத்தி செய்து உண்டி அருந்தி உறுதியுடன்
உழைப்பிலிறங்க ஒரு சிட்டிக்கை

பகல் போஜனத்திற்குப்பின் பரவசமடைய
ஒரு சிட்டிக்கை

மனோகரமான மாலை வேளையில் மனநிம்மதியுட
னிருக்க ஒரு சிட்டிக்கை

பெண்டு பிள்ளைகளுடன் உண்டு களித்து
உறங்கப்போகுமுன் ஒரு சிட்டிக்கை

T.A.S. ரத்தினம் பட்டணம் பொடி

T.A.S. ரத்தினம் பிரதர்ஸ், தபால் பெட்டி 1151, வண்ணாரப் பேட்டை, மதராஸ்.

"ஹல்லோ, டார்லிங்! குட்மார்னிங்" என்று கதா நாயகனை பி. கே. சரஸ்வதி வரவேற்கிறாரோ —"அந்தமான் கைதி" தமிழ்ப் படத்தில்?



பிரபல டைரெக்டர் மெஹபூப் ஹிந்தி, தமிழ் ஆகிய பாஷைகளில் தயாரித்திருக்கும் "ஆன்" வர்ணப் படத்தில்" நடிக்கும் திலீப் குமார்.

நீங்கள் எவ்வளவோ பாஷன்களைப் பார்த்திருப்பீர்கள். இது அந்தமான் பாஷன்! "அந்தமான் கைதி" படத்தில் அங்கமுத்து.

"நாயாய் பிறக்கினும் நக்ஷத்திரத்தின் வீட்டில் இருக்கணும்" என்று நாம் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும்! இடுப்புயரமுள்ள இந்த வேட்டை நாயை மஹாலிங்கம் தயாரித்து வரும் "சின்ன துரை" தமிழ்ப் படத்தில் (எஸ். வரலக்ஷ்மியுடன்) காணலாம்.

இது செய்தி

தியேட்டர்களில் கட்டணம்

சினிமா தியேட்டர்களில் கட்டணங்களைக் கட்டுப்படுத்தும் சென்னை சர்க்காரின் புதிய உத்தரவு தியேட்டர் சொந்தக்காரர்களின் உரிமையில் தலையிடுவதாக இருப்பதாகவும், லைசென்ஸ் அதிகாரிகளுக்கு கட்டுப்பாடு செய்வதற்கான அதிகாரத்தைக் கொடுத்திருப்பது உசிதமில்லை என்றும் வற்புறுத்தி இம்மாசம் 5-ம் தேதி தென்னிந்திய பிலிம் வர்த்தக சம்மேளனத்தின் சார்பில் ஒரு தூது கோஷ்டியினர் மந்திரி ஸ்ரீ. சீதாராம ரெட்டியை சந்தித்து விண்ணப்பித்துக் கொண்டனர். உள் நாட்டு இலாகா காரியதரிசி ஸ்ரீ. புல்லா ரெட்டியையும் தூதுகோஷ்டியினர் பேட்டி கண்டனர்.

ரஷ்யாவின் யோசனை

இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே கலாசார உறவை பலப்படுத்துவதற்காக சில செய்திப் படங்களை கூட்டாகத் தயாரிக்கலாம் என்று ரஷ்ய சினிமாப் பட தூதுகோஷ்டித் தலைவர் என். செமினேவ் யோசனை கூறியிருக்கிறார். இந்திய அரசாங்க சினிமாப்பட பிரிவின் ஒத்துழைப்புடன் இது போன்ற படங்களை தயாரிக்க இந்திய அரசாங்கத்தின் அனுமதி தேவை என்று அவர் கூறினார். தமது யோசனை ஏற்கப்படுமானால் ரஷ்ய நாட்டு 'கேமிராமென்கள்' உடனடியாக வேலை ஆரம்பிப்பர் என அவர் தெரிவித்தார். இதுபோன்ற படங்களைத் தயாரிப்பதற்கு செலவை இரு அரசாங்கங்களும் கூட்டாக ஏற்கவேண்டும் என்றும் இந்தியா 35 சதவிகித செலவை ஏற்றுக்கொண்டால் போதும் என்றும், மீதிசெலவை ரஷ்யா ஏற்றுக்கொள்ளும் என்றும் தெரிவித்தார். கடைசியாக வந்த செய்தியிலிருந்து இந்த யோசனையை இந்திய சர்க்கார் நிராகரித்துவிட்டது தெரிகிறது.

"டெலிகலர்" படம்

ஹாலிவுட் ப்ரொட்யூஸர்-டைரெக்டர் டாக்டர் அலெக்ஸாண்டர் மார்க்கி இந்தியாவில் புது மாதிரியான "டெலிகலர்" படம் ஒன்றை எடுக்கப் போகிறாராம். கலிபோர்னியாவிலுள்ள உலக ஆராய்ச்சிக் கழக டைரெக்டர் டாக்டர் கொடாக் கண்டு பிடித்த முறை இது. இந்த மாதிரி கலர்ப்பட முறையொன்றை ஜெர்மானியர் பத்து ஆண்டுகளுக்கு முன் கண்டு பிடித்தார்கள். ஆனால் யுத்தத்தோடு அது போய்விட்டது. இந்த 'டெலிகலர்' முறை அதினின்று மாறுபட்டதாகும் என்று டாக்டர் மார்க்கி சொன்னார். இந்தக் கலர் முறைக்கு

வட இந்தியாவில் பல ஹிந்திப் படங்களில் நடித்தும், டைரெக்ட் செய்தும், சர்க்காருக்குப் பல செய்திப் படங்களைத் தயாரித்துக் கொடுத்தும் நல்ல அநுபவம் பெற்றுள்ள பிரபல தமிழ் நடிகர் பி. எஸ். ஸ்ரீனிவாஸ ராவ் தமிழ் நாடு திரும்பியிருக்கிறார். அவர் இனி தமிழ்ப் படங்களைத் தயாரிப்பதில் ஈடுபடுவார் என்று தெரிகிறது.

"மானவதி" தெலுங்குப் படம் ஏற்கனவே ஆந்திர தேசத்தில் வெளிவந்து விட்டது. தமிழ்ப் படம் இம்மாதம் தமிழ் நாட்டில் வெளியிடப்பட்டது. (ஸி. எச். நாராயணராவ், மாதுரி தேவி.)

பிரத்தியேக பில்ம்களோ விசேஷ லென்ஸ்களோ, தனி மாதிரி கேமிராக்களோ, புது மாதிரி ரசாயன சாலையோ தேவையில்லை. இப்போதுள்ள சாதனங்களைச் சற்று மாற்றியமைத்துக் கொண்டால் போதுமாம். செலவும் அதிகமாயிராதாம். டாக்டர் மார்க்கி தயாரிக்கவிருக்கும் இந்தப் படத்தின் பெயர் "வலப் பரிசு'. இந்தப் படத்தில் இந்தியர்களே நடிப்பார்கள்.

ரஞ்சன் நடன டைரெக்டராகிறார்

ரஞ்சன் நடிக்கும் அடுத்த படத்திற்கு அவரே நடன-டைரெக்டராகவும் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. அந்தப் படத்திற்கான சங்கீத சாகித்யங்களையும் அவரே இயற்று வாராம்.

பாரதி பாடல்கள்

சென்னை அரசாங்கத்தின் அனுமதி பெறாமல் பாரதியாரின் பாட்டுக்களை. சினிமா படங்களிலோ, இசைத் தட்டுகளிலோ பதிவு செய்யக் கூடாது என்று வலியுறுத்தி அரசாங்கத்தார் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கை கூறுவதாவது :

"அரசாங்கத்தின் அனுமதி பெற்றே பாரதியாரின் பாடல்களை படத் தயாரிப்பாளர், இசைத்தட்டு தயாரிப்பாளர் முதலியோர் உபயோகிக்கலாம். அரசாங்கத்தின் அனுமதியைப் பெறுவதில் கஷ்டமேதவு? - இல்லை. சினிமாப் படத்தில் பாரதியாரின் பாட்டுக்களை சேர்ப்பதாயிருந்தால் பாட்டுக்கு ரூ. 200 வீதமும் இசைத் தட்டுகளில் பதிவு செய்வதாயிருந்தால் சம்பந்தப்பட்ட இசைத் தட்டுகளின் விற்பனையில் 2½ சதவிகிதத்தையும் "ராயல்டி" யாக அரசாங்கத்துக்குக் கொடுத்தால் அனுமதி கிடைத்துவிடும்."

நக்ஷத்திரங்களுக்கு வரவேற்பு

சேலத்துக்கு விஜயம் செய்திருக்கும் அமெரிக்க சினிமா நக்ஷத்திரங்களான ராட் காமிரான், ஸீஸர் ரொமிரோ, திருமதி ராட் காமிரான், மேரி வின்ஸர் ஆகியோருக்கும், பிரபல அமெரிக்க டைரெக்டர் வில்லியம் பர்க், சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் டைரெக்டர் டி. ஆர். சுந்தரம், எல்லிஸ். ஆர். டங்கன் ஆகியோருக்கும் இம்மாதம் 2-ம் தேதி சேலம் நகர சபையினரால் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. சேலம் மாடர்ன் தியேட்டர்ஸுடன் சேர்ந்து கூட்டாக "ஜங்கிள்" (காடு) என்ற சினிமாப் படத்தை தயாரிப்பதற்காகவே மேற்படி அமெரிக்க நக்ஷத்திரங்களும், டைரெக்டரும் சேலத்திற்கு விஜயம் செய்துள்ளனர். நடிகை மேரி வின்ஸர் பேசுகையில் தங்களுக்களித்த வரவேற்புக்கு நன்றி தெரிவிப்பதாகக் கூறினார். "இந்தியாவிலுள்ள சேலம்" என்பதை ஆங்கிலத்தில் சொல்லி "ரொம்ப நல்லா இருக்குது" என்று திருமதி மேரி வின்ஸர் தமிழில் கூறியதும் அங்கிருந்த எல்லோருக்குமே சிரிப்பை உண்டாக்கியது.

மோட்டார் விபத்து

பிரபல ஹிந்தி சினிமா நக்ஷத்திரங்களான கீதா பலி, தேவ் ஆனந்த் ஆகிய இருவரும் சென்ற மாத இறுதியில் கார் விபத்துக்குள்ளாகி காயமடைந்தனர் தேவ் ஆனந்தும், கீதா பலியும் "ஜால்" என்ற சினிமா பட பிடிப்புக்காகச் சென்றவர்கள் காரில் ஒன்றாகத் திரும்பி வந்து கொண்டிருந்தனர். தேவ்ஆனந்த் காரை ஓட்டி வந்தார். திடீரென்று கார் நிலைதவறி ரோடை விட்டு விலகி ஒரு

மரத்தில் மோதியது. காரைத் திருப்புவதற்கான சக்கரம் தேவ் ஆனந்தின் மார்பில் பலமாக மோதியதால் அவர் படுகாயம் அடைந்தார். கீதா பலி சிறிய காயங்களுடன் தப்பினர்.

அரங்கேற்றங்கள்

சென்ற மாதம் 13-ம் தேதி, குமாரி எஸ். மீராவின் பரதநாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. குமாரி மீரா, கே. லலிதாவிடம் சிக்ஷைபெற்ற ஸ்ரீ ஸரஸ்வதி கான நிலயத்தின் மாணவியாவாள்.

சென்ற மாதம் 23-ம் தேதி குமாரி ஸரஸ்வதியின் பரத நாட்டிய அரங்கேற்றம், தஞ்சையில் நடைபெற்றது. இவர் பிச்சையா பிள்ளையின் சிஷ்யை.

இம் மாதம் 3-ம் தேதி குமாரி நளினியின் அரங்கேற்றம் சென்னை ரஸிக ரஞ்சனி சபையில் நடைபெற்றது. வைபவத்துக்குத் தலைமை வகித்த ஸ்ரீ வி. வி. ஸ்ரீனிவாஸ ஐயங்கார் நடனத்தில் பேபி நளினி தேர்ச்சியடைந்திருப்பதைப் பாராட்டிப் பேசினர்.

சென்ற மாதம் 27-ம் தேதியன்று, செங்கல்பட்டு கணபதி டாக்கீஸில், பேபி புஷ்பாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. ஆர். திருவேங்கட நட்டுவனரால் பயிற்சி அளிக்கப்பட்டவள் பேபி புஷ்பா.

நாட்டியக் கச்சேரிகள்

இம் மாதம் 8-ம் தேதி, பொன்மலையில், எண்கண் ராஜலக்ஷ்மி கோஷ்டியினரின் பரத நாட்டியக் கச்சேரி நடைபெற்றது. பொன்மலை, நடன கலா மன்றத்தினரின் சார்பில் மேற்படி கச்சேரி நடைபெறற்றது.

மதராஸ் கிருஸ்தவக் கல்லூரி, கலைக் கழகத்தின் ஆதரவில் சென்ற மாதம் 23-ம் தேதி மேற்படி சங்கத் தலைவரின் தலைமையில் குமாரிகள் பிரேமலதா, வஸந்தமாலா ஆகியவர்களின் பரத நாட்டியக் கச்சேரி நடைபெற்றது.

கல்கத்தாவில் தங்கமணி

"ரத்ன தீபம்" தமிழ்-ஹிந்திப் படங்களில் நடனமாட கல்கத்தாவுக்குச் சென்ற குமாரி ஆர். தங்கமணி அங்குள்ள ரஸிகர்களின் ஆதரவை பெரிதும் அடைந்துவிட்டாராம். அந்நகரின் பல சபாக்களில் அவரது பரத நாட்டியக் கச்சேரிகள் நடைபெற்றன. அங்கு நடைபெற்ற பிலிம் திருவிழாவின்போது ஒரு நாள் அவரது நடனம் இருந்தது. இம் மாத இறுதியில், கல்கத்தாவில் ஆரம்பமாக விருக்கும் அகில இந்திய சங்கீத விழாவில்கூட அவருடைய நடனக் கச்சேரி இருக்கிறதாம்.

"நீதிப் போர்" நாடகம்

சென்ற மாதம் 27-ம் தேதி, கலா நிலயத்தாரின் "நீதிப் போர்" என்ற சரித்திர நாடகத்தின் துவக்க விழா சென்னை வண்ணாரப் பேட்டையில் நடைபெற்றது.

"கண்கள்" நாடகம்

சேவாஸ் ஸ்டேஜ் ஸர்வீஸ், நடித்த "கண்கள்" என்ற சமூக நாடகம் சென்ற மாதம் 16, 17-ம் தேதிகளில் மயிலை ஆர். ஆர். சபாவில் நடைபெற்றது. ராஜாமணி என்பவர் எழுதிய இந்த நாடகத்தில் எஸ். வி. சஹஸ்ரநாமம் கதாநாயகனாக நடித்ததுடன் நாடகத்தையும் அவரே டைரெக்ட் செய்தார்.

அனைவருக்கும் ஆனந்தம் அளிப்பது

தலைமை ஆபீஸ்:
28 வெங்கடாஜல முதலி தெரு.
பீ. டி. சென்னை.
கிளை : 82 காட்டுபிள்ளையார் கோயில் தெரு
ஜீ. டி. சென்னை.
89 பாண்டி பஸார், தி. நகர், சென்னை—17

ஸ்ரீ சுகுமாரின்
சின்னதுரை
எம்.எஸ்.பிக்சர்ஸ் வெளியீடு..

வடுவூராரின் அற்புத
நாவல், மஹாலிங்கத்
தின் டைரெக்ஷன்,
நானுவித ஆடையலங்
காரம், நக்ஷத்திர நடி
கர்கள் இவை அனைத்
தும் ஒருங்கே அமை
ந்த படம் இது. ஜுன்
மாதம் ரஸிகர்களை மகி
ழ்விக்க திரைக்கு வரும்.
Parthan

நாடகத்தில் மற்றும், வி. கே. ராமஸ்வாமி, வி.கே. கார்த்திகேயன், பண்டரி பாய் போன்ற பல சினிமா நடிக நடிகைகளும் பங்கெடுத்துக் கொண்டனர்.

வ. ரா. நூல் நிலையம்

காலஞ்சென்ற பிரபல எழுத்தாளர் ஸ்ரீ. வ. ரா. வின் பெயரில் கும்பகோணத்தில் ஒரு நூல் நிலையத்தை நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதற்கு நிதி திரட்டவென, அவ்வூர் கலைமகள் நாடக மன்றத்தார், "அத்தான்" என்ற நாடகத்தை நடிக்கப் போகிறார்களாம்.

பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

பம்பாயில் அரிய சேவைகள் செய்து வரும் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தினர் தங்களுக்கென சொந்தக் கட்டடம் எழுப்பத் தீர்மானித்து அதற்கான ஏற்பாடுகளில் முனைந்திருக்கின்றனர். இதற்கு நிதி திரட்ட டி. கே. எஸ். சகோதரர்கள் ஐந்து நாடகங்கள் நடத்தித் தர இசைந்துள்ளது போற்றத் தக்கது. ஏப்ரல் மாதம் நடைபெற விருக்கும் இந்த நாடகங்களுக்கு பம்பாயிலுள்ள தமிழர்கள் பேராதரவு அளித்து உதவுவது அவசியம்.

அறிவிப்பு

வேலை வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொள்ளும் அபிமானிகளுக்கு தெரிவிப்பது யாதெனில்!

நான் தனிப்பட்ட முறையில் எந்தவிதமான ஸ்தாபனமும் இன்னும் நிறுவவில்லை. எனவே நீங்கள் அடிக்கடி எனக்கு கடிதமெழுதி உங்களின் நேரத்தை வீணாக்கிக் கொள்ள வேண்டாமென்று மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் அன்புள்ள,
திருச்சி லோகநாதன்,
நெ. 11, மருந்தீஸ் தெரு,
மைலாப்பூர், சென்னை-4

சங்கீத அரங்கேற்றம்

கும்பகோணம், பிரபல ஹோமியோபதி டாக்டரான வி. ஆர். மூர்த்தி, தமது குமாரன் சிரஞ்சீவி ஸ்ரீனிவாஸனுடைய சங்கீத அரங்கேற்றத்தை நடத்தி வைத்தார். இம்மாதம் 5-ம் தேதி ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சன்னிதியில் நடைபெற்ற இந்த அரங்கேற்றம் ஸப்ஜட்ஜ் வி. சுந்தரராம அய்யர் தலைமையில் நடைபெற்றது. அன்று பி. கிருஷ்ணசாமி அய்யங்கார் பிடில், அரியலூர் எஸ். கணேச அய்யர் மிருதங்கம், கிருஷ்ணாபுரம் எம். வைத்தியநாத அய்யர் கடம் ஆகிய பக்க வாத்தியங்களுடன் அன்று கச்சேரி நடந்தது.

வீர பாஸ்கரன்

இம் மாதம் 14ம் தேதி முதல், "வீர பாஸ்கரன்" அல்லது "புரட்சி வீரன்" என்ற தமிழ்ப் படம் ஒன்று தமிழ் நாட்டின் சில முக்கிய நகரங்களில் திரையிடப்பட்டுள்ளது. இப்படம் பக்ஷிராஜாவின் தயாரிப்பாகும் ஏற்கெனவே வெளிவந்த "பாதல்" என்ற ஹிந்திப் படத்தின் தமிழ்ப் பதிப்பாகும் இப்படம். மதுபாலா, பிரேம்நாத், பூர்ணிமா, ஹீராலால் ஆகப் பலர் நடித்துள்ள இப்படம், நேர்மையும், சத்தியமும் குறிக்கோளாகக் கொண்ட ஒரு வீரனின் கதையாம். இப்படம் ஜெமினி வெளியீடு.

திருமகள் டாக்கீஸ்

சைதாப்பேட்டையிலுள்ள திருமகள் டாக்கீஸை, சிவகங்கை ராஜாவின் புத்திரர் விலைக்கு வாங்கி அதன் ஆரம்ப விழாவைச் சிறப்பாக, சென்ற மாதம் 26-ம் தேதி நடத்தினர். தேநீர் விருந்துக்குப் பின் ஆங்கிலப் படம் ஒன்று திரையிடப்பட்டது.

ஆசிரியர்களுக்கு வரவேற்பு

சென்ற மாத இறுதியில், துருக்கிப் பத்திரிகைப் பிரதிநிதிகள் நால்வர் சென்னைக்கு விஜயம் செய்திருந்தனர். அவர்களுக்கு, "ஆனந்த விகடன்" ஆசிரியர் எஸ். எஸ். வாஸன், ஜெமினி ஸ்டுடியோவில் ஒரு வரவேற்பளித்து உபசரித்தார். வரவேற்பு வைபவங்களுக்குப் பின் பிரதிநிதிகளுக்கு ஜெமினி படங்களிலிருந்து சிற்சில பகுதிகள் திரையிட்டுக் காட்டப்பட்டன.

மூன்று தலைமுறை

[ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன்; விலை: 8 அணா; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிட்., சென்னை-18]

எட்டணா விலையில் நல்ல சிறு நாவல்களையும் வெளியிட முடியும் என்பதற்கு, 'மூன்று தலைமுறை' என்ற இப் புத்தகத்தை எழுத்தாளர்கள் ஒரு உதாரணமாகக் கொள்ளலாம். கழுதை ஒன்றும், குட்டிச் சுவர் ஒன்றும் கதை கூறுவது போல எழுதியிருக்கிறார் ஆசிரியர். எளிய நடையிலே ருசிகரமாக இருக்கிறது கதைப் போக்கு.

மணி விளக்கு

[ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன்; கிடைக்குமிடம்; அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18; விலை ரூ. 3]

அமுத நிலையத்தார் அமைப்பில் மட்டுமின்றி தரத்திலும் நல்ல நல்ல புத்தகங்களை வெளிக்கொண்டு வருகின்றனர். அவர்கள் சங்கநூற் காட்சிகளை சில புத்தகங்களில் வெளியிடத் தீர்மானித்து, முதல் புத்தகமாக 'மணி விளக்'கைக் கொண்டுவந்துள்ளார்கள். அவர்களது இந்த முயற்சி பாராட்டத்தக்கது. அந்தப் பணிக்கு மிகப் பொருத்தமான கி. வா. ஜகந்நாதனை ஆசிரியராகத் தேர்ந்தெடுத்ததை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இப் புத்தகத்தில் நற்றிணையிலிருந்து ஒன்பது பாடல்களை யெடுத்து விரிவாக்கி, தெள்ளிய நடையில் விளக்கியிருக்கிறார். படித்துப் பாதுகாக்க வேண்டிய புத்தகம் இது.

மலர் மாலை

[ஆசிரியர்: எல்லார்வி; விலை: ரூ. 1; கிடைக்குமிடம்: மரகதா பிரசுராலயம், மதராஸ்-14]

சிறு கதை உலகில் எல்லார்வி நன்கு பரிச்சயமானவர். அவர் எழுதியுள்ள பல சிறு கதைகளின் தொகுப்புத்தான் 'மலர் மாலை'. கதைகளில் 'மலர் மாலை', 'தூரத்துப் பச்சை' இரண்டும் சிறப்பாக இருக்கின்றன. மற்றவைகளும் சுவாரஸ்யமாகவே இருக்கின்றன. அழகான அட்டைப் படம் புத்தகத்தை அலங்கரிக்கிறது.

தாகூர் ஞாபகார்த்த மாணவர் வாசகசாலையினர் வெளியிட்டுள்ள, பத்தாவது ஆண்டு விழா மலர் கிடைக்கப் பெற்றோம். அட்டையில் தாகூர் படமும், உள்ளே சில படங்களும் உள்ளன. பலரது கட்டுரைகள், நாடகங்களும் இதில் இருக்கின்றன.

பிரதாபன்

[இணைத்தது: ''சிவம்''; விலை: 3 அணா; கிடைக்குமிடம்: இராஜா பதிப்பகம், முடங்கியார் ரோடு, இராஜபாளையம்]

காலஞ் சென்ற நடிகர் பி. யு. சின்னப்பாவைப் பற்றிய புத்தகம் இது. அவரது வாழ்க்கைக் குறிப்புடன் ஆசிரியர் அபிப்பிராயமும் காணப்படுகிறது.

கேட்ட வரம்

[ஆசிரியை: ''அநுத்தமா''; விலை: ரூ. 4-8-0; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18.]

அதிகமான சிக்கல்கள் இல்லாமல், விறு விறுப்பான நடையில் இருக்கிறது இந்த நாவல். ஆசிரியையின் நடையும் எளிமையாக இருக்கிறது. கிராமாந்திர சூழ்நிலையை, முக்கியமாக ஸ்ரீராமநவமி உத்ஸவத்தை, வெகு இயற்கையாக வர்ணித்திருக்கிறார். சம்பாஷணைகளும் இயற்கையாக இருக்கின்றன. படிக்க வேண்டிய விரஸமில்லாத நாவல் இது.

சித்ரா

[ஆசிரியர்: எஸ். கிருஷ்ணஸ்வாமி; விலை: ரூ. 1; கிடைக்குமிடம்: 3, திருமலைப்பிள்ளை ரோடு, சென்னை-17]

சினிமாவுக்கான புது மாதப் பத்திரிகை இது. கேள்வி-பதில், பட விமர்சனம், படக் கதை, செய்திகள் யாவும் இதில் அடங்கியுள்ளன.

ஹோமியோபதி

[தொகுத்த ஆசிரியர்: டாக்டர் வி. ஆர். மூர்த்தி; கிடைக்குமிடம்: ஹோமியோ ஹவுஸ், கும்பகோணம்; விலை: 8 அணா]

டாக்டர் வி. ஆர். மூர்த்தியின் ஹோமியோ

13433

ஹவுஸ் ஸ்தாபனத்தினின்றும் வெளிவருகிறது இம் மாதப் பத்திரிகை. ஒவ்வொரு இதழிலும் சிற்சில வியாதிகள் பற்றியும், அவைகளுக்கான ஹோமியோபதி மருந்துகளும் விபரமாக அடங்கியுள்ளன. தவிர, சில துர்ப் பழக்கங்களினால் ஏற்படக் கூடிய கெடுதல்களும் கூறப்பட்டுள்ளது.

பானுசந்திரா

[ஆசிரியர்: இராசரத்தினம்; விலை: 5 அணா; கிடைக்குமிடம்: சுசீலா பிரசுரம்; 41, பிராட்வே, சென்னை-1]

ஏழை வாலிபன் பாலசந்தருக்கும், பணக்காரர் மகள் பானுமதிக்கும் காதல் ஏற்படுகிறது. பல இடைஞ்சல்களுக்குப் பின் காதல் வெற்றி பெறுகிறது. இந்த சாதாரணக் கதைதான் பானுசந்திரா என்ற சிறு நாவல்.

அற்புதக் கோலி

[ஆசிரியர்: 'சங்கர்'; விலை: 2 அணா; கிடைக்குமிடம்: சங்கர் பதிப்பகம்; 47, பாஷ்யகாரலு நாயுடு தெரு, சென்னை-1]

சிறுவர்களுக்கான புத்தகம் இது; ஆனால் அவர்களுக்கு ஏற்றதல்ல. பிஞ்சு மனத்திலே கொள்ளை, கொலை இப்படியான சம்பவங்களைப் புகுத்த நினைப்பதே தவறு.

மிட்டாய்

[ஆசிரியர்: நாவுக்கரசு; விலை: 2 அணா; கிடைக்குமிடம்: த. பெ. 1793, சென்னை-1]

சிறுவர்களுக்கான மாதம் இருமுறைப் பத்திரிகை "மிட்டாய்". பெயரைப் போலவே உள்ளே உள்ள கதைகளும் சிறுவர்கள் ரஸிக்கும் முறையில் எளிய நடையில் இருக்கின்றன. அட்டைப் படம் அழகாக இருக்கிறது.

புத்தி, புத்தி

[ஆசிரியர்: பா. கணேசன்; விலை: 1 அணா; கிடைக்குமிடம்: சுமதி வெளியீடு: 78, மேலவீதி, சிதம்பரம்.]

குறும்புக்காரப் பையன் ஒருவன் தெரு விளக்கு 'பல்பு'களை உடைக்கிறான். பிறகு, அவன் தூக்கத்திலே கண்ட பிரமைக் காட்சி மூலம் புத்தி திருந்துகிறான்.

கடல் ராஜா
விசித்திர மாளிகை
சினிமா உலகம்
வெற்றி பரிசு

[ஒவ்வொன்றும் விலை: 2 அணா; கிடைக்குமிடம்: விக்டரி பப்ளிகேஷன்ஸ், சென்னை—1.]

மேற்கண்ட நான்கு புத்தகங்களும் சிறுவர்களுக்கான சிறு கதைப் புத்தகங்கள். அவைகளின் ஆசிரியர் "ருசி".

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL / 688

... விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 ... (Special) ...

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)

Government Registered No. 266.

12 நாட்கள் ... (ஸ்பெக் ஜெல்லி) ... விலை ரூ. 12-8-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 ...

SEENU & CO., Post Box, 1638, (R) MADRAS-1.

134, SERANGOON ROAD, சிங்கப்பூர்.

NEW COLOMBO MEDICAL STORES, 62, MAIN ST., கொழும்பு-11


எங்கும் அமோக வரவேற்பு!
சென்னை
பாரகன்
பிராட்வே
மற்றும் பல நகரங்களிலும்...
நாகூர் ஸினி ப்ரொடக்ஷன்ஸ்
NCP
அமரகவி
டைரெக்ஷன்
F. நாகூர்
ஸ்டுடியோ
நியூடோன்
நடிகர்கள்
M.K. தியாகராஜ பாகவதர்
T.R. ராஜகுமாரி,
N.S. கிருஷ்ணன், T.A. மதுரம்,
M.G. சக்ரபாணி, லலிதா
பத்மினி
மற்றும் பலர்
Parthan

குடும்ப நக்ஷத்திரம்

சம்பந்தம் ☆☆☆

ஒன்றுமே படிக்கத் தெரியாத முட்டாள் மனைவியாக இருந்தாலும், வாழ்க்கையில் சிரமமாகத் தான் இருக்கிறது. அதிகம் படித்த அதி மேதாவியான மனைவியாக இருந்தாலும் வாழ்க்கையில் அதை விட சிரமமாகத் தான் இருக்கிறது. அதற்காக கல்யாணம் இல்லாமலே இருக்க முடிகிறதா!

ராமசுப்பன் மனைவி கமலா, இரண்டாவது இலக்கத்தைச் சேர்ந்தவள். பி.ஏ. வரை படித்து அவை அவைகளில் பரிசு வேறு வாங்கினவள். மாணவர்கள் உலகத்தில் கமலாவைத் தெரியாதவர்கள் ஒருவருமே இருக்க மாட்டார்கள். படிப்பிலும், பேச்சிலும், நடிப்பிலும், விளையாட்டிலும் எல்லாவற்றிலும் அவள் தான் முதல். அழகிலும் குறைவில்லை. எப்பொழுதும் புன்சிரிப்புத் தவழும் பொன் முகம். அவள் உடுத்திக் கொள்ளும் பாணி, தன் நீண்ட கூந்தலை வாரி முடியிட்டுக் கொள்ளும் அழகு, அணியும் நகை—அத்தனையும் மறு நாளிலிருந்தே பரவிவிடும். மாணவர்கள் அனைவரும் அவளைப் பற்றிய சொப்பனங் கண்டு கொண்டிருந்தார்கள்.

ஆனால், கமலாவோ ஒரு புரியாத புதிராகவே யிருந்தாள். ஒரு வண்ணத்துப் பூச்சி போல் அழகுற யதேச்சையாகத் திரிவாளே யொழிய, எதையும் சேமித்துக் கொண்டு வரத் தெரியாது. ஆனால் நேர்மையான குடும்ப வாழ்க்கையில் மோகங் கொண்டவளாகவே தென்பட்டாள். படிப்பு முடிந்ததும், தன் மாமா பிள்ளை ராமசுப்பனையே மனமுவந்து திருமணம் செய்து கொண்டாள்.

ராமசுப்பனும் அவளுக்குச் சிறிதேனும் குறைந்தவனில்லை. பிரபல எம். ஏ. பட்டதாரி அவன். உத்தியோக உலகிலும் மிகவும் கீர்த்தி வாய்ந்தவன்.

சிறு கதை

கமலாவிடம் சிறு வயதில் சற்று பழகியிருந்ததால், அவளிடமிருந்த பலவிதமான சக்திகளை ஒன்றாகச் சேர்த்து, ஒரே கொள்கையின் பக்கமாகத் திருப்பி, அவளை ஒரு இலட்சிய மனைவியாக மாற்றி விடத் தன்னால் முடியும் என்று கருதியே கல்யாணம் செய்து கொண்டான்.

இந்த இளம் தம்பதியைக் காண்போர் யாவரும் பொன் மலர் நாற்றமுடைத்தாற் போன்ற சேர்க்கையைக் கண்டு சற்று பொறாமை யடைந்தார்கள் என்று கூடச் சொல்லலாம்.

நாட்கள் நடந்தன. அவர்கள் வாழ்க்கையும் வளம் பெறவே வந்தது.

அப்பொழுது கமலாவின் அண்ணன் கைலாசம் பம்பாயிலிருந்தான். அவன் ஒரு கலா ரஸிகன். முதலில் வட இந்தியாவில், அகில இந்திய ரேடியோ நிலையத்தில், டில்லி, பம்பாய், கல்கத்தா என்று அங்கங்கே வேலையிலிருந்தான். அது ஒன்றும் பிடிக்கவில்லை அவனுக்கு. உடனே வேலையை ராஜினாமா செய்து விட்டு, கொஞ்ச நாள் கையிலிருந்த பணத்தைச் செலவழித்துக் கொண்டு ஊர் சுற்றி வந்தான். அப்பொழுது தான் பூனாவில் அவனுக்கு ஒரு சினிமா நக்ஷத்திரம் பரிசயமானாள். அவளையே அவன் 'ரிஜிஸ்டர்' கல்யாணமும் செய்து கொண்டான். பிறகு பணத்திற்கு என்ன கவலை அவனுக்கு! உடனே வழக்கப்படி சினிமா டைரக்டராகவே ஆகிவிட்டான். ஒன்றிரண்டு படங்கள் எடுத்து வெற்றி யடைந்து விடவே அவனுடைய பெயரும் புகழும் எங்கும் பரவின.

ஒரு நல்ல தமிழ்ப் படம் எடுத்து வெற்றி காண வேண்டுமென்று பட்டணம் வந்தான். முதலில் கொஞ்ச நாள் கமலா வீட்டிலேயே யிருந்தான். பிறகு தன் குடும்பத்துடன் ஒரு தனி பங்களாவிற்குச் சென்று விட்டான்.

அப்பொழுது கமலாவின் அழகையும் திறமையையும் அவன் வீணாக்க விரும்ப

வில்லை. அவளை அநேக கோணங்களில் விதம் விதமாகப் படம் எடுத்து அங்கங்கே அழகுற மாட்டி வைத்தான். மேலும் கமலாவைத் தான் போகுமிடங்களுக்கெல்லாம் தன்னோடு அழைத்துச் சென்று சினிமா உலகைப் பற்றி, அவளுக்கு ஒரு போதை ஏற்படச் செய்தான். கல்லூரியில் படிக்கும் அந்தக் காலத்

'கலா' அன்று ஒத்திகையில் நடித்தாயே. அதுமாதிரியே இன்றும் நடித்துப் பேசு...'' என்று செல்லமாக அவள் கன்னத்தைக் கிள்ளப் போனான் கைலாசம்.

திலேயே கமலா நடிப்பிலும் வேஷப் பொருத்தத்திலும் பரிசு வாங்கினவளென்றால், இந்த, சூழ்நிலையில் அவளுக்கு சினிமாவின் மேல் சபல மேற்படக் கேட்பானேன்!

மெதுவாக அவ்வப்பொழுது ராமசுப்பனிடம் பேசும் பொழுதெல்லாம், சினிமா விஷயத்தைப் பற்றியும் கமலா பேசிக் கொண்டு வந்தாள். ஒரு நாள், தான் சினிமாவில் நடிக்கப் போவதாகக் கூடச் சொன்னாள். ராமசுப்பன் ஒன்றுமே பதில் சொல்லவில்லை; பேச்சை வேறு விஷயமாகத் திருப்பிக் கொண்டான். அச்சமயத்தில், அவன் 'கூடாது' என்று தடுத்திருந்தாலும், கமலா அதை மீறி விடுவாள் என்ற நிலையிலிருந்தாள்.

பிறகு ஒரு நாள் அந்த முதல் தமிழ்ப் படத்திலேயே தான் நடிக்கத் தீர்மானித்து விட்டதைத் தன் அண்ணனிடம் தெரிவித்தாள் கமலா. அவன் தான் எப்பொழுது, எப்பொழுது என்று காத்திருந்தவனாயிற்றே! அவன் ரொம்பவும் சந்தோஷப் பட்டுக் கொண்டான்.

அது 'வாழ்க்கைப் புயல்' என்ற சமூகச் சித்திரம். கதை, வசனம், பாட்டு, டைரெக்ஷன் எல்லாம் கைலாசமேதான். அதோடு கதாநாயகன் வேஷத்தையும் ஏற்றுக் கொண்டான். அவனுடைய சினிமா நக்ஷத்திர மனைவி படத்திலும் சொந்த மனைவியாகவே தோன்றினாள். கமலாவோ, அக் கதாநாயகன் மேல் தன் காந்தக் கண்ணைச் சொடுக்கி, அவன் வாழ்க்கையில் ஒரு பெரும் புயலை ஏற்படுத்திய வேசியாக நடித்தாள்.

அதி மும்முரமாக ஒத்திகையும் நடக்க ஆரம்பித்தது. கமலாவின் நடிப்பைக் கண்டு கைலாசமே திகைத்துப் போனான். உடனே விதம் விதமான வர்ண விளம்பரங்கள் பிரமாதப் பட்டன. "கமலா ராமசுப்பன் என்ற புதுமுகம் உங்களைப் பரவசத்தி லாழ்த்தப் போகிறது" என்றெல்லாம் போஸ்டர்கள் சுவற்றிற்குச் சுவர் ஒட்டிக் கிடந்தன. ரஸிகர்கள் அனை வரும் படத்தை வெகு ஆவலாக எதிர் பார்த்திருந்தார்கள்.

ஆனால், ராமசுப்பனின் மனம்தான் பெரும் புயலில் அகப்பட்டுக் கொண்டு



ஜி. விஸ்வநாதனின் டைரெக்ஷனில் தயா
ராகும் பெலிகன் பிக்சர்ஸின் "புயல்"
தமிழ்ப் படத்தில் புது முகம் சகுந்தலா.



சில தினங்களில் வெளிவரவிருக்கும்,
டைரெக்டர் ஆர். பத்மநாபனின்
"குமாரி" தமிழ்ப் படத்தில் மாதுரி தேவி.

தத்தளித்து நின்றது. அவன் ஆபீஸ் சேவகனிலிருந்து தலைமை குமாஸ்தா வரை இதே பேச்சுத்தான். சாதாரணமாகப் பேசிக் கொண்டாலும் பரவாயில்லையே! அப்பப்பா! ஆயிரமாயிரம் பேச்சுகள்! "ஐயா மோசம் போயிட்டாராமே!" என்பான் ஒருவன். 'அவர் மனைவிக்கும் அந்த சினிமா டைரெக்டருக்கும் ரொம்ப நாள் சினேகமாமே!' என்று ஏதோ அவர்கள் உறவை உண்மையில் தெரிந்தவன் போல் பேசுவான் வேறொருவன். இன்னும் அவரவர்கள் தங்கள் மனம் போன போக்கில் கேட்க, பேச வாய் கூசும்படியான அளவுகூட பேசிக்கொண்டார்கள். என்னதான் பெரிய ஆபீஸரா யிருந்தாலும் இந்த அபத்தப் பேச்சுக்களில் சில ராமசுப்பன் காதுகளுக்கு எட்டாமலா இருந்திருக்கும்! பாவம்! ரொம்பவும் மனம் குன்றிப் போனான் ராமசுப்பன்.

அதற்கேற்றாற் போல் அவன் பங்களாவிலும் கமலாவின் பிராபல்யம்தான் அசாத்தியமாக அடிபட்டது. வருவோர் போவோர் எல்லாம் கமலாவைத் தேடிக் கொண்டுதான் வந்தார்கள்; கமலாவைப் பற்றித்தான் பேசினார்கள்; கமலாவைத் தான் போற்றிப் புகழ்ந்தார்கள். கலா ரஸிகன் என்றும் கலைஞன் என்றும் சில பிரமுகர்கள் கூடி அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

இதற்கு நடுவில் கமலா, தன் கணவனுடன் பேசிப் பழக நேரம் எங்கே இருந்தது! ஏதோ இரண்டொரு வார்த்தைகள்; அதுவும் ராமசுப்பனை அகஸ்மாத்தாய் சந்தித்துக் கொண்டால்! அவனுக்குத் தான், வருவோருக்குப் பேட்டி கொடுக்கவும், கார் எடுத்துக் கொண்டு ஷூட்டிங் ஷூட்டிங் என்று ஊர் சுற்றி வரவுமே சரியா யிருந்ததே!

ராம சுப்பன் மனைவி என்று கமலா பிரபல்யம் அடைந்தது போக, சினிமா ஸ்டார் கமலாவின் கணவன் என்று ராம சுப்பன் பிரபல்யம் அடைய வேண்டிய நிலைமை ஏற்பட்டு வந்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

ராமசுப்பன் ஏதேதோ எண்ணினான். ஒன்றுமே புலப்பட வில்லை. ஏதோ அவனுக்குப் பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது. உடனே மூன்று மாத லீவிற்கு எழுதிப் போட்டு விட்டு தன் சிறு கடற்கரை பங்களாவிற்கு நிரந்தரமாகவே குடியேறி விட்டான். சாப்பாடு மாத்திரம் வீட்டிலிருந்து சமையற்காரன் கொண்டு போய்க் கொடுத்து வந்தான்.

சிவானந்த சரஸ்வதி, ரமண மகரிஷிகள், சுத்தானந்த பாரதியார் முதலிய பெரியோர்களுடைய புத்தகங்களை அதி கவனமாக வாசிக்க ஆரம்பித்தான் ராமசுப்பன். நாளடைவில் படித்து முதிர்ந்து ஏகாந்தமாக யோகாப்பியாசம் செய்யவும் பழகிக் கொண்டு விட்டான்.

'வாழ்க்கைப் புயல்' ஷூட்டிங் பிரமாதப் பட்டது. டைரெக்டர் கைலாசம் ஒவ்வொரு கட்டத்தையும் தீவிரமாக யோசித்து, ரஸித்து, 'ஷூட்டிங்' செய்தான். எடுத்த வரையில் அவனுக்கே பரம திருப்தி.

அன்று 'வாழ்க்கைப் புயலி'ல் ஒரு முக்கியமான கட்டம் ஷூட்டிங் நடக்கத் தயாராகிக் கொண்டிருந்தது. அதாவது தன் பிரியமான ஒரே செல்லக் குழந்தை

அனைவருக்கும் ஆனந்தம் அளிப்பது

நீலகிரி காபி

தலைமை ஆபீஸ் :
28 வெங்கடாஜல முதலி தெரு,
பி. டி. சென்னை.
கிளை : 82 காட்டுபிள்ளையார் கோயில் தெரு,
ஜி. டி. சென்னை.
— 89 பாண்டி பஸார், —
தியாகராயநகர், : : சென்னை—17.

நாகூரின் "அமரகவி"யில் பல வருஷங்களுக்குப் பிறகு பாகவதரும், கிருஷ்ணனும் சேர்ந்து நடிக்கும் ஒரு காட்சி

படு நோடாய் படுத்துக் கிடக்கிறான். மருந்து வாங்கிக் கொடுக்கவோ கையில் செல்லாக் காசு கூட இல்லை. தன் செல்வப் பிரபுவான கணவனோ, தன்னையும் தன் குழந்தையையும் முற்றிலும் திரஸ்கரித்து விட்டு வேறொரு வேசியிடம் போக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தான். குழந்தையோ—ஜன்னி கண்டு —'அப்பா அப்பா' என்று அலறுகிறான். முன்பு நடந்த அத்தனை அவமரியாதைகளையும் அறவே மறந்து, குழந்தையின் நிலையைச் சொல்லி, தன் கணவனைக் கூட்டிக்கொண்டு வர அந்த வேசி வீடு செல்கிறாள் அந்த தர்மபத்தினி.

கமலா, அசல் வேசியாக தன்னை 'மேக் அப்' செய்து கொண்டு தயாரானாள். கைலாசம் வந்தான். "கமலா, அன்று ஒத்திகையில் நடித்தாயே அது ரொம்பத் தரமா யிருந்தது. அது மாதிரியே நடித்துப் பேச வேண்டும். 'போடி கள்ளி, முதலைக் கண்ணீர் விட்டா பசப்புகிறாய். இப்போ அவரை அனுப்ப முடியாது, போ வெளியே' என்று அனுயாசமாகப் பேசினாயே, அது மாதிரியே இப்பொழுதும் பேசு" என்று செல்லமாக அவள் தாடையைக் கிள்ளப் போனான், உடனே 'மேக்கப்' கலைந்து விடப் போகிறது என்று அப்படிக் கிள்ளாமல் சிரித்துக் கொண்டே சென்று விட்டான்.

அப்பொழுதுதான் அன்றைய தினசரி வந்தது. கமலா சற்று காலப் போக்காகப் புரட்டினாள் அதை. அதில் ஆபீஸர் ராமசுப்பனுக்கு மேலும் ஒரு மாதம் லீவு 'எக்ஸ்டன்ஷன்' கொடுத்திருப்பதாகப் பிரசுரித்திருந்தது. அதைப் படித்தவுடனே அவள் மனம் ராமசுப்பனை நாடியது. 'ஆ! அவரை மறந்தே போனேனே!' என்று இலேசாகக் கண்களை மூடினாள். ராமசுப்பன் உருவம் எதிரில் தோன்றி நின்றது. அதே சமயத்தில் 'செட்'டில் எல்லாம் தயாரா யிருப்பதாகவும், உடனே வரும்படியும் அவசர அழைப்பு வர, கமலா புறப்பட்டு விட்டாள்.

அவளுக்குத்தான் நடித்து நடித்துப் பழக்கமான கட்டமாயிற்றே! "போடி, கள்ளி......" என்று அனுபாசமாகவே

பேசி நடித்தாள். "ஆ! நீ ஒரு பெண்ணா! கணவன், குழந்தை, என்ற பாசம் உனக்குக் கிஞ்சித்தேனும் கிடையாதா? உம்; கண்டவரின் மேல் கண்ணைச் சொடுக்கும் வேசி தானே நீ. உனக்கேது கணவன்? அந்தப் பாசம் எல்லாம் எப்படி வரும் உனக்கு?" என்று கண்ணீரும் கம்பலையுமாகப் பேசினாள் அந்த தர்ம பத்தினி.

அப்பொழுது கமலாவின் மனம் இருந்த நிலைக்கு, அந்த உணர்ச்சி ததும்பிய வார்த்தைகள், அவளது வாழ்க்கையின் அடி நாதத்தையே கௌவிக் கொண்டு விட்டது. உடனே தன் நிலை மறந்தாள்; தான் இருக்கும் இடத்தையும்மறந்தாள், கமலா. "ஆ! என்ன சொன்னாய்! எனக்கா கணவனில்லை! எனக்கா கணவனில்லை! எனக்கா கணவனில்லை!" என்று, தான் அந்தக் கட்டத்தில் பேச வேண்டியதையெல்லாம் அறவே மறந்து, ஏதேதோ பிதற்றினாள். யாவரும் அப்படியே ஸ்தம்பித்து விட்டார்கள். விடுவ்டென்று வெளியே வந்தாள் கமலா. அப்பொழுது அவளிருந்த நிலைக்கு, அவள் அண்ணனுக்குக் கூட அவளைத் தடுத்து நிறுத்தப் போதுமான தைரியமில்லை.

நேரே தன் பேபி ஆஸ்டின் காரைத் தானே ஓட்டிக் கொண்டு, தன் கணவனின் கடற்கரை பங்களா சென்றாள்.

அங்கு ராமசுப்பன் உருத் தெரியாமல் தாடி வளர்த்துக் கொண்டு, கண்களை மூடி பதமாசனத்திலிருந்தான். "நாதா, என்னை மன்னியுங்கள்!" என்று அவன் கால்களைக் கட்டிக் கொண்டு கதறி அழுதாள். அவள் அழுகையின் சப்தம் அந்தப் பங்களா முழுவதும் எதிரொலித்தது.

கண்ணை விழித்தான் ராமசுப்பன். "ஏன் கமலா! என்ன நடந்தது!" என்று அன்பாய் அரவணைத்துக் கொண்டான்.

அன்றிலிருந்தே ராமசுப்பனுடைய 'வாழ்க்கைப் புயல்' தீர்ந்து அமைதி ஏற்பட்டு விட்டது.

பிரபல சினிமா நக்ஷத்திரமாக ஆகவிருந்த கமலா, எவ்வித விளம்பரமுமில்லாத சீரிய 'குடும்ப நக்ஷத்திர'மானாள்.

‘குமாரி’யும், ‘ராஜேஸ்வரி’யும் வெளிவந்துவிட்டால் டைரெக்டர் ஆர். பத்மனாபனின் புகழ் கட்டிப் பிடிக்க முடியாததாகிவிடும்’’—என்று பத்மனாபனைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் கேமிராமேன மார்கோனி கூறுகிறாரோ? மாதுரி தேவியும் சிறுகளத்தூர் சாமாவும் சம்பந்தப்பட்ட ‘குமாரி’ ஷூட்டிங்கின் போது நடந்தது இந்தத் தமாஷ்.

சிங்கப்பிரான் சிரித்தார்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கட்டடத்தின் திறப்பு விழா இம்மாதம் 7ந் தேதியன்று காலையில் நடைபெற்றது. சோளிங்கபுரம் வக்கீல் எம். எக்ஞேஸ்வர தீக்ஷதர் கட்டடத்தைத் திறந்து வைத்தார். மாலையில், அந்த ஊர் மக்களின் பொதுக் கூட்டம் ஒன்று நடந்தது. அதற்கு அவ்வூர் சப்-ரிஜிஸ்தார் ஸ்ரீ. நாதமுனி நாயுடு அவர்கள் தலைமை வகித்தார். அவர் பேசுகையில், "கிருஸ்தவ முஸ்லீம் பள்ளிக்கூடங்களில் மத சம்பந்தமான விஷயங்கள் போதிக்கப் படுவதே போல், ஹிந்துப் பள்ளிக்கூடங்களிலும் ஆரம்ப வகுப்புகளிலேயே நம் மதம் சம்பந்தமான விஷயங்களை போதிக்கவேண்டும்" என்று விளக்கினர்.

பிறகு, நம் "குண்டூசி" ஆசிரியர், சோளிங்கபுரம் ஏ. பி. எம். ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீ. ஜான் துரைராஜ், ஸ்ரீவெங்கட வரதய்யங்கார் முதலியோர் ஸ்ரீ. நாராயணய்யரின் தர்ம கைங்கரியத்தைப் பாராட்டிப் பேசினர்கள். ஸ்ரீ. கே. என். விஸ்வநாதன் வந்தனேபசாரம் கூற, இந்த விழா இனிது முடிவுற்றது.

பிரபல நடிகர் தியாகராஜ பாகவதருக்கு சோளிங்க பிரானிடம் அபாரமான பக்தி உண்டு. இது காரணமாக, அவர் அடிக்கடி அம் மலைக்குச் சென்று விட்டு, வரும் போது, மலை அடிவாரத்தில் உள்ள இந்தப் பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்து, பிள்ளைகளுக்கு தின்டண்டங்களை வழங்கிவிட்டு வரத் தவறுவதில்லை. இந்தப் பள்ளிக்கு அவர் தம்மாலான உதவிகளைச் செய்வதாக வாக்களித்திருக்கிறார்

பாகவதரைப் போலவே இதர நக்ஷத்திரங்களுக்கும், பட முதலாளிகளுக்கும், மற்ற தனவந்தர்களுக்கும் தான தருமங்கள் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்கக் கூடும், ஆனல் அவர்கள் அதை எப்படிச் செய்வதென்று அறியாமலும் இருக்கக்கூடும். இனிமேல் அந்தக் கவலை வேண்டியதில்லை. அரக்கோணத்திலுள்ள பி. வி. ராஜன் பொடி கம்பெனிக்குத் தங்கள் நன்கொடைகளை அனுப்பி விட்டால் போதும். ஸ்ரீ. ஐயர் சீக்கிரத்திலேயே வடாற்காடு ஜில்லா பூராவிலுமே பள்ளிக் கூடங்களாய் நிரப்பிவிடுவார் என்பது நிச்சயம். —"நிழல்"

நீங்கள் படித்தீர்களா?

பிரபல எழுத்தாளர்

'எல்லார்வி' எழுதிய

வாழ்க்கைச் சுழல்

அற்புத நாவல். 180 பக்கங்கள். கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜ.வின் முன்னுரையுடன் கூடியது.

விலை 2 ரூபாய்

உள்ளமுருக்கும் அற்புத நவீனம்!

பெண் இதயம்

ஜி. எஸ். மணி எழுதிய நாவல்!

விலை 12 அணு

வியாபாரிகளுக்கு 25% கமிஷன்.

வெண்ணிலா வெளியீடு

தபால் பெட்டி 1793. :: சென்னை-1.

கதம்ப நிகழ்ச்சிகள்

சென்ற மாதம் சென்னையில் ஆரம்பிக்கப்பட்ட, சக்திவேல் நாடக சபையினர், இம்மாதம் 9-ம் தேதி ஒரு கதம்ப நிகழ்ச்சியை நடத்தினர்கள். இன்னிசை, நடனம், நாடகம், ஆகியவை நடைபெற்றன. அன்றைய நிகழ்ச்சியில் ஸி. ஆர். ராஜகுமாரி, உமா சகோதரிகள் சந்திரவதன, ஜிக்கி, டி, வஸந்தா ஆகியோர் பங்கெடுத்துக் கொண்டனர். இறுதியில் நடைபெற்ற ("வேலவன்" எழுதிய) "தர்க்காபஹரணம்" குட்டி நாடகம் நன்ருக நடிக்கப்பட்டது.

திருமூர்த்தி பஞ்சாங்கம்

ஸ்ரீ நந்தன வருஷத்திற்கான திருமூர்த்தி பஞ்சாகம் கிடைக்கப் பெற்ளுேம். பஞ்சாங்கம் கவர்ச்சிகரமாய் இருக்கிறது. இதை வெளிவிட்டவர் கா. சு. ஸ்ரீனிவாஸன். விலை 7 அணு. கிடைக்குமிடம்: சுகுணு பப்ளிஷிங் ஹவுஸ், 60 ஈஸ்வரன் கோவில் தெரு, சென்னை-17.

ஜெமினியின் அடுத்த சித்திரம்
மூன்று பிள்ளைகள்
ஒரு தாய் வயிற்றில் பிறந்தும் மூவரும் வெவ்வேறு விதம், - வெவ்வேறு குணம். ஆயினும் தாயின் பாசம் என்னும் உன்னதச் சரடால் ஒன்றுபட்ட குடும்பத்தின சித்திரம்.
விரைவில் வருகிறது...

திரையில் பிரபல ஒரிஸா ஆலயம்

கல்கத்தாவில், சர்வதேச பிலிம் விழா நடைபெற்ற சமயம் பல தியேட்டர்களில், பல தேசத்திய படங்கள் திரையிடப் பட்டன. இவை தவிர, 'ஈடன் கார்டன்ஸ்' என்ற இடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, பிலிம் கண்காக்ஷியில், பல அருமையான டாக்குமென்டரிப் படங்களும் திரையிடப் பட்டன. பிரபலமான டன்லப் ரப்பர் கம்பெனியாரின் முயற்சியில் டாக்குமென்டரி படங்களைத் திரையிடுவதற்கென பிரத்யேகமாய் அமைக்கப்பட்டிருந்த "டன்லப்பில்லோ" என்ற குட்டித் தியேட்டர் குறிப்பிடத்தக்கது.

தியேட்டரின் உள்ளே உட்காருவதற்கு 'டன்லப்பில்லோ' மெத்தைகள் அமைத்த நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. டன்லப் கம்பெனியின் சிறந்த தொழிலாளிகள் தயாரித்து வரும் டன்லப் பில்லோ நாற்காலிகள் மிக நேர்த்தியாக உள்ளன. இவைகள் காற்றோட்டத்துடன் மிகவும் சுகமாக இருப்பதுடன், மூட்டைப் பூச்சிகளோ, அழுக்கோ அடைய இடம் இல்லாமல் இருக்கின்றன. இந்தத் தியேட்டரில் பிப்ரவரி மாதம் 29-ம் தேதி முதல் மார்ச் மாதம் 16-ம் தேதி வரை டன்லப் கம்பெனியாரின் ஏற்பாட்டில் பதினொரு டாக்குமென்டரி படங்கள் தினசரி மூன்று காக்ஷிகள் விதம் திரையிடப்பட்டன.

அப்படித் திரையிடப்பட்ட டாக்குமென்டரி படங்களில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்க ஒன்று "கொனார்கா" என்ற டாக்குமென்டரி படமாகும். இது ஒரிஸாவில் அமைந்துள்ள சூரிய பகவானின் ஆலயத்தைப் பற்றிய டாக்குமென்டரி படமாகும். பல பகுதிகள் நாசமாகி விட்டபோதிலும் இக்கோயில் இந்தியாவின் பழம் பெருமையான சிற்பத் திறனை விளக்குவதாக



கல்கத்தாவில் நடந்த சர்வதேச பில்ம் விழாவுக்கென பிரபல டன்லப் டயர் கம்பெனியார் அழகாக அமைத்திருந்த "டன்லப்பில்லோ" தியேட்டரின் உட்புறக்காட்சி

இருக்கிறது. "நதி" என்ற ஹாலிவுட் படத்தின் ஒளிப் பதிவாளரான க்ளாட் ரினுயர், பார்ப்பவர் மனதில் சிற்பத் திறன் நன்ருகப் பதியும்படியான முறையில் படமாக்கி யிருக்கிருர்.

மற்ற டாக்குமென்டரி படங்களில் மோட்டார் பந்தயம் பற்றிய "என்டியூரன்ஸ்" என்ற படமும் குறிப்பிடத் தக்கது. சினிமா உலகிற்கு டன்லப் கம்பெனியார் செய்துள்ள சேவையை அனைவரும் பாராட்டினுர்கள்.

ஹாஸ்டல் தினம்

ஒய். எம். ஜ. ஏ. யின் மயிலாப்பூர், கிளை ஸ்தாபனத்தார் தங்கள் ஹாஸ்டல் தினத்தை இம்மாதம் 2-ம் தேதி பி. வி. செரியன் தலைமையில் கொண்டாடினுர்கள். அது சமயம், சங்கத்தின் கலைக் கழகத்தினரால், வி. எஸ். விஸ்வனுதன் எழுதிய "இரும்பும் பித்தளையும்" என்ற குட்டி நாடகம் நடிக்கப்பட்டது. இம்மாதம் 8-ம் தேதி இதே ஹாஸ்டல் தினம், நீதிபதி கனம் ஏ. எஸ். பி. அய்யர் தலைமையில் கோகலே ஹாலில் நடைபெற்றது. அப்பொழுது வி. எஸ். விஸ்வனுதன் எழுதிய "பொன்னு" என்ற குட்டி நாடகம் நடைபெற்றது.

நாடகக் கலைஞர் சங்கம்

திருச்சியில், நாடகக் கலைஞர் சங்கம் என்ற ஒரு சங்கம் ஆரம்பமாகியுள்ளது. அவர்கள் தங்கள் சங்கத்தின் சார்பில் முதல் நாடகமாக "கழல்" என்ற நாடகத்தை இம்மாதம் 9-ம் தேதி திருச்சியில் நடித்தார்கள்.

மஹாலிங்கத்தின்மீது வழக்கு

நடிகர் டி. ஆர். மஹாலிங்கத்தின்மீது, அவர் லைஸென்ஸின்றி ரிவால்வர் வைத்திருந்ததாக ஒரு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. குற்றப் பத்திரிகையில், 'அவர் கடந்த ஜனவரி மாதம் முதல் பிப்ரவரி 8-ம்தேதிவரை, ஒரு ரிவால்வரைலைஸென்ஸின்றி வைத்திருந்ததாக'க் குறிப்பிடப் பட்டுள்ளது. இம் மாதம் 10-ம் தேதிக்கு விசாரணைக்கு வந்த இந்த வழக்கு இம் மாதம் 20-ம் தேதிக்கு ஒத்திப் போடப் பட்டுள்ளது.

இணையற்ற இரு பொக்கிஷங்கள்!

சினிமா ரஸிகர்கள் அனைவரும் வாங்கிப் படித்து, வைத்துக் காக்கவேண்டிய ஆதாரமான புஸ்தகங்கள்.

"குண்டூசி" எழுதியவை

நட்சத்திர மாலை - 1	ஒவ்வொரு புஸ்தகத்திலும் 21 பிரபல நக்ஷத்திரங்களின் வாழ்க்கை வரலாறுகள், அவர்களிடமே கேட்டு எழுதப்பட்டுள்ளன	நட்சத்திர மாலை - 2
விலை ரூ. 2தான்		விலை ரூ. 2தான்

குறைந்த விலையில் அதிக விஷயங்கள் அடங்கிய வாழ்க்கை வர்ணனைப் புத்தகங்கள் இவைதான்.

பல்லாயிரம் பேர்கள் படித்துவிட்டனர்! நீங்களும் படியுங்கள்!

ஒவ்வொரு புஸ்தகத்திற்கும் விலையுடன் தபால் சார்ஜ் 6 அணு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் செய்யவும். வி. பி. பி. கிடையாது.

"குண்டூசி" காரியாலயம்

26, கிடங்குத் தெரு :: சென்னை-1

பிரம்ம லோகம்

பூங்கோதை

அஞ்சலி பிக்சர்ஸாரது "பூங்கோதை" தமிழ்ப் படம், மே மாத இறுதியில் திரையிடப் படுமெனத் தெரிகிறது. அஞ்சலி தேவி, நாகேஸ்வர ராவ், இருவர் பிரதம பாகங்களில் நடிக்கும் படம் இது. இப் படத்தின் ஒரு பகுதியை நான் பார்க்க நேர்ந்தது. அஞ்சலி தேவி பிரமாதமாக நடித்திருக்கிறார். இப் படத்தின் விநியோக உரிமையை நேஷனல் பிக்சர்ஸார் வாங்கியிருக்கிறார்கள். இதே கதை "பரதேசி" என்றபெயரில் தெலுங்கில் அடுத்த மாதம் ஆந்திராவில் திரையிடப்படுமாம்.

மூன்று பிள்ளைகள்

ஏப்ரல் மாதம் 11-ம் தேதி ஜெமினியின் "மூன்று பிள்ளைகள்" தமிழ் நாடெங்கும் திக்விஜயத்திற்குக் கிளம்பி விடுவானும். தாய்மையின் பெருமையையும், அருமையையும் கருத்தாகக் கொண்ட உணர்ச்சி மிக்க கதையாக இருக்குமாம். மூன்று பிள்ளைகளாக, ராதா, ஸ்ரீராம், கணேசன் மூவரும் நடிக்கின்றனர். முறையே அவர்களின் மனைவியராக, எம். எஸ். சுந்தரிபாய், சூர்யப்பிரபா, குமாரி வனஜா ஆகியோர் நடிக்கின்றனர். பிள்ளைகளின் பெற்றோராக கண்ணாம்பாவும், நாகேந்திர ராவும் நடிக்கின்றனர். நாகேந்திர ராவ்தான் இப் படத்தின் டைரெக்டர்.

ராணி

தமிழ் வருஷப் பிறப்பன்று வெளிவரக்கூடிய படங்களில் ஜுபிடரின் "ராணி" ஒன்றாக இருக்கும். இந்தப் படத்தில் நாடோடிப் பெண்ணாக பானுமதியும், அவள் காதலனாக பாலசந்தரும், அவர்களது வைரியான கொள்ளைக் கூட்டத்துத் தலைவனாக ராஜா வஹாப் காஷ்மீரியும் நடிக்கின்றனர். மற்றும் இப் படத்தில் எம். எஸ். பாக்கியம், முஸ்தாபா ஆகியோரும் நடிக்கின்றனர். டைரெக்டர் பிரஸாத் படத்தை நல்ல முறையில் கொண்டு போயிருக்கிறாராம். நூதன மெட்டுகளில் சில இனிய பாட்டுகளும், பானுமதியின் கவர்ச்சிகரமான சில நடனங்களும் படத்தில் சிறப்பாக அமைந்திருக்கின்றனவாம்.

புயல்

பெலிகன் பிக்சர்ஸாரது "புயல்" கோவையில் படமாகி வருகிறது. படத்தின் பிரதம பாகங்களில் எம். வி. ராஜம்மா, ஜி. எம். பஷீர், ராம்சிங் ஆகியோர் நடிக்கின்றனர். "கர்மயோகி" வசனங்கள்எழுதியுள்ள இப் படத்தை ஜி. விஸ்வனாதன் டைரெக்ட் செய்து வருகிறார்.

ஜெனோவா

சந்திரா பிக்சர்ஸாரின் "ஜெனோவா" படப் பிடிப்பு நியூடோனில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழ்-மலையாளம் இரு பாஷைகளிலும் இந்தக் கதை படங்களாகி வருகிறது. பி. எஸ். சரோஜா, எம். ஜி. ராமச்சந்திரன், வீரப்பா, கேசவன், உமா சகோதரிகள் முதலியோர் நடிக்கும் இப்படத்தை நாகூர் டைரெக்ட் செய்து வருகிறார். டி. எஸ். துரைராஜ், டி. வி. சேதுராமன், எம். எஸ். எஸ். பாக்கியம் கோஷ்டியின் ஹாஸ்யத்தைப் படத்தில் சேர்க்கவும் முயற்சிகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. தமிழ்ப் படத்தின் வசனங்களை "சுரதா" எழுதியுள்ளார்.

கல்யாணம் பண்ணிப் பார்

விஜயாவின் "கல்யாணம் பண்ணிப் பார்", தமிழ்ப் பட உலகிலேயே ஒரு புரட்சியை உண்டுபண்ணிவிடக் கூடிய படமாக இருக்குமாம். ஆரம்பம் முதல் கடைசிவரை ஒரே தமாஷ் மயமாக இருக்குமாம். ராமராவ், ஜி வரலக்ஷ்மி, டி. என். மீனாக்ஷி இப்படியாகப் பலர் நடிக்கும் இப் படம் அடுத்த மாதமேகூட திரையிடத் தயாராகி விடுமாம். நாகிரெட்டியின் மேற்பார்வையில், பிரஸாத் டைரெக்ஷனில் இப் படம் உருவாகி வருகிறது. வசனம், பாட்டு இவைகளை தஞ்சை ராமய்யாதாஸ் எழுதியிருக்கிறார்,

சின்ன துரை

எம். எஸ். பிக்சர்ஸின் வெளியீடான "சின்ன துரை" ஜூன்மாத ஆரம்பத்தில் திரையிடப்படலாம் என்று தெரிகிறது. முக்கால் பகுதிக்குமேல் படம் தயாராகி விட்டதாம். மஹாலிங்கம் இப் படத்தில் பல விசித்திரமான

உடைகளில் காட்சி அளிப்பாரென்று தெரிகிறது. மற்றும் வரலக்ஷ்மி, ஜி. சகுந்தலா, எஸ். ஆர். லக்ஷ்மி, சந்திரபாபு இப்படிப் பலர் இப் படத்தில் நடிக்கின்றனர். மஹாலிங்கமே இப் படத்தை டைரெக்ட் செய்து வருகிறார்.

செல்லப் பிள்ளை

ஏவி. எம். ஸ்டுடியோவில் அவர்களது "செல்லப் பிள்ளை" தொடர்ந்து உறுப்பெற்று வருகிறது. ப. நீலகண்டன் எழுதியுள்ள இதே கதை "வதிணு" என்ற பெயரில் தெலுங்குப் படமாகவும் தயாராகிறதாம். கே. ஆர். ராமசாமி, கண்ணும்பா, பி. ஆர். பந்துலு இப்படியாகப் பலர் நடிக்கின்றனர் இப் படத்தில்.

வேலைக்காரன்

வள்ளி புரொடக்ஷன்ஸ் "வேலைக்காரன்" படம் சீக்கிரமே வெளியிடப்படுமாம். இப் படத்தில் மஹாலிங்கம், எஸ். வரலக்ஷ்மி, மாதுரி தேவி, பாலய்யா, வி. கே. ராமசாமி, கே. ஆர். செல்லம் மேனகா, டி. என். மீனாக்ஷி ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர் பி. வி. கிருஷ்ணய்யர்தான் இப் படத்தின் டைரெக்டர்.

ஆன்

டைரெக்டர் மெஹ்பூப்பின் தமிழாக்கப்பட்ட 'ஆன்" தமிழ்ப் படத்தின் இறுதி வேலைகள் லண்டன் நகரில் நடைபெற்று வருகின்றன. இப் படம் மே மாதத்தில் தமிழ் நாட்டின் பல நகரங்களில் திரையிட இருக்கிறது.

புது வாழ்வு

தியாகராஜ பாகவதரின் சொந்த முயற்சியான "புது வாழ்வு" படப்பிடிப்பு நியூடோனில் நடைபெற்று வருகிறது. படத்தில் பாகவதருடன்கூட மாதுரி தேவி பிரதம பாகத்தில் நடிக்கிறார். மற்றும், டி. எஸ். பாலய்யா, குமாரி துளசி, டி. எஸ். துரைராஜ் ஆகியோரும் இப் படத்தில் நடித்து வருகின்றனர். படம் நாகூரிடம் உதவி டைரெக்டராக இருந்த ரங்கநாதனின் டைரெக்ஷனில் தயாராகி வருகிறதாம்.

வஞ்சம்

ரோஹிணி பிக்சர்ஸாரது "வஞ்சம்" அவர்களது சொந்த ஸ்டுடியோவில் படமாகி வருகிறது. இது தமிழ், தெலுங்கு, ஹிந்தி மூன்று பாஷைகளிலும் படமாக்கப்பட்டு வருகிறது, இப் படத்தின் மூலம் டைரெக்டர் எச். எம். ரெட்டி பல புதிய முகங்களை அறிமுகப் படுத்தப் போகிறாராம்.

காடு

மாடர்ன் தியேட்டர்ஸில் தயாராகி வரும் "காடு" பல பாஷைப் படத்தின் வேலைகள்பெறுமளவு பூர்த்தியாகி விட்டதாம். வெகு சீக்கிரமே இப் படத்தைவெளியிட்டு விடவேண்டுமென்ற எண்ணத்துடன் டைரெக்டர் டி. ஆர். சுந்தரம், எல்லிஸ். ஆர். டங்கன் இருவரும் மும்முரமாக முனைந்திருக்கிறார்களாம்.

என் தங்கை

அசோகா பிக்சர்ஸின் "என் தங்கை" படப்பிடிப்பு முடிவடைந்து வருகிறதாம். படத்தின் பிரதம பாகங்களில் எம். ஜி. ராமச்சந்திரன், பி. எஸ். கோவிந்தன், நரஸிம்ம பாரதி, மாதுரி தேவி, சுசிலா ஆகியோர் நடித்து வருகின்றனர்.

யுவா பிக்சர்ஸார் தயாரித்துவரும் "சியாமளா" தமிழ்ப் படத்தில் இந்தப் பெண்கள் கூட்டத்தைச் சந்திக்கலாம்.

வாழ்க்கை வர்ணனை

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

கையில் காசில்லாததால், அவர் "நட, ராஜா, நட, ராஜா!" என்று மனதைத் தேற்றிக் கொண்டே கொச்சியிலிருந்து பொள்ளாச்சிக்கு நடந்தே சென்ருர்.

சம்பங்கியின் கம்பெனியில் இரண்டாம் தடவை சேர்ந்தது போலவே எஸ். டி. உலகின் கம்பெனியிலும் இரண்டாந் தடவையாய் சேர்ந்தார் நடராஜன். சில காலம் சென்றபின் அவர் அதிலிருந்து விலகி, டி. கே. கிருஷ்ண ஸ்வாமியின் "சக்தி நாடக சபா"வில் சேர்ந்தார். அவர்களது பிரபல "கவியின் கனவு" நாடகத்தில் நடராஜன் வியாக்கிர சிம்மனுக நடித்திருக்கிருர்.

சக்தி நாடக சபையில் அவருக்கு நல்ல வேஷம் கிடைத்த தென்ருலும் தகுந்த சம்பளம் கிடைக்கவில்லை. ஆதலால், அந்தக் கம்பெனி கோவையிலிருந்து திண்டுக்கல்லுக்குப் புறப்பட்டபோது நடராஜன், கூடச் செல்லாமல் கோவையிலேயே தங்கிவிட்டார். அந்த சமயத்தில், எஸ். டி. சுந்தரம் தம் "ஜீவகன்" படத் தயாரிப்பிற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். அப்படத்தில் புத்திசேனனுக நடிப்பதற்கு நடராஜனை அவர் ஒப்பந்தம் செய்து கொண்டார்.

சினிமாவில் தமக்கு மறுபடியும் சந்தர்ப்பம் கிட்டியதற்காக நடராஜன் மிகவும் சந்தோஷித்தார். ஆனல் இந்த சந்தோஷம் நீடிக்கவில்லை. "ஜீவகனி"ன் ஷூட்டிங் சரிவர நடைபெறவில்லை. அதனல் சலித்துப்போன நடராஜன் தேவி நாடக சபையில் சேர்ந்து, பட்டுக்கோட்டையில், "பணப் பேய்" என்ற நாடகத்தில் நடித்தார். ஒரே மாதத்தில் இந்தக் கம்பெனியிலிருந்து விலகி நடராஜன் கோவைக்கே வந்து சேர்ந்தார்.

ஒரு நாள், கோவை ராயல் ஹிந்து ஹோட்டலில் எஸ். வி. சுப்பய்யாவுடன் நடராஜன் இருந்து கொண்டிருந்த போது, ஜூபிடரின் மோட்டார் சுப்பய்யாவை அழைத்துப்போக வந்தது. நடராஜனும் சுப்பய்யாவும் ஸென்ட்ரல் ஸ்டுடியோவுக்கு அந்த மோட்டாரில் சென்றனர். இவர்கள் போன சமயத்தில் அங்கு "அபிமன்யு" படத்திற்கென நடிகர் தேர்தல் நடந்து வந்தது. சுப்பய்யாவின் பலத்த சிபார்சின் பேரில் நடராஜனும் பரீக்ஷிக்கப்பட்டார். மாதிரி மேக்கப் சோதனையில் நடராஜன் வெற்றி பெற்ருர். அது முதல் அவர் ஜூபிடரின் நிரந்தர நடிகர்களுள் ஒருவராக ஆகிவிட்டார். நடராஜனின் நிலையற்ற வாழ்க்கை அதன் பின்தான் ஒரே திசையை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது.

ஜூபிடர் பிக்சர்ஸார் நடராஜன் விஷயத்தில் நிறைய சிரத்தை எடுத்துக் கொண்டுள்ளனர். அவருக்குச் சின்னச் சின்ன நல்ல வேஷங்களை முதலில் கொடுத்து, பிறகு அவரைக் கதாநாயகனுகவும் ஆக்கிவைத்து விட்டனர். "அபிமன்யு" படத்திற்குப் பின்னர் அவர் "கிருஷ்ண விஜயம்", "மோஹினி", "வேலைக்காரி", "கன்னியின் காதலி", "மந்திரி குமாரி", "மர்மயோகி" (தமிழ், ஹிந்தி) ஆகிய ஏழு படங்களில் நான்கே வருஷங்களில் நடித்து முடித்தார்.

முந்தின மூன்று படங்களிலும் நடராஜனின் பேச்சில் (நாடக மேடை மாதிரியில்) கொஞ்சம் இழுப்பு காணப்பட்டது. "வேலைக்காரி"யிலோ இந்தக் குறை நீங்கிவிட்டது. ஜூபிடருக்கு நம்பிக்கை ஏற்படவே, அவர்கள் இவரை "கன்னியின் காதலி"யில் கதாநாயகனுவே நடிக்கச் செய்து விட்டனர். இப்படத்தில் பேச்சில் நாடகப் பாணி அநேகமாக மறைந்து விட்டதென்ருலும், நடிப்பில் நாடகச் சாயல் இருக்கவே செய்தது. பின்னர் அவர் நடித்த "மந்திரி குமாரி"யிலும், "மர்ம யோகி" (ஏக்த ராஜா—ஹிந்தி) ஆகிய படங்களில் அவர் வீரமாக நடிக்க முயன்றிருக்கிருர். கடைசியாக, நடராஜன் நடித்து வெளிவந்துள்ள படம் "கைதி" ஆகும். இப்படத்தில் அவரது நடிப்பு பாராட்டத் தக்கபடி அமைந்திருக்கிறது.

ஜூபிடரில் செய்து கொண்டிருந்த ஒப்பந்தம் முடிந்துவிட்டதால் தற்போது இதர படமுதலாளிகளின் படங்களிலும் அவர் நடித்து வருகிருர். "ஜமீன்தார்", "பெண் உள்ளம்", "இன்ஸ்பெக்டர்" (தமிழ், தெலுங்கு), "காதலி" (தமிழ்), "ரோகிணி" (தெலுங்கு) ஆகியவை அவர் தற்போது நடித்துவரும் படங்களாகும். "மனிதன்", "மனோகரா" ஆகிய

இரு படங்களில்கூட அவர் நடிப்பாக போலிருக்கிறது.

1919-ம் வருஷம் மார்ச் மாதம் 16-ம் தேதி பிறந்தவர் நடராஜன்' வாழ்க்கையின் சுவாரஸ்யமான முற்பகுதியை, அவர் கொடிய கஷ்டங்களுடன், மிகப் பொறுமையாகக் கழித்திருக்கிறார். அவரது பொறுமைக்கும், விடா முயற்சிக்கும் பரிசளிப்பதே போல் இப்பொழுது நடராஜனுக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது.

நடராஜனுக்கு சென்ற டிஸம்பர் மாதத்தில் தான் திருமணம் நடந்தேறியது. அபரஞ்சி என்பவரை அவர் தம் ஜாதி முறைப்படி திருமணம் செய்து கொண்டிருக்கிறார்.

நடராஜனின் தாய்ப் பாஷை தெலுங்கு. ஆனால், அவர் பள்ளியில் படித்ததெல்லாம் தமிழ் பாஷையில் தான். சுமாராகப் பாடவும், சீட்டு, கேரம் போர்டு முதலியவைகளை ஆடவும் தெரியும். அந்தக் காலத்தில் அவர் நாடக ரஸிகர்களைக் கவருவதற்கு நடிப்போடு கூடப் பாட்டையும் கையாண்டு வந்தார். ஆனால் அவர் சினிமாவில் நடிக்க முற்பட்ட பின்னரோ பாட்டை மூட்டை கட்டி வைத்துவிட்டு, தம் வெற்றிக்கு நடிப்பை மட்டுமே நம்பியிருக்கிறார்.

திடகாத்திரமான சரீரம், கறுப்பு நிறம், நடுத்தர உயரம், அரும்பு மீசை, அழகிய முகம், சாத்விகமான தோற்றம், நிதானமான பேச்சு, இந்த லக்ஷணங்கள் கூடியவர்தான் நடராஜன். நன்கு நடித்து "சிறந்த நடிகர்" என்று புகழ் பெற வேண்டுமென்ற ஆவல் அவரிடம் நிறையக் காணப்படுகிறது. அவர் சென்ற நான்கைந்து வருஷங்களில் புகழ் பெற்று வரும் வேகத்தைக் கவனித்தால், அவர் சீக்கிரமே நம் முன்னணி நக்ஷத்திரங்களில் ஒருவராய்த் திகழுவார் என்று நாம் நம்பிக்கையுடன் கூறலாம்.

இப்பொழுது பல ஊர்களில் வெற்றி முழக்கம் செய்துவரும் நாகூர் ஸினி புரொடக்ஷன்ஸின் "அமரகவி"யில் எம். ஜி. சக்ரபாணி 'மந்திராலோசனை' நடத்தும் காட்சி இது.

குண்டூசி

பிப்ரவரி 1952

3. பேபி நளினியின் பரத நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது.

4. "தி கிரேட்டஸ்ட் ஷோ ஆன் எர்த்" என்ற ஆங்கிலப் படத்தின் பத்திரிகைக் காட்சி, நியூ எல்பின்ஸ்டனில் நடைபெற்றது.

6. மயிலை, பைன் ஆர்ட்ஸ் சென்டரின் ஆரம்ப விழா நடைபெற்றது.

8. சென்னையில், சர்வ தேச பிலிம் விழா ஆரம்பமாயிற்று.

நரஸு ஸ்டுடியோவின் ஆரம்ப பூஜை விழா நடைபெற்றது.

நாராயணன் கம்பெனியின் "தாய் உள்ளம்" பத்திரிகைக் காட்சி காஸினோவில் நடந்தது.

9. ஸ்ரீமதி. ஆர். சௌந்தரத்தின் பரத நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது.

நாராயணன் கம்பெனியின் "தாய் உள்ளம்", நாகூர் சினி புரொடக்ஷன்ஸின் "அமர கவி" ஆகிய இரு படங்களும் சென்னையிலும் வெளியூர்களிலும் திரையிடப் பட்டன.

10. பிலிம் விழாவுக்கு வந்திருந்த ரஷ்யப் பிரதிநிதிகளுக்கு சென்னை கடற்கரையில் ஒரு வரவேற்பளிக்கப்பட்டது.

ரவீந்திரா நாடக சபாவின் "மானேஜர்" நாடகம் நடைபெற்றது.

11. விஜயா புரொடக்ஷன்ஸார், பிலிம் விழாவுக்கு வந்திருந்த பல நாட்டுப் பிரதிநிதிகளுக்கும் ஒரு விருந்தளித்தனர்.

12. பல சங்கங்களின் சார்பில், ராஜாஜி ஹாலில், சர்வதேச பிலிம் பிரதிநிதிகளுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

13. குமாரி மீராவின் பரத நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது.

ஸ்ரீ தேவி நாடக சபாவினர், "தம்பி" என்ற புதிய நாடகத்தை அரங்கேற்றினார்கள்.

16. சேவாஸ் ஸ்டேஜ் அண்ட் சர்வீஸார் "கண்கள்" என்ற நாடகத்தை நடித்தார்கள்.

19. நகர தண்ணீர்ப் பஞ்ச நிவாரணத்துக்காக ஸினி டெக்னீஷியன்கள் சங்கத்தார் ஒரு பண முடிப்பை சென்னை மேயரிடம் அளித்தார்கள்.

20. விநோத பிக்சர்ஸாரின் "சாந்தி" தெலுங்குப் படத்தின் பத்திரிகைக் காட்சி மினர்வாவில் நடைபெற்றது.

23. கிருஸ்தவக் கல்லூரி–கலைக் கழக சார்பில், பிரேமலதா–வஸந்தா இவர்களின் நடனம் நடைபெற்றது. குமாரி சரஸ்வதியின் பரத நாட்டிய அரங்கேற்றம் தஞ்சையில் நடைபெற்றது.

26. சைதாப்பேட்டை, திருமகள் டாக்கீஸ் புது நிர்வாகத்தின் கீழ் ஆரம்ப விழா நடைபெற்றது.

27. துருக்கி பத்திரிகாசிரியர் கோஷ்டிக்கு எஸ். எஸ். வாஸன் ஜெமினியில் ஒரு வரவேற்பளித்தார்.

பேபி புஷ்பாவின் பரத நாட்டிய அரங்கேற்றம், செங்கற்பட்டில் நடைபெற்றது.

Printed by S. Sriraman at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras—1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi), at 26, Godown St., Madras—1.

134133

ஹேரோடின்

ஜீவ சக்தி வாய்ந்த கூந்தல் தைலம்

தயாரிப்பவர்கள் :

கர்னாட்டிக் கெமிகல் வொர்க்ஸ்

சென்னை-1.

சென்னை ஏஜண்டுகள் :

கோல்டுவின் & கோ, 50, பந்தர் தெருவு, சென்னை.

இலங்கை விநியோகஸ்தர்கள் :

மோஹன் & கோ, தபால் பெட்டி நெம்பர், 483—கொழும்பு.

Printed by P. Arunachalam at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. Gopa[l] (Gundoosi), at 25 Godown Street, Madras-1. Telephone 4316.

முயற்சி வீணுவதை

தடுக்கலாம்

உங்களுக்கு தேவையான அச்சு வேலை
தீர ஆலோசித்துத் திட்டத்துடன் செ
களானல், குறைந்த செலவில் நி
பலனை அடையலாம்.

அழகாக அச்சடிப்பது ஒரு தனி
அதற்கு நீண்ட நாள் அனுபவமும்
கமும் அவசியம். பல வருஷங்களா
கள் நானவித அச்சு வேலைகளைச்
நல்ல அநுபவம் பெற்றுள்ளோம்.
கண்டபடி முயற்சி செய்து நஷ்டம்
வதற்குப் பதில், எங்கள் அநுபவத்
குறைந்த செலவில் உபயோகித்து
கொண்டு மிகுந்த பயனடையலாம்.

போன் : 4037

தந்தி : "PRINTHOUSE"

கமர்ஷியல் பிரின்டிங்

அன் பப்ளிஷிங் ஹவுஸ்

45/46, அரண்மனைக்காரத் தெரு :: சென்னை-1.